

ஆண்டு அறிக்கை

2020

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

உள்ளடக்கம

1 அறிமுகம் 1

1.1 இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபை 1

1.2 அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பில் உள்ளடங்கும் அனர்த்தங்கள் 2

2 அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய சுருக்கமான அறிமுகம் 3

2.1 நோக்கு, பணி மற்றும் நோக்கம் 3

2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள 4

2.3 இடைக்கால முகாமைத்துவ குழு (ஐஆஊ) 4

2.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (யுஆஊ) 5

2.5 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு 6

2.6 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவினர் பற்றிய விபரம் 7

2.6.1 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு 7

2.7 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகள் பற்றிய பகுப்பாய்வு 8

2.7.1 அனர்த்தங்களின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல் - 2020 8

3 தேசிய மட்டத்திலான முக்கிய செயற்பாடுகள 13

3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துததல் 13

3.2 பல்இடர் அனர்த்த அபாயத்தை தணித்தல் பற்றிய சர்வதேச மாநாடு (ஆர்நுறு 2020) 13

3.3 சர்வதேச மாநாட்டுடன் ஒருங்கிணைந்ததாக நடாத்திய சர்வதேச மட்டத்திலான சித்திரப் போட்டிகள் 14

3.4 தேசிய மட்டத்திலான வேலைத்திட்டங்களுக்கான வழிகாட்டல்களைத் தயால் செய்தல் 16

3.5 கொவிட் 19 (ஊழஎனை 19) வைரசினை ஒழித்தல் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பங்களிப்பு 17

4 2020 ஆம் ஆண்டில் தொழிநுட்ப துறை கண்டுள்ள தேர்ச்சி 18

4.1 முன்ஆயத்த திட்டமிடல் பிரிவு 19

4.1.1 மாவட்ட மட்டத்திலான முன்ஆயத்த திட்டங்கள் 19

4.1.2 மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் 20

4.1.3 அனர்த்த முன்ஆயத்தங்களுக்கான பதிலிருக்கும் திட்டங்கள் 20

4.1.4 அனர்த்தப் பிரதேசங்களில் விளம்பர பதாதைகளை பொருத்துதல் 20

4.1.5 புரவி சூறாவளிக்கு தயாராதல் 21

4.1.6 தேசிய சுனாமி ஒத்திகை வேலைத்திட்டம் - ஐழுறுயஎந 20 21

4.1.7 பருவநிலை முன்ஆயத்த நிகழ்ச்சித்திட்டங்கள் 22

4.1.8 பாடசாலை அனர்த்த முன்ஆயத்த் திட்டங்களை தயார் செய்தல 23

4.2 பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு 23

4.2.1 தேசிய மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள 24

4.2.2 முப்படையினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஏனைய பங்காளி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் 25

	4.2.3	மாவட்டரீதியில் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம்	26
	4.2.4	மாவட்ட மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புர்வூட்டல் வேலைத்திட்டங்கள்	30
	4.2.5	தேசிய பாதுகாப்பு தின நிகழ்ச்சித்திட்டங்கள்	32
	4.2.6	பணியாட்குழுவினரின் கொள்திறன் விருத்தி வேலைத்திட்டங்கள்	33
4.3		தணித்தல், ஆராய்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு	35
	4.3.1	பிரிவினால் மேற்கொள்ளப்படும் ஏனைய செயற்பாடுகள	35
	4.3.2	2020 ஆம் ஆண்டு தேர்ச்சி	36
	4.3.3	அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல	37
	4.3.4	புதிய கருத்திட்டங்கள	38
	4.3.5	கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பங்கள்	38
	4.3.6	அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்	39
	4.3.7	அனர்த்த அபாய மதிப்பீடு	40
	4.3.8	அனர்த்தங்களினாலான இழப்புகள் மற்றும் பாதிப்புக்கள் குறித்து மதிப்பீடு செய்தல்	43
	4.3.9	னுநளஎைநவெயச தரவுக்களஞ்சியம்	43
	4.3.10	சளைமகெழ அபாய தகவல் இணையத்தளம் (சளைமகெழ றநடி ிழவயட)	44
	4.3.11	மாவட்ட மட்டத்தில் பொதுமக்களின் முறையீடுகள், கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் கருத்தாய்வுகளுக்கு பதிலிருத்தல்	46
	4.3.12	ஏனைய கருத்திட்டங்கள்	46
4.4		அவசர நடவடிக்கை நிலையம் (நுஅநசபநஎல ழிநசயவழைளெ னுஎைளைழைஎ)	47
	4.4.1	2020 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்தங்கள் மற்றுப் மேற்கொள்ளப்பட்டுள்ள அவசர நடவடிக்கைகள்	47
	4.4.2	முன்அறிவித்தல்கள	53
	4.4.3	அழைப்புக்கூடம்	53
	4.4.4	அவசர நடவடிக்கை பிரிவினால் மேற்கொள்ளப்படும் ஏனைய பணிகள	55
4.5		நிதிப் பிரிவு	58
	4.5.1	2020 டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலான நிதித் தேர்ச்சி	58
5		2020 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த பிரிவின் கீழான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	90

1. அறிமுகம்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்துக்கான முக்கிய நிறுவனமாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் திகழ்கின்றது. குறிப்பிட்ட சகல பங்குதார்களினதும் ஒத்துழைப்புடன் அனர்த்தங்களை தணிப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான வேலைத்திட்டங்களை ஒருங்கிணைக்கும் மற்றும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் கீழ் இயங்குமொரு நிறுவனமாக, 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் 8வது பிரிவின் பிரகாரம் அனர்த் முகாத்துவ நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய கொள்கைகளை தயார் செய்வதன் வழியாக செயன்நுணுக்க வழிகாட்டலை வழங்கும் பணியானது, இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், பொது நிருவாக மற்றும் அனர்த் முகாமைத்துவ அமைச்சானது அதற்கான வழிகாட்டலை மேற்கொள்கின்றது. பதிலிருப்பினை அடிப்படையாகக் கொண்ட பொறிமுறையினின்றி விலகி, முற்போக்கானதொரு அணுகுமுறையை அடைவதற்கான கொள்கைரீதியான மாற்றலுக்காக, இலங்கையில் இடர் முகாமைத்துவத்தை ஒட்டுமொத்தமாக உள்ளடக்கும் இடர் அபாயத்தை தணிக்கும் வேலைத்திட்டங்களுக்கான பணிச்சட்டகமாக 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இச்சட்டம் அமைந்துள்ளது.


இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முக்கிய பணிகளாக, அனர்த்தங்களைத் தணித்தல், முன்ஆயத்த திட்டங்களைத் தயார் செய்தல், பொதுமக்களை விழிப்புணர்வூட்டுதல், அபாயத்துக்கு முகம் கொடுத்துள்ள மக்களுக்கு அபாய முன்னெச்சரிச்சரிக்கைகளை வழங்குதல், அவசரநிலைமைகளின் போதான அவசர நடவடிக்கைகள் மற்றும் ஏனைய முக்கிய நிறுவனங்களுடன் இணைந்த நிவாரணங்கள் மற்றும் இடருக்குப் பின்னரான முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. பிரதேச மட்டத்திலான இடர் அபாய நிலைமைகளை தணிக்கும் நடவடிக்கைகளை சகல மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு அமைக்கப்பட்டுள்ளது.

1.1 இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபை

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் குறிப்பிடப்படும் சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமைவாக இடர் முகாத்துவத்துக்கான தேசிய சபையானது 2005ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டுள்ளது. இது அனர்த்த முகாமைத்துவத்தின் முக்கிய நிலையமாகத் திகழ்வதுடன், இது அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமரின் உபதலைமைத்துவத்துடனான உயர் மட்டத்திலான சகல அமைச்சுக்களினதும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளதொரு நிறுவனமாகும். அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் ஏனைய அங்கத்தவர்களாக சட்டத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள கௌரவ அமைச்சர்கள், மாகாண முதலமைச்சர்கள் (முதலமைச்சருக்கு சமூகமளிக்க முடியாதவிடத்து அம்மாகாண சபையின்

ஆளுநர்) மற்றும் பாராளுமன்றத்தின் எதிர்கட்சி உறுப்பினர்கள் ஐவரை உள்ளடக்கியதொரு குழுவினர் காணப்படுகின்றனர். (குறிப்பு 1.1)

இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் கூட்டநடப்பெண்



குறிப்பு 1.1: தேசிய சபையின் கூட்டிணைப்பு

1.2 அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பில் உள்ளடங்கும் அனர்த்தங்கள்

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாத்துவத்தின் கீழ் கொள்ளப்படும் இடர்கள்,

- மண்சரிவு
- சூறாவளி
- வெள்ளம்
- வறட்சி
- தொழிநுட்ப அனர்த்தங்கள்
- சுனாமி
- பூமியதிர்ச்சி
- தொற்றுநோய்கள்
- வெடிப்புகள்
- வான் தாக்குதல்
- சிவில் அல்லது உள்ளக போராட்டங்கள்
- இரசாயன விபத்துக்கள்
- கதிர் தொடர்பிலான திடீர் நிலைமைகள்
- உள்ளக மற்றும் கடலிலான கசிவுகள் உள்ளிட்ட எண்ணெய்க் கசிவுகள்

- வான் இடர்கள்
- அணுசக்தி அனர்த்தங்கள்
- சமுத்திரட இடர்கள்
- நகர மற்றும் காடுகள் தீப்பிடித்தல்
- தீ
- கடலரிப்பு
- டொனாடோ, மின்னல் தாக்குதல் மற்றும் கடும் முழக்கத்துடனான சூறாவளி

2. அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய சுருக்கமான அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்பாக, ஏற்படக்கூடிய எந்தவொரு அனர்த்த நிலைமையினையும் வினைத்திறன்மிக்கதாக முகாமைத்துவம் செய்து பொதுமக்களது உயிர் மற்றும் சொத்துக்களைக் பாதுகாத்தவாறு பாதுகாப்பானதொரு சமூகத்தை உருவாக்குதல் அமைந்துள்ளது. இதற்காக பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஏழு பிரிவுகளைக் கொண்டதாக அனர்த்த முகாமைத்துமுவ செயன்முறை அமைந்துள்ளது. இதற்கேற்ப இதன் முக்கிய பிரிவுகள் பின்வருமாறாகும்.

1. அனர்த்த தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு
2. அனர்த்த முன்ஆயத்த மற்றும் திட்டமிடல் பிரிவு
3. பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு
4. அனர்த்த அவசர மற்றும் அபாய முன்னறிவித்தல் பிரிவு
5. மனித வளம் மற்றும் நிருவாகப் பிரிவு
6. நிதிப் பிரிவு
7. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்புக்களை நாடுபூராகவும் நடைமுறைப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் மாவட்ட அனர்த முகாமைத்துவ ஒருங்கிணைக்கு பிரிவுகள் சகல மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பொறிமுறை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நாட்டினுள் செயற்படுத்தப்படுகின்றது.

2.1 நோக்கு, பணி மற்றும் நோக்கம்

நோக்கு

இலங்கையில் பாதுகாப்பான சமுதாயமொன்றை ஏற்படுத்துவன் மூலம் நிலையான அபிவிருத்தியை அடைதல்

பணி

இயற்கை, தொழிநுட்பம் மற்றும் மனிதர்களின் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை சீராக முகாமைத்துவம் செய்வதன் மூலம் சமூகத்திலும் பொதுவாக குடும்ப அலகுகளிலும் பாதுகாப்பான கலாச்சரமொன்றை உருவாக்குவதல்.

நோக்கம்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சபைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மாவட்டங்கள், பிரதேச செயலகப் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஆகிய நாடளாவிய

நிருவாக கட்டமைப்பின் மூலம் பின்வரும் பணிகளை ஒருங்கிணைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்

- தேசிய கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமொன்றையும், தேசிய அவசர கால திட்டமொன்றையும் வகுத்தல்.
- அனர்த்தங்களை வரைபடங்களில் உள்ளடக்குதல் மற்றும் அனர்த்த பாதிப்புக்களை மதிப்பிடலும்
- பயிற்சி மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- முன்ஆயத்த திட்டங்களை தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவுதல் உட்பட அனர்த்தங்களின்போதான பதில் நடவடிக்கைகள் மற்றும் முன்ஆயத்தங்களைச் செய்தல்
- முன் அனர்த்த எச்சரிக்கைகளை விடுத்தல் மற்றும் அவற்றை பிரச்சாரம் செய்தல்
- அவசர கால நிலமைகளின்போதான கருமமாற்றல்களை முகாமைத்துதவம் செய்தல் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- நிவாரணப் பொருட்களைப் பகிர்ந்தளித்தல் உட்பட் அனர்த்தத்துக்குப் பின்னரான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அனர்த்தங்களைத் தணித்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்
- அனர்த்த ஆபத்துக்களைக்குறைத்தல் மற்றும் அதனை அபிவிருத்திப் பணிகளில் உள்ளடங்குதல்
- காலநிலை மாற்றங்களுடன் இசைந்து செல்லும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- உரிய நேரத்தில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தலும், அனர்த்த பாதிப்புக்களைக் குறைக்கும் பணிகள் தொடர்பாக அமைச்சுக்கள், அரச அதிகாரிகள், தாபனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்
- அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், அது தொடர்பான பதில் நடவடிக்கைகளை அனர்த்தங்களை அனர்த்தங்களின் பின்னர் வழமை நிலமைக்கு கொண்டு வருவதற்காக வெளிநாட்டு நன்கொடைகளை ஒருங்கிணைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்

2.3 இடைக்கால முகாமைத்துவ குழு (IMC)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் கருமமாற்றல் செயன்முறையானது இடைக்கால முகாமைத்துவ குழுவாகும். இது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தலைமையில் இடம்பெறுவதுடன், 2020ஆம் ஆண்டில் 3 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. .அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவ குழுவின் கூட்டநடப்பெண் பின்வருமாறாகும்.

அனர்த்த முகாமைத்துவ விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் - தலைவர்
தலைவர்
ஜெனரால் ஜீ.டீ.எச்.கமல் குணரத்ன (ஓய்வு) டபிள்யுடபிள்யுவீ ஆர்டபிள்யுபீ ஆர் எஸ்பீ யூஎஸ்பீ யூஎஸ்பீ என்டீசி பீஎஸ்சீ

புணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், மேஜர் ஜெனரால் - செயலாளர்
எஸ்.ரணசிங்க (ஓய்வு) ஆர்டபிள்யுபீ ஆயர்எஸ்பீ எம்எஸ்சீ என்டீயூ பீஎஸ்சீ

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதி - அங்கத்தவர்
ஏ.என்.அமரதுங்க, பணிப்பாளர்
அங்கத்தவர்

பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதி ஆர்.எம்.பீ.எஸ்.ரத்நாயக்க, மேலதிக செயலாளர்	-	அங்கத்தவர்
உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் பிரதிநிதி – அங்கத்தவர் எம்.ஏ.எஸ்.மஹேஷி, மேலதிக செயலாளர்	-	அங்கத்தவர்
புணிப்பாளர் நாயகத் , தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு, கலாநிதி ஆசிரி கருணாவர்தன	-	அங்கத்தவர்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் தலைமை அதிகாரி திரு.எச்.யூ.ஆர். பொன்சேக்கா	-	அங்கத்தவர்

2.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC)

2020 ஆம் ஆண்டு முதல் டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அங்கத்தவர்களின் கூட்டிணைப்பு பின்வருமாறாகும்.

திருமதி.ஏ.என்.அமரதுங்க – (தலைவர்)	-	பணிப்பாளர், திறைசேரி வரவு – செலவு திணைக்களம், பொதுத்திறைசேரி
மேஜர் ஜெனரால் எஸ்.ரணசிங்க (ஓய்வு) (செயலாளர்)	-	பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாதைத்துவ நிலையம்
திரு.ஆர்.எம்.பீ.எஸ். ரத்நாயக்க (அங்கத்தவர்) - மேலதிக செயலாளர் (பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் கொள்கைகள்), பாதுகாப்பு அமைச்சு	-	மேலதிக செயலளார் (பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் கொள்ளைகள்) பாதுகாப்பு அமைச்சு
திரு.எச்.யூ. ஆர்.பொன்சேக்க (அங்கத்தவர்) – தலைமை கணக்காளர், அனர்த்த முகாதைத்துவ பிரிவு	-	தலைமை கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ பிரிவு
திருமதி.கே.ஏ.எஸ். மஹேஷி (அங்கத்தவர்) – மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), உள்ளூராம்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு	-	மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) உள்ளூராட்சி மற்றும மாகாண சபைகள் அமைச்சு
திருமதி.ஏ.பீ.ஆர்.அமரகோன் (கண்காணிப்பு) கணக்காய்வு அதிகாரி, தேசிய கணக்காய்வு அலுவலகம்	-	கணக்காய்வு அதிகாதி, தேசிய கணக்காய்வு அலுவலகம்
திரு.ஜே.எச்.பீ.ஜயலத் (ஒருங்கிணைப்பாளர்) – உள்ளக கணக்காய்வாளர், அனர்த்த முகாமைத்துவ நிலையம்		உள்ளக கணக்காய்வு, அனர்த்த முகாமைத்துவ நிலையம்


தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் நிலையத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு மதிப்பீடு காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் குறித்து இதன்போது பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. முக்கியமாக உள்ளக கணக்காய்வாளரினால் 2020ஆம் ஆண்டுக்காக தயார் செய்யப்பட்டுள்ள இடர்அபாயத்தை அடிப்படையாகக் கொண்ட வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்துக்கு ஏற்ப, உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் நிறுவனத்தினக் கருமமாற்றல் செயன்முறை, கட்டுப்பாட்டு செயன்முறை மற்றும் அனர்த்த முகாமைத்துவ செயன்முறை தொடர்பில் காட்டப்பட்டள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் இக்குழுவில் தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் குறிக்கோளை அடைவதற்கு உதவும் வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கமைய நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல்காட்டப்படுள்ள விடயப்பொறுப்புக்கள, முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றிக்கைகளில் காட்டப்பட்டுள்ள ஆலோசனைகள், இலங்கை தரக்கட்டுப்பாடு மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப கணக்காய்வு மற்றும் முகாதைத்துவ

குழுவில் விடங்களை ஆய்ந்தறித்து, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நோக்கங்களை அடைவதமற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவத்துக்கு தேவையான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கணக்காய்வு உசாவல்கள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்படும் அவதானிப்புக்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் விதப்புரைகள் மீது நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் பிழை திருத்தங்களின் அளவுசார்தன்மை மற்றும் தரம் குறித்து இதன்போது மேலும் விடயங்கள் ஆய்ந்தறியப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2020ஆம் ஆண்டுக்கான 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை முறையாகவும் சரியாகவும் முன்னெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள் முகாமைத்துவத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துமுவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு ஏற்புடைத்ததாக இலங்கை வளங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியவாறு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள், வேலைத்திட்டங்கள் மற்றும் விடயப்பொறுப்புக்களின் முன்கூட்டி நிச்சயிக்கப்பட்டுள்ள நோக்கங்களை அடையும் நோக்கில், வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறன் மிக்கதமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சகல முகாமைத்துவ பிரிவினையும் மீளாய்வு செய்தல் மற்றும் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியை செலவிடுவதற்காக, அங்கீகாரம் பெறப்பட்டுள்ள காலகட்டத்துக்குள் குறிப்பிட்ட நோக்கங்கள் உண்மையாக அடையப்பட்டுள்ளனவா என்பதையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் மற்றும் திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு முன்னெடுக்கப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதல் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன், இப்பணிகளை எதிர்வரும் ஆண்டுகளிலும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் திட்டமிட்டுள்ளது.

2.5 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

குறிப்பு 2.1இல் காட்டப்பட்டுள்ளவாறு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நிறைவேற்றப்படும் பல்வேறு பணிகளையும் வேலைத்திட்டங்களையும கருத்தில் கொண்டு இந்நிறுவனக் கட்டமைப்பானது தயார் செய்யப்பட்டுள்ளது.



குறிப்பு 2.1: அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

2.6 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவினர் பற்றிய விபரம்

அட்டவணை 2.1: 2020.12.31ஆந் திகதியிலான பணியாட்குழுவினர் பற்றிய விபரம்

ஊழியர் விபரம்	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	மெய் ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	01	01	0
மேலதிக பணிப்பாளர் நாயகம்	01	01	0
பணிப்பாளர்	06	04	02
உள்ளக கணக்காய்வாளர்	01	01	0
பிரதி பணிப்பாளர்	18	0	18
உதவி பணிப்பாளர்	15	12	03
உதவி பணிப்பாளர் (மாவட்டம்)	25	24	01
கணக்கீட்டு உத்தியோகத்தர்	01	01	0
நிருவாக உத்தியோகத்தர்	01	0	01
பிரத்தியேக உதவியாளர்	01	0	01
விசாரணை உத்தியோகத்தர்	01	01	0
புவியியல் தரவு முறைமை பகுப்பாய்வாளர்	01	01	0
தரவு முறைமை பகுப்பாளர்	01	01	0
தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்	01	0	01
வலையமைப்பு நிருவாகி	01	0	01
நூல் நிலைய அதிபர்	01	0	01
அபிவிருத்தி உத்தியோகத்தர்	101	0	101
மொழிபெயர்ப்பாளர்	02	0	02
தகவல் தொழிநுட்ப உதவியாளர்	06	06	0
நிழற்புகைப்படக் கலைஞர்	01	01	0
தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர்	03	02	01
வானொலி இயக்குநர்	01	01	0
முகாமைத்துவ உதவியாளர் / அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	201	178	23
சாரதி	39	37	02
அலுவலக உதவியாளர்	35	33	02
மொத்தம்	**465**	**305**	**160**


2.6.1 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு

2.5.1.இந்தப் பிரிவு 25 மாவட்டங்களிலும் அமைந்துள்ளது. இந்த ஒவ்வொரு மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவுகளிலும் பதவியணியானது, உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்:றும்

சாரதிகளையும் உள்ளடக்கியிருக்கும். மாவட்டம் அனர்த்தங்களுக்கு உள்ளாகக் கூடிய சாத்திய நிலமைக்கேற்ப மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை வேறுபடும். ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்குமிடத்து உதவிப் பணிபாளர்கள் (மாவட்டம்) 25பேர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள், அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளிட்ட 113பேர், 25 மாவட்டங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளில் இராணுவத்தினர் மற்றும் விமானப் படையினர் இணைக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினரின் நிருவாகத்தின் கீழும் ஏனைய மாவட்ட அலகுகள் சிவில் உத்தியோகத்தர்களின் நிருவாகத்தின் கீழும் முன்னெடுக்கப்படுகின்றன.

களுத்துறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் மாவட்ட செயலகங்களில் நிறுவப்பட்டுள்ளன. பின்வரும் உருவப்படம் 2.2இல் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பொறிமுறை காட்டப்பட்டுள்ளது.



குறிப்பு 2.2: மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பொறிமுறை


2.7 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகள் பற்றிய பகுப்பாய்வு

2.7.1. அனர்த்தங்களின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல் - 2020


i. ஒட்டுமொத்த தாக்கம் - 2020

2020 ஆம் ஆண்டில் வறட்சி, வெள்ளம், மண்சரிவு, மண்படைகள் சரிதல் கடும் புயல், தீப்பிடித்தல், இடிமின்னல் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை சுமார் 784,933 ஆகும். வறட்சியினால் மாத்திரம் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை சுமார் 483,173 ஆகும். மேலும், வெள்ளம் காரணமாக சுமார் 121,236 பேரும், சூறாவளி காரணமாக


102,278 பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் காரணமாக உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை 37 என்பதுடன், 56பேர் காயமடைந்துள்ளனர். மேலும், 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் உயிரழப்புக்கள் மற்றும் காயமடைதல்களின் எண்ணிக்கை ஒப்பீட்டுரீதியில் குறைவடைந்தள்ளது.



குறிப்பு 2.3: அனர்த்தங்கள் காரணமாக இடம்பெற்றுள்ள உயிரிழப்புகள்



குறிப்பு 2.4: அனர்த்தம் காரணமாக நேர்ந்துள்ள உயிரிழப்புகள் மற்றும காயங்கள்




குறிப்பு 2.5: அனர்த்தங்களுக்கு உள்ளான நபர்களின் எண்ணிக்கை

குறிப்பு

அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்களின் புள்ளிவிபரங்களை முன்வைக்கையில் ஒட்டுமொத்த திரட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.


ii. வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் - 2020

2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வீடுகள் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ள சம்பவங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. இவற்றில் 16,755 வீடுகள் பகுதியளவிலும் 307 வீடுகள் முழுமையாகவும் பாதிக்கப்பட்டுள்ளன.




குறிப்பு 2.6: முழுமையான மற்றும் பகுதியளவிலான வீட்டு தேசங்கள்

2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மற்றும் மே மாதங்களில் அதிகளவிலான வீட்டு தேசங்கள் பதிவாகியுள்ளதுடன், பருவக்காற்று காரணமாக இடம்பெற்ற கடும் புயல் மற்றும் வெள்ள நிலைமைகள் இதற்கக் காரணமாக அமைந்துள்ளன. இந்த வீட்டு சேதங்கள் இரத்தினபுரி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளன.



குறிப்ப 2.7: வீடுகளுக்கு தேசங்கள் ஏற்பட்டுள்ள மாதங்கள்


2020 ஆம் ஆண்டினுள் அனர்த்தங்கள் காரணமாக இடம்பெற்றுள்ள வீட்டு சேதங்களைக் கருத்தில் கொள்கையில், சூறாவளி காரணமாக 2884 வீடுகள் பகுதியளவிலும் 103 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. மேலும், கடும் புயல் காரணமாக 1323 வீடுகள் பகுதியளவிலும், 80 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.




குறிப்பு 2.8: அனர்த்தங்களுக்கு ஏற்ப சேதமடைந்துள்ள வீடுகள்

iii. அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்கள்


மேற்குறிப்பிடப்பட்ட அனர்த்த நிலைமைகள் காரணமாக வீடுகள் சேதமடைந்துள்ள மாவட்டங்கள் பின்வருமாறாகுமென்பதுடன், யாழ்ப்பாணம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் குறிப்பிட்ட சேதங்கள் பதிவாகியுள்ளன.




குறிப்பு 2.9: வீடுகள் சேதமடைந்துள்ள மாவட்டங்கள்




குறிப்பு 2.10: அனர்த்தங்களினால் உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை



குறிப்பு 2.11: அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள்



குறிப்பு 2.12: வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள்



குறிப்பு 2.13: வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள்

3. தேசிய மட்டத்திலான முக்கிய செயற்பாடுகள்

3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துததல்

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்தும் பணியானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட திருத்தச் சட்டமூலமானது சட்டமா அதிபரின் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

3.2 பல்இடர் அனர்த்த அபாயத்தை தணித்தல் பற்றிய சர்வதேச மாநாடு (MHEW 2020)

அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான செந்தாய் சட்டகத்தை 2015 – 2030இல் நடைமுறைப்படுத்துவதில் ஒத்துழைப்பு நல்குவதற்காக ஆராய்ச்சி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்தை பரிமாற்றிக்கொள்வதற்காக பல்இடர் அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான சர்வதேச மாநாடானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அனர்த்த அபாயத்தை கட்டுப்படுத்துவதில் இதுவரையில் எட்டியுள்ள தேர்ச்சியை வெளிக்காட்டுவதற்கும் எதிர்காலத்தில் சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களை கருத்தில் கொள்வதற்கும் இதன் வழியாக எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மாநாடானது 2020 மார்ச் மாதம் 16 முதல் 18 வரையில் கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், Covid 19 உலகளாவிய தொற்றின் பரவுவுதல் காரணமாக (உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் ஏராளமான புலமையாளர்களின் பங்கேற்பில்) மாநாட்டை பிற்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய 2020 டிசெம்பர் 14ஆந் திகதி மதல் 16ஆந் திகதி வரையில் கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் Zoom தொழிநுட்பத்தின் மூலம் 40 நாடுகளின் பங்கேற்புடன் இந்த வைபவம் நடாத்தப்பட்டது.

சர்வதேச மாநாட்டின் நோக்கம்

- அனர்த்தங்களை தணித்தல், நிலையான அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றங்கள் பற்றிய உலகளாவிய சட்டகங்களுக்கு இசைவாக்கம் பெறுதல்.
- இலங்கை அனர்த்த முகாமைத்துவ துறையின் கொள்ளவு விருத்தி
- நவீன அபிவிருத்தி மற்றும் கொள்கைகளுக்கான விதப்புரைகளை பெற்றுக்கொள்ளுதல்.
- அனர்த்த அபாயத்தை தணிப்பதற்காக செந்தாய் சட்டகத்தை செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கும் முகமாக ஆராய்ச்சி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்தைப் பெற்றுக்கொள்ளுதலும் அதன் பயன்பாட்டை விருத்தி செய்வதற்காக கொழும்பு 2020 அனர்த்த அபாய தணித்தல் கூற்றை வெளியிடுதல் 2015 – 2030.

இந்மாநாட்டின் பிரதான தலைப்புகள்

தலைப்பு 1 – காலநிலை மாற்றங்கள் மற்றும் அபாய முன்னெச்சரிக்கை

தலைப்பு 2 – அனர்த்தங்களுக்கு ஆயத்தமாதல்

தலைப்பு 3 - அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான செந்தாய் சட்டகம் 2015 – 2030 / நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs)

தலைப்பு 4 - அபாயத்தை மாற்றுதல் / காப்புறுதி

தலைப்பு 5 - நவீனமயப்படுத்துதல்
தலைப்பு 6 - மிகவும் சிறந்த அபாய முன்னெச்சரிக்கைக்கான தொடர்பாடல்
தாலைப்பு 7 - அனர்த்த அபாயத்தை தணித்தல்
தலைப்பு 8 - சுகாதாரம்

நிதி வழங்கல் மற்றும் பங்களிப்பு

இந்த மாநாட்டுக்கான சகல செலவுகளும் அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பங்காளி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையம் எந்தவித செலவினையும் மேற்கொள்ளவில்லை.

அட்டவணை 3.1: நிதி வழங்கல் மற்றும் பங்களிப்பு

அமைப்பின் பெயர்	பங்களிப்பு
ஹடர்ஸ்வீல்ட் பல்கலைக்கழகம் - ஐக்கிய இராச்சியம்	பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்திற்கான செலவு (வைபவம், இணைப்பிதழ், உரிய பொருட்களை அச்சிடுதல்)
ஆசிய முன்ஆயத்த நிலையம் (ADPC)	இலங்கையின் அனர்த் அபாய முகாமைத்துவ ஒளிபரப்பு வீடியோ
ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு ஏஜன்சி (JICA)	மாநாடு, ஞாபகச்சின்னங்களை பொதியிடல், புகைப்படங்களை அச்சிடுதல்
உலக உணவுத் தாபனம் (WFP)	சித்திரப் போட்டி மற்றும் ஊடக ஒத்துழைப்பு
சிறுவர் நிதியம் (Child fund)	சித்திரப் போட்டி மற்றும் பகுதியளவிலான ஒத்துழைப்பு
World Vision	சித்திரப் போட்டி மற்றும் பகுதியளவிலான ஒத்துழைப்பு
ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் (UNDP)	சம்பவ முகாமைத்துவம்

3.3 சர்வதேச மாநாட்டுடன் ஒருங்கிணைந்ததாக நடாத்திய சர்வதேச மட்டத்திலான சித்திரப் போட்டிகள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 2020 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த சர்வதேச மாநாட்டுடன் ஒருங்கிணைந்ததாக நாட்டின் சகல பாடசாலைகளையும் உள்ளீர்த்தவாறு தேசிய மட்டத்திலான சித்திரப் போட்டியொன்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் கல்வி அமைச்சுடன் ஒருங்கிணைந்ததாக முன்னெடுக்கப்பட்டது. இச்சித்திரப் போட்டியை நடாத்துவதன் முக்கிய நோக்கமாக அமைந்துது யாதெனில், பாடசாலை மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினருக்கு அனர்த்தம் மற்றும் அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய நடைமுறையிசார் நிலைமைகள் மற்றும் அது பற்றிய அறிவு மற்றும் புரிந்துணர்வினையும் அனர்த்த அபாய முகாமைத்துவ செயன்முறையினுள் பாடசாலை மாணவர்கள், ஆசிரிகள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினரது பொறுப்பு யாதென்பதை புரியவைத்தலுமாகும்.

தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட இச்சித்திரப்போட்டியின்போது மாணவ மாணவியர்களது 1910 சித்திரங்களில் ஒரு தொகுதியிலிருந்து 25 சித்திரங்கள் வீதம் 100 படைப்புக்கள தெரிவு செய்யப்பட்டன. இரண்டாவது படிமுறையாக, இந்த 100 சித்திரங்களையும் வரைந்த மாணவ மாணவியர்கள் பத்தரமுல்லையில் அமைந்துள்ள " அபே கம" வளாகத்துக்கு அழைக்கப்பட்டு, நடுவர் சபை, கல்வி அமைச்சு மற்றும் அனர்த்த ˙முகாத்துவ நிலைய உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் மாணவர்களினால் சித்திரங்கள் வரையப்பட்டன. அவ்வாறு நடுவர் குழுவினர் முன்னிலையில் வரையப்பட்ட 100 சித்திரங்களில், ஒரு தொகுதியிலிருந்து 1.2,3,4,5 ஆகிய இடங்களில் 4 தொகுதியிலிருந்தும் 20 சித்திரங்களை தெரிவு செய்து, அதற்கேற்ப அவர்களுக்கு உரித்தான சான்றிதழ்கள், விருதுகள், பாடசாலை கருவிகள் உள்ளிட்ட பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. இத்தேசிய மட்டத்திலான சித்திரப்போட்டியில் 04 தங்கப்பதக்கங்களை முதலாம் இடம் பெற்ற 04 மாணவ மாணவியர்கள் பெற்றுக்கொண்டதுடன், இத்தங்க விருது வழங்கலானது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் மிகவும் குறைந்த எண்ணிக்கையானோரின் பங்கேற்பில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

_அனர்த்த அபாயத்தை தணிப்பது குறித்து பாடசாலை மாணவ மாணவியர்களது அறிவு மற்றும் கோட்பாட்டை விருத்தி செய்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட சித்திரப் போட்டி




பத்தரமுல்லை அபேகம வளாகத்தில் இரண்டாவது படிமுறையில் சித்திரம் வரைவதில் பங்கேற்ற 100 மாணவ மாணவியர்கள் சித்திரம் வரைவதில் ஈடுபடுதல்




அனர்த்த முகாமைத்துவ நிலைய கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற வெற்றிபெற்ற 20 மாணவ மாணவியர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் வைபவம்





தேசிய மட்டத்திலான சித்திரப்போட்டியில் 04 குழுக்களில் முதலாவது. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது என்ற வகையில் அந்தந்த குழுக்களில் சிறந்த சித்திரங்களை வரைந்த 20 மாணவ மாணவியர்களும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

3.4 தேசிய மட்டத்திலான வேலைத்திட்டங்களுக்கான வழிகாட்டல்களைத் தயால் செய்தல்


➢ 2020 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த.(உ/ தரம்) பரீட்சை நாடாத்தப்படும் காலகட்டத்தில் அவசர அனர்த்தமொன்று நேருமிடத்து அதற்கு பதிலிருப்பதற்கான திட்டங்களைத் தயார் செய்தல்.

2020 புலமைப்பரிசிலி பரீட்சை மற்றும் க.பொ.த. (உ/தரம்) பரீட்சை நடாத்தப்படும் காலகட்டத்தில் அவசர அனர்த்தமொன்று ஏற்படுமிடத்து, அதற்கு பதிலிருப்பதற்கான திட்டங்கள் தயார் செய்யப்பட்டன. அனர்த்தங்கள் பற்றிய வழிகாட்டல்களைத் தயார் செய்தவ்றாகன கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கு அமைய, சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய பங்காளி தரப்பினர்களின் ஆலோசனைகளுக்கு ஏற்ப வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு ஏற்ப, பரீட்சைகள் நடாத்தப்படும் காலகட்டத்தினுள் அவசர அனர்த்த நிலைமையொன்று ஏற்படும் பட்சத்தில், அதற்கு முகம் கொடுப்பதற்காக பதிலிருக்கும் திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி அணுசரணையானது அனர்த்த முகாமைத்துவத்துக்காபன ஆசிய பெசிபிக் அமைப்பினால் (APAD) மேற்கொள்ளப்பட்டது.





➢ 2020 பாராளுமன்ற தேர்தலுக்கான அனர்த்த பதிலிருப்பு திட்டமொன்றைத் தயார் செய்தல். 2020 பாராளுமன்ற தேர்தலுக்கான அனர்த்த பதிலிருப்பு திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையாளரது வேண்டுகோளுக்கு ஏற்ப, 2020 தேர்தல் நடாத்தப்படும் காலகட்டத்தினுள், அனர்த்தமொன்று ஏற்படும் பட்சத்தில், எந்தவித் சிரமமுமின்றி பொதுமக்களுக்கு வாக்களிப்பதற்காக 24 மணி நேரம் முழுவதும் தேர்தல் நடவடிக்கைகளை கலந்துரையாடுவதற்கானதொரு பதிலிருப்பு திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி அணுசரணையானது அனர்த்த முகாமைத்துவத்துக்கான ஆசிய பெசிபிக் அமைப்பினால் (APAD) மேற்கொள்ளப்பட்டது.



3.5 கொவிட் 19 (Covid 19) வைரசினை ஒழித்தல் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பங்களிப்பு

கொவிட் 19 தொற்று தொடர்பிலான தொடர்பாடல் கூடமாக அனர்த்த முகாமைத்துவ திலைக்களத்தின் 117 கூடமானது ஜனாதிபதி செயலணியின் கீழ் 2020 மார்ச் 17ஆந் திகதி பொதுமக்களுக்காக திறந்து விடப்பட்டதுடன், இது தொடர்ச்சியாக 24 மணி நேரம் முழுவதும் இயங்கியவாறு:, முப்படை ஆளணியினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவ குழுவினரை உள்ளடக்கிய குழுவினைக் கொண்டதாக இயங்குகிறது. 117 அழைப்பு அறையினால் கொவிட் தொற்றின் போது பின்வரும் சேவைகள் மக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

- மூன்று மாத காலப்பகுயில் 1,220,00 தொலைபேசி அழைப்புகள் பொதமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இந்த அனைத்து அழைப்புகளுக்கும் பதிலிருந்தவாறு, உரிய சகல தரப்பினரும் ஒருங்கிணைக்கப்பட்டார்கள். தொற்று நீக்கல் செயன்முறை தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல்களை உள்ளடக்கியதொரு அறிக்கை மருத்துவ பிரிவுகளுக்கு, இலங்கை பொலிஸாருக்கு மற்றும் கொவிட் 19 ஒருங்கிணைப்பு நிலையத்துக்கும் நாளாந்தம் வழங்கப்பட்டது.
- மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுகள், சுகாதார துறை, முப்படையினர் மற்றும் பொலிஸார், தொற்று நீக்கல் நிலையங்கள் மற்றும் குறிப்பிட்ட அனைத்து தரப்பினர்களுக்கும் முகக்கவசங்கள், உடற்கவசங்கள், கையுறைகள், கிருமிகொல்லி திரவங்கள், வெப்பமானி ஆகிவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- கொவிட் 19 தொற்றினை கட்டுப்படுத்துவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரங்கள், விளம்பரப்பதாதைகள் மற்றும் ஸ்டிக்கர்கள் தயார் செய்யப்பட்டு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன.
- கொவிட் 19 தொற்றினை கட்டுப்படுத்துவதற்காக சமூக ஊடகங்கள் ஊடாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன.

மேலும், தற்போது காணப்படும் கொவிட் 19 தொற்று காரணமாக, பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கேற்ப, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 150,000 சுவரொட்டிகள் தமிழ் மற்றும சிங்கள மொழியில் அச்சிடப்பட்டு, பொதுமக்கள் நடமாடும் பொது இடங்களில் காட்சிப்படுத்துவதற்காக மாட்ட அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.



කොවිட் 19 தொற்று தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்காக அச்சிடப்பட்டுள்ள சுவரொட்டிகள்

4. 2020 ஆம் ஆண்டில் தொழிநுட்ப துறை கண்டுள்ள தேர்ச்சி

2020 ஆம் ஆண்டு மார்ச்ச மாதம் முதல் உலகளாவியரீதியிலும் இலங்கையிலும் ஏற்பட்டுள்ள கொவிட் - 19 தொற்று காரணமாக 2020ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைக்கு ஏற்ப திட்டமிடப்பட்டிருந்த வேலைத்திட்டங்களை அந்தந்த காலகட்டத்தினுள் செயற்படுத்த முடியவில்லை. அதுமாத்திரமன்றி, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் அனர்த்த அபாய வலயங்களில் மக்களை ஒன்றுதிரட்டி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதும், சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்படுத்துவது சவால்மிக்கதாகக் காணப்பட்டது.

நிலைமை அவ்வாறாகக் காணப்பட்டபோதிலும், வருடாந்தம் நாம் முகம் கொடுக்க நேரும் வெள்ளம், மண்சரிவு, சூறாவளி ஆகிய அனர்த்த நிலைமைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இந்நிலைமையில் தொழிநுட்ப நிறுவனங்களினால் வழங்கப்பட்ட எதிர்வுகூறல்களுக்கு ஏற்ப, 2020ஆம் ஆண்டில் இடம்பெற்ற சகல அனர்த்த நிலைமைகளையும் முகாமைத்துவம் செய்தவாறு, பொதுமக்களது உயிர்வாழ்க்கை மற்றும் சொத்துக்களை பாதுகாக்கும் தேசிய கடமையினை நிறைவேற்றும் சவால்மிக்க பணிக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட இந்த எதிர்பாராத நிலைமை காரணமாக 2020 மார்ச்ச மாதம் முதல் டிசெம்பர் மாத்தம் வரையில் பொது நிருவாக அமைச்சு, சுகாதார அமைச்சு, கொவிட் - 19 தொற்று ஒழிப்பு தேசிய கருமமாற்றல் நிலையத்தினால் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் ஏற்பாடுகளை கடைப்பிடித்தவாறு ஏற்படக்கூடிய அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்வதற்காக பல்வேறு உபாய வழிமுறைகளைக் கையாண்டவாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் மற்றும் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டங்கள், முன்ஆயத்த வேலைத்திட்டங்கள் மற்றும் தணிக்கும் கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கொவிட் 19 நிலைமையிலும் முகம் கொடுக்க நேர்ந்த இடர்களிலிருந்து உயிர் மற்றும் சொத்திழப்புக்களை குறைத்துக்கொள்ள முடிந்தது.

4.1 முன்ஆயத்த திட்டமிடல் பிரிவு

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளவாறு மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பவற்றுக்காக அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயார் செய்தல், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்ஆயத்த திட்டமிடல் பிரிவின் பிரதான கடமைகளில் ஒன்றாகும். வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, சுனாமி, சூறாவளி ஆகிய இலங்கையில் அடிக்கடி இடம்பெறும் அனர்த்தங்களுக்கான அனர்த்த முன்ஆயத்தப் பணிகளைத் திட்டமிடுதல் அனர்த்த முகாமைத்துவ திட்டமிடல் பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பணிகளில் ஒன்றாகும்.

அனர்த்தங்கள் ஏற்படும்போது அது சம்பந்தமான பதில் நடவடிக்கைகளை எடுப்பதற்காக மாவட்ட அடிப்படையில் பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதற்காக அதற்கு உதவும் ஆவணமாக அனர்த்த முன்ஆயத்தத் திட்டத்தைக் குறிப்பிடலாம். மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்தங்களுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உச்ச நிலையில் உள்ள முகாமைத்துவ நிறுவனம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவாகும். குழுவில் அங்கத்துவம் வகிக்கும் துணைக் குழுக்கள், அவர்களின் கடமைப் பொறுப்புக்கள் எவை என்பது ஆவணமயப்படுத்தப்பட்டுள்ளது.

நிர்வாகப் பிரதேசங்கள் தொடர்பான தகவல்கள், நிலவும் இடங்கள், ஆபத்தான நிலமைகளின் விளைவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஆபத்து நிலமைகள் தொடர்பான மதிப்பீடுகள், பிரதான நிலையம் தொடர்பான மதிப்பீடுகள், பிரதேசத்தில் உள்ள மானிட மற்றும் பௌதீக வளங்கள், அனர்த்த பதில் நடவடிக்கைப் பொறிமுறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரின் பொறுப்புக்கள் சம்பந்தமான தகவல்கள் இந்தத் திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

4.1.1 மாவட்ட மட்டத்திலான முன்ஆயத்த திட்டங்கள்

2020 ஆம் ஆண்டுக்காக கிடைக்கப்பெற்ற ரூ.5.50 மில்லியனை பயன்படுத்தி மாவட்ட மட்டத்திலான வேலைத்திட்டங்கள் மாவட்ட அனர்த்த பிரிவுகளின் கூடாக முன்னெடுக்கப்பட்டதுடன், அதன் நிதித் தேர்ச்சி 85% ஆகவும், பௌதீக தேர்ச்சி 83% ஆகவும் பதிவாகியுள்ளது.

2020ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களில் இடர்களுக்கான முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்தல் மற்றும் அது குறித்து மீளாய்வு செய்வதற்காக ரூ.5.50 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் இடர்கள் மூலம் நாட்டு மக்களுக்கு ஏற்படும் தாக்கத்தை கருத்தில் கொண்டு, மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்படுகின்றது. மாவட்டங்களுக்கு மத்தியில் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விதம் மற்றும் அதன் பௌதீக மற்றும் நிதித் தேர்ச்சி பின்வருமாறாகும்.

அட்டவணை 4.1: மாவட்டங்களுக்கு மத்தியல் நிதி பகிர்ந்தளித்தல் மற்றும் செலவு 2018 - 2020

ஆண்டு	பொதுத்திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு (ரூ.மி.)	செலவு (ரூ.மி.)
2018	25.0	24.93
2019	18.0	16.8
2020	5.50	4.54

மாவட்ட, பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் இடர் முகாமைத்துவ உறுதிப்பாட்டை பலப்படுத்தும்பொருட்டு பல்வேறு முன்ஆயத்த திட்டங்களுக்காக 2020ஆம் ஆண்டினுள் முன்ஆயத்த திட்டமிடல் பிரிவினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவ திட்டங்களை அச்சிடுதல் மற்றும் தயார் செய்தல் / மீளாய்வு செய்வதற்காக பங்குதாரர் கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவுவாரியாக நிதி வழங்கப்பட்டுள்ளது.

சுனாமி, வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு பற்றிய ஒத்திகை வேலைத்திட்டங்களை நடாத்துதல், இடர்களை வரைபடமாக்குதல், அபாய நிலைமைகளை பகுப்பாய்வு செய்தல், கிராமிய மட்டத்திலான இடர் முகாமைத்துவ குழுக்களை தாபித்தல் அேபான்ற சமூக மட்டத்திலான இடர்களுக்கு பதிலிருக்கும் வேலைத்திட்டங்களை நடாத்துதல், நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுக்கள் உடைவதற்கான முன்கூட்டிய உபாய வழிமுறையாக, அணைக்கட்டுக்களின் கீழே சரிவுகளில் வாழும் மக்களுக்கு அவசர நிலைமைகளின்பொது பதிலிருப்பதற்காக மக்களின் பங்கேற்புடன், முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்தல் மற்றும் மாவட்ட மீளாய்வு கூட்டங்களை நடாத்துவதற்காகவும் இப்பிரிவினால் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

4.1.2 மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள்

2020 ஆம் ஆண்டில் பதுள்ளை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை இற்றைப்படுத்துதல். 2020ஆம் ஆண்டு இறுதியில் 23 மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. மேலும், பிரதேச செயலகப் பிரிவுகளில் பெரும்பாலும் அனர்த்தங்களுக்கு உட்படும் பிரதேசங்களில் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் 2020ஆம் ஆண்டில் தயார் தயார் செய்யப்பட்டுள்ளன. மேலும், 17 கிராமிய அனர்த்த முகாத்துவ திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

4.1.3 அனர்த்த முன்ஆயத்தங்களுக்கான பதிலிருக்கும் திட்டங்கள்

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழைக்கு பதிலிருப்பதற்காக கண்டி, கேகாலை, அம்பாந்தோட்டை, குருநாகல், பொலன்னறுவை, மன்னார்,அம்பாறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில், அந்தந்த மாவட்டங்களில் காணப்படும் அனர்த்தங்களைக் கருத்தில் கொண்டு உரிய பங்காளி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அனர்த்த நிலைமைகளின்போது மிகவும் சிறப்பாக பதிலிருப்பதற்காக இத்திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 389,335.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

4.1.4 அனர்த்தப் பிரதேசங்களில் விளம்பர பதாதைகளை பொருத்துதல்

மண்சரிவு, வெள்ளம், சுனாமி போன்ற பிரதேசங்களில் பொதுமக்களுக்கு அனர்த்தம் குறித்து விழிப்புணர்வூட்டுவதற்காக இந்த விளம்பரப்பதாதைகள் பொருத்தப்பட்டுள்ளன. உலக உணவு

அமைப்பின் நன்கொடையுடன் வழங்கப்பட்ட 120 சுனாமி விளம்பரப்பதாதைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அவை காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பொருத்தப்பட்டது. மேலும், அனர்த் முகாமைத்துவ நிலையத்தினால் மண்சரிவு அபாயமிக்க பிரதேசங்களில் 67 விளம்பரப்பதாதைகள் 2020ஆம் ஆண்டில் பொருத்தப்பட்டன.

4.1.5 புரவி சூறாவளிக்கு தயாராதல்

2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆந் திகதி முதல் 4 ஆந் திகதி வரையில் சூறாவளி நிலைமைகள் குறித்து வளிமண்டலவியல் திணைக்களத்தினால் நாட்டைச் சூழவுள்ள கடலோரப் பிரதேசங்களில் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது 2020 டிசெம்பர் 2 ஆந் திகதி பின்னேரம் இலங்கைக்கு தென்மேற்கு கடலோரத்தினால் மன்னார் குடாவின் ஊடாக உட்புகுந்து, வடக்கு மற்றும கிழக்கு மாகாணங்களில் கடும் மழைவீழ்ச்சி மற்றும் தீடீர் வெள்ள நிலைமைகளை ஏற்படுத்தியது. இதன்போது ஏனைய பங்காளி நிறுவனங்களுடன் முன்ஆயத்தம் அடைந்ததமையின் காரணமாக உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை என்பதுடன், சொத்திழப்புக்களையும் குறைத்துக்கொள்ள முடிந்தது.

- சூறாவளியின் வானிலை மற்றும் அசைவுகள் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்கள்ம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் கடற்றொழில் அமைச்சு ஆகியன இணையத்தள கலந்துரையாடல்களை நடாத்துதல்.
- வானிலை கோலங்களை மாற்றுதல் மற்றும் சூறாவளியின் அசைவுகள் குறித்து அனர்த்த முகாமைத்துவ நிலையம், மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு பிரிவுகளின் தொடர்ச்சியான இற்றைப்படுத்தல்களின்போது வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் நெருங்கிய ஒருங்கிணைப்பினை பேணுதல்.
- முக்கிய பங்குதாரர்களை அறிவுறுத்துவதற்காக வளிமண்டலவியல் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் இணைந்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள ஒன்லைன் சும் கூட்டங்களை நடாத்துதல்.
- பாதுகாப்பு அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் தலைமை உத்தியோகத்தர்களின் நேரடி மற்றும் முன்கூட்டி ஒலிப்பதிவு செய்யப்பட்டுள பேச்சுவார்த்தைகளுடன் ஊடகங்கள் (முக்கியமாக தொலைக்காட்சி) ஊடுாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல். சூறாவளி காணப்பட்ட இரண்டு நாட்கள் முழுவதும், பிரபல்யமடைந்த உள்நாட்டு மற்றும் தனியார் தொலைக்காட்சி ஊடகங்களில் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல்.
- நடைமுறைசார் ஆயத்தம் மற்றும் திட்டமிடல், துரித நடவடிக்கைகள் மற்றும் அதிகளவிலான பொதுமக்களுக்கான விழிப்புணர்வுகள் காரணமாக குறைந்தளவிலான உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. கிழக்கு மாகாணத்தில் அகற்றப்பட்ட 79வீடுகளில் சுமார் 10,336 பேர் இடம்பெயர்ந்தனர்.

4.1.6 தேசிய சுனாமி ஒத்திகை வேலைத்திட்டம் - IOWave 20

இந்த சுனாமி முன்னெச்சரிக்கை மற்றும் அவசர பதிலிருப்பு செயன்முறையினை (SOP) மீளாய்வு செய்தல் மற்றும் அவசர பதிலிருப்பினை மேற்கொள்வதற்கு தயார்படுத்துவதற்காக இந்துசமுத்திர நாடுகளுக்குக்கான சுனாமி அபாய தொடர்பாடல் வழிமுறைகளை பரிசீலித்தல் இதன் நோக்கமாகும தேசிய மட்டம் முதல் சமூக மட்டம் வரையில் ஒத்தகை நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும், இதன் வழியாக அபாய முன்னெச்சரிக்கை செயன்முறையின் மூலம் சகல மட்டங்களிலுமான –நியம

கருமமாற்றல் தொடர்பாடல்களை பரிசீலிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் உலகளாவிய தொற்று காரணமாக IOWave 20 ஒத்திகை நிகழ்ச்சியானது பொதுமக்களது தொடர்பின்றி அரச மட்டத்தில் தொடர்பாடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் மட்டமானது மதிப்பீடு செய்யபப்பட்டது.ட சுனாமியினால் பாதிக்கப்பட்ட் 14 கடலோர மாவட்டங்கள் காணப்படுவதுடன், இதில் களுத்துறை, அம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய 4 மாவட்டங்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு ஒத்திகை நிழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

இத்தேசிய ஒத்திகை நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய பங்குதாரர்கள்

- அனர்த்த முகாமைத்துவ நிலையம்
- வளிமண்டலவியல் திணைக்களம்
- மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு
- ஏனைய பங்குதாரர்கள் : சுகாதார அமைச்சு, கடற்றொழில் திணைக்களம், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
- தேசிய மதிப்பீட்டாளர்கள் / கண்காணிப்பாளர்கள்
- சர்வதேச கண்காணிப்பாளர்கள் : ஹுடர்பீல்ட் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்

4.1.7 பருவநிலை முன்ஆயத்த நிகழ்ச்சித்திட்டங்கள்

தென்மேற்கு மற்றும் வடமேல் இடைக்கால பருவநிலையுடன் ஏற்படும் மழை காரணமாக இடம்பெறும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்காக அதனால் பாதிக்கப்படும் மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்யப்படுகின்றன. COVID 19 தொற்று காரணமாக நாட்டினுள் காணப்படும் நிலைமையை கருத்தில் கொள்ளுதல் மற்றும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய ஒழுகுதல், தகுந்த ஆயத்தம், திட்டமிடல் நடவடிக்கைகள் மற்றும் வேலைத்திட்டங்கனை முன்னெடுத்தல் சவால்மிக்கதொரு விடயமாகும்.

மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்ஆயத்த வேலைத்திட்டங்கள் பின்வருமாறாகும்.

- மாவட்ட மட்டத்திலான ஆயத்த செயற்பாடுகள் தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளின் உதவி பணிப்பாளர்களினால் சமர்ப்பித்தல்களை முன்வைத்தல், சூம் ஒன்லைன் கூட்டங்கள் ஊடாக சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட பதிலிருப்பு திட்டத்தை தயார் செய்தல் (2020 நவம்பர் மாதம் 24 முதல் 26 வரையில்)
- மாவட்ட செயலாளரின் தலைமையில் 16 மாவட்ட முன்ஆயத்த கூட்டங்களும் 27 பிரதேச முன்ஆயத்த கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.
- தாக்கத்துக்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் மற்றும் அறிவுறுத்துவதற்காக அச்சுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தல். (அதாவது சிங்கள மற்றும் தமிழ் மொழியிலான 16,000 பிரதிகள்) இது 15 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- UNDP இனால் அணுசரணை வழங்கப்பட்டுள்ள மற்றும் சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தயார் செய்யப்பட்டுள்ள இப்பிரசுரங்களில் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் அனர்த்தங்களின்போது முகாம் முகாமைத்துவ வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளன.

- தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக்கு திலிருப்பதற்காக முன்ஆயத்தங்களை தயார்படுத்துதல் தொடர்பில தேசிய பாதுகாப்பு, உள்நாட்டு மற்றும் அனர்த்த முகாத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2020 நவம்பர் 13ஆந் திகதிய அனர்த்த முகாமைத்துவ சுற்றறிக்கை மாவட்ட செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது

.




மாவட்ட மற்றும் பிரதேச பருவ முன்ஆயத்த கூட்டங்கள்

4.1.8 பாடசாலை அனர்த்த முன்ஆயத்த் திட்டங்களை தயார் செய்தல்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவியுடன், அம்பாறை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சுனாமி அனர்த்தத்துக்கு இலக்காகும் 03 பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. Covid 19 தொற்றின் காரணமாக திட்டமிடப்பட்டிருந்த பாடசாலை அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை முன்னெடுக்க முடியவில்லை.




முன்பள்ளிகளுக்கான அனர்த்த முன்ஆயத்த வேலைத்திட்டங்கள் - முல்லைத்தீவு மாவட்டம்

4.2 பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க முகாமைத்துவ சட்டத்தினால் அனர்த்த முகாமைத்துவ செயன்முறையினை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் இலங்கையினுள் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும வேலைத்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, பொதுமக்களுக்கு அனர்த்தம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலும் இது குறித்த பொதுமக்களின் தேவை எது என்பது தொடர்பிலும் அறிவுறுத்தல் மற்றும் பயிற்றுவிக்கும் செயற்பாடு மற்றும் இதன் ஒருங்கிணைப்பானது விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

தற்போது அதிகரித்துவரும் அனர்த்த அபாய நிலைமை மற்றும் அனர்த்தம் காரணமாக ஏற்படும் உயிர் மற்றும் சொத்து இழப்பினை குறைத்தவாறு அனர்த்தங்களுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய சுற்றாடலொன்றை உருவாக்குவதற்கு தேசிய மட்டம் முதல் கிராமிய மட்டம் வரையில் மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு அலகுகளுடன் வேலைத்திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்துதல் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அந்தந்த மாவட்டங்களில் காணப்படும் அனர்த்த அபாய நிலைமைகள் மேலும் தற்போது உருவாகக்கூடிய அனர்த்த அபாய நிலைமைகளை அடையாளம் கண்டு, இந்த அனர்த்த அபாய நிலைமைகளை முகாமைத்துவம் செய்வதற்காக மாவட்டத்திலான சகல பிரிவுகளையும் ஒருங்கிணைத்தவாறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

2020ஆம் ஆண்டில் விழிப்புணர்வுட்டுதல் மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக பொதுத்திறைசேரியியலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள நிதி ரூ.6.8மில்லியனாகும். இதன் தேர்ச்சி மட்டம் 94% ஐ அடைந்துள்ளதுடன், பௌதீக தேர்ச்சி 100% ஆக பதிவாகியுள்ளது. இந்நிதியைப் பயன்படுத்தி தேசிய மட்டத்திலான வேலைத்திட்டங்களைப் போன்றே, மாவட்ட, பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராமிய மட்டத்திலான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக இருந்தது. முக்கியமாக மக்களை ஒன்றுகூட்டி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பத்தில் காணப்பட்ட சவால்கள் மத்தியில் இதற்கான மாற்று வழிமுறைகளாக துண்டுப்பிரசுரங்கள் மற்றும் விளம்பரப்பதாதைகளைப் போன்றே அனர்த்தமொன்றின்போது மக்கள் நடந்துகொள்ள வேண்டிய விபரங்களை உள்ளடக்கிய புத்தகமொன்றும் அச்சிடப்பட்டு அனர்த்த அபாயமிக்க வலயங்களில் வாழும் மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், விழிப்புணர்வூட்டும் மற்றும் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டங்கள் சுகாதார துறையினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளை கடைப்பிடித்தவாறு மிகவும் குறைந்தளவினரது பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய பயிற்சி வேலைத்திட்டங்களில் நேரடி பயனாளிகளாக 8,084பேரை பங்கேற்க வைப்பதற்கு முடிந்ததுடன், 182,200 துண்டுப்பிரசுரங்கள், விளம்பரப்பதாதைகள் மற்றும் புத்தகங்களும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டு மக்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

4.2.1 தேசிய மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள்

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கையின் கீழ் அனர்த்த அபாய தணிப்பு உதவியாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கையின் கீழ் தாபிப்பதற்கு உத்தேசித்துள்ள, பல்நோக்கு அபிவிருத்தி செயலணி மூலம் குறைந்த வருமானம் பெறுவோருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், அனர்த்த அபாய குறைப்பு உதவியாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அனர்த்த அபாய குறைப்பு உதவியாளர்களை பயிற்றுவித்தலில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் இதற்குத் தேவையான தொழிநுட்ப வள உதவியை வழங்குமாறு, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை கோரியுள்ளது. இதற்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் உபதலைவர் உள்ளிட்ட இரு நிறுவனங்களினதும் உரிய உத்தியோகத்தர்களுடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டிய விதம் குறித்து

கலந்தாலோசித்து தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. இத் தீர்மானங்களுக்கு அமைய விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சிப் பிரிவினால் இதற்கான பயிற்சி வழிகாட்டியினை சிங்கள மற்றும் தமிழ் மொழியில் தயார் செய்து நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சி வழிகாட்டியானது அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்புக்குள் வரும் சகல தொழிநுட்ப விடயப்பரப்புக்களையும் உள்ளடக்கியதாக 32 (32) தலைப்புகளின் கீழ் தயார் செய்யப்பட்டு நாட்டின் சகல மாவட்டங்களிலும் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கையின் கீழ் தாபிக்க உத்தேசித்துள்ள பல்கரும அபிவிருத்தி செயலணியின் மூலம், குறைந்த வருமானம் பெறுவோருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அனர்த்த அபாயத்தை தணிக்கும் உதவியாளர்களை பயிற்றுவிப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள பயிற்சி மொடியூல்”

4.2.2 முப்படையினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஏனைய பங்காளி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்

திடீர் அனர்த்த நிலைமைகளின்போது தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் முப்படையினர், பொலிஸார் மற்றும் பாதுகாப்பு பிரிவினர் ஈடுபடுவதன் காரணமாக், அனர்த்த முகாமைத்துவ விடயம் குறித்து அவர்களை தொடர்ச்சியாக அறிவுறுத்த வேண்டிய தேவை காணப்படுவதனால், 2020ஆம் ஆண்டினுள் முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியேகத்தர்கள் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

இதற்கு மேலதிகமாக, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் விஞ்ஞான உத்தியோகத்தர்களுக்கான 02 வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இது பற்றிய விபரம் பின்வருமாறாகும்.

அட்டவணை 4.2: இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவனத்தின் விஞ்ஞான சேவை உத்தியோகத்தர்களுக்கான வேலைத்திட்டங்கள்

தொடர் இல	இலக்கு குழு / விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டம்	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை
01	இலங்கை இராணுவ கெடெட் உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டல்	30
02	இலங்கை விமானப்படையின் பயிலுநர்களுக்கான விழிப்புணர்வூட்டல்	40
03	இலங்கை இராணுவ உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டல்	45

04	புத்தள பயிற்சி பாடசாலையில் வதிவிட பயிற்சி பெறும் இலங்கை இராணு உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டல்	31
05	இலங்கை விமானப்படை உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டல்	35
06	துரிதமாக செயற்படும் இயந்திர பயிற்சியில் ஈடுபடும் இராணுவ ஆளணியினருக்கான விழிப்புணர்வூட்டல்	26
08	இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் விஞ்ஞானசேவை உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டல்	55
	மொத்தம்	**262**

முப்படையினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பங்காளி நிறுவனங்களுக்கான விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள்




அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் இலங்கை விமானப்படை உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட அனர்த் அபாய முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டம்




அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் இலங்கை இராணுவ கெடெட் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டம்

4.2.3 மாவட்டரீதியில் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம்

உலகளாவியரீதியில் வியாபித்துள்ள கொவிட் - 19 தொற்று காரணமாக 2020ஆம் ஆண்டில் வேலைத்திட்டங்களுக்காக கிராமிய மட்டத்தில் மக்களை ஒன்றுசேர்ப்பது சவாலாகக் காணப்பட்டபோதிலும், அனர்த்த தகவல் தொடர்பாடல் முறையினை பலப்படுத்தியவாறு குறுகிய நேரத்துக்குள் அனர்த்த நிலைமைகள் குறித்து மக்களை அறிவுறுத்தியவாறு, அவர்களது உயிர்

மற்றும சொத்துக்களை பாதுகாக்கும் நோக்கில், சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடித்தவாறு மக்களை அறிவுறுத்துவத்ற்காக பிரதேச ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் 2020 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ செயன்முறையுடன் தொடர்புடைய முக்கிய தொழிநுட்ப நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், மாவட்டமட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ செயன்முறை பற்றிய அறிவு, புரிந்துணர்வு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்தவாறு ஊடகவியலாளர்களை பயிற்றுவித்தல், தமது ஊடக நிறுவகங்களுக்கு திடீர் நிலைமைகள் பற்றிய உண்மையானதும் சரியானதுமான தகவல்களை துரிதமாக வழங்கி, மக்களை அறிவுறுத்தி, மக்களது உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாத்து, திடீர் அனர்த்த நிலைமைகளுக்கு பதிலிருந்தலும், அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பில் பொதுமக்களது கவனத்தை ஈர்க்கக்கூடிய சுற்றாடலை அமைத்தலும் மேலும், குறுகிய காலப்பகுதியில் பிழையின்றியும் எளியமுறையிலும் குறிப்பிட்ட தகவல்களை ஊடகங்கள் வழியாக சமூகத்துக்கு அறிவித்தலும் இதற்காக பிரதேச மட்டத்தில் தொடர்பாடல் தகவல்களை பரிமாற்றும் பொறிமுறையை பலப்படுத்துவதும் இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

2020 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்டுள்ள மாவட்ட ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் லைத்திட்டம்

அட்டவணை 4.3: 2020 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்டுள்ள மாவட்ட ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் லைத்திட்டம்

இலக்கம்	மாவட்டம்	பங்கேற்ற பிரதேச ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை
1	கிளிநொச்சி	50
2	மட்டக்களப்பு	50
3	பொலன்னறுவை	35
4	வவுனியா	52
5	அம்பாறை	51
மொத்தம்		**238**

2020 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்டுள்ள மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம லைத்தி





மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் - மட்டக்களப்பு, அம்பாறை

2020 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்டுள்ள மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகளின் சில புகைப்படங்கள

அனர்த்த அபாய முகாமைத்துவம் தொடர்பில் பொதுமக்களது அறிவினை மேம்படுத்துவதற்காக துண்டுப் பிரசுரங்கள், விளம்பரப்பதாதைகள் மற்றும் பத்திரிகை விளம்பரங்களை தயார் செய்தல் .

தற்போது நாட்டில் நிலவும் கொவிட் - 19 தொற்றுடன் பருவநிகைள் அதனை முகாமைத்துவம் செய்தல் மிகவும் அபாயமிக்க செயன்முறையாக அமையக்கூடுமாகையால், கொவிட் 19 குறித்து சுகாதார துறையினால் வழங்கியுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய ஏற்படக்கூடிய அனர்த்த அபாயத்தை தணித்தல் குறித்து அறிவுறுத்துவதற்காக கிராமிய மட்டத்தில் பொதுமக்களை ஒன்றுசேர்த்தல் சிரமமாக அமைந்தமையினாலும் காணப்படும் அனர்த்த அபாய நிலைமையினை முகாமைத்துவம் செய்வதில் பொதுமக்களது பங்களிப்பினைப் பெற்றிக்கொள்ளுதல் அத்தியவசியமென்பதனாலும், பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக துண்டுப்பிரசுரங்கள், விளம்பரப் பதாதைகள் மற்றும் புத்தகங்கள் அச்சிடப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் முகம் கொடுத்த கொவிட் - 19 நிலைமையின் கீழ் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்தவாறு பொதுமக்களது உயிர்களை பாதுகாப்பதற்கான பல்வேறு வழிமுறைகளைக் கையாள்வதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு நேர்ந்தது. இதற்கமைய, பருவப்பெயர்ச்சி மழையின்போது ஏற்படக்கூடிய மண்சரிவு, வெள்ளம் மற்றும் திடீர் அனர்த்த நிலைமைகளின்போது மக்களது உயிர்களைப் பாதுகாப்பது முக்கிய பொறுப்பாக அமைந்தது. ஆனால், முந்திய வருடத்தைப்போன்று பொதுமக்களை ஒன்றுதிரட்டுவது சிரமமாக அமைந்தமையால், தேசிய பத்திரிகைகளின் மூலம் தேவையான தகவல்களை வழங்கியவாறு பொதுமக்களை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2020 ஜனவரி மாதம் முதல் 2020 டிசெம்பர் மாதம் 31ஆந் வரையிலான காலப்பகுதியில் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள சுவரொட்டிகள் மற்றும் அறிவுறுத்தும் புத்தகங்கள்



பாதுகாப்பானதொரு சமூகத்துக்காக பருவப்பெயர்ச்சி மழையினால் ஏற்படக்கூடிய அனர்த்த முன்ஆயத்தம் மற்றும் பதிலிருக்கும் வழிகாட்டல்களை உள்ளடக்கிய கையேடு



பாதுகாப்பான சமூகத்துக்காக தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்த முன்ஆயத்தம் மற்றும் பதிலிருப்பு வழிகாட்டல்களைக் கொண்ட சுவரொட்டி

ஊடகப் பேச்சுவார்த்தைகளை ஒழுங்குசெய்தல்

நிலவும் திடீர் அனர்த்த அபாய நிலைமைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்காக குறிப்பிட்ட தொழிநுட்ப நிறுவனங்களுடன் இணைந்து ஊடகப் பேச்சுவார்த்தைகளை ஒழுங்கமைத்தல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய 2020ஆம் ஆண்டில் தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழை காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்தம் குறித்து முன்கூட்டியே பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல் ஊடக ஒன்றுகூடல்கள் வழியாக மேற்கொள்ளப்படுகின்றன. அனர்த்த முன்ஆயத்த நடவடிக்கைகளை பலப்படுத்துதல், அனர்த்தங்களின்போது ஊடகங்கள் வழியாக சரியான தகவல்கள் மற்றும் தரவுகளை பொதுமக்களுக்கு வழங்குதல், பருவப்பெயர்ச்சியின்போது ஏற்படக்கூடிய அனர்த்த அபாயங்களை தணித்தவாறு பொதுமக்கள் செயற்பட வேண்டிய விதம் குறித்த விழிப்புணர்வூட்டல்கள் ஊடகங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.இதற்காக அரச செய்தி திணைக்களம், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளம் மற்றும் சமூக வலையமைப்பினை இற்றைப்படுத்துதல்

அனர்த்தங்கள் குறித்து முன்னறிவித்தல், பொதுமக்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல் மற்றும் ஏனைய முக்கிய தகவல்களை பிரசித்தப்படுத்துதல் போன்ற விடயங்கள் அனர்த்த முகாத்துவ நிலையத்தின உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அனர்த்த முகாத்துவ நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் சமூக வலையமைப்பினையும் இற்றைப்படுத்தியவாறு திடீர் அனர்த்த நிலைமைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது பின்வரும் இணையத்தளங்கள் மற்றும் சமூக வலையமைப்புக்களை பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதற்காகப் பயன்படுத்துகின்றது.



அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளம்



அனர்தத முகாமைத்து நிலைய பயிற்சி புத்தகம் (Facebook Page)




அ.முகாமைத்து நிலைய டுவிட்டர் பக்கம்

4.2.4 மாவட்ட மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புர்வூட்டல் வேலைத்திட்டங்கள்

நாட்டின் அனர்த்த முகாமைத்துவ செயன்முறையை வினைத்திறன்மிக்கதாக செயற்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையமானது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளைத் தாபித்து அந்தந்த மாவட்டங்களில் காணப்படும் அனர்த்த அபாய முகாமைத்துவ செயன்முறையை செயற்படுத்தும் பொறுப்பினை மாவட்ட அலுவலகங்களுக்கு கையளித்துள்ளது. இதற்கமைய. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளினால் மாவட்ட மட்டத்திலான கல வேலைத்திட்டங்களும் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன.

2020ஆம் ஆண்டில் முகம் கொடுக்க நேர்ந்த சவால்கள் மத்தியிலும், மாவட்ட பணியாட்குழுவினர் அந்தந்த மாவட்டங்களில் காணப்படும் அனர்த்த அபாய முகாமைத்துவ செயன்முறையினை வினைத்திறன்மிக்கதாக முன்னெடுக்கும் பொருட்டு பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தனர். இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டவர்களது பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டது.25 மாவட்டங்களில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூ.40 மில்லியன் செலவில் சுமார் 100 நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது நேரடி பயனாளிகளாக நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை 7,046 ஆகும்.

மாவட்டங்களுக்கு ஏற்ப நிதி வழங்கல் - 2020



குறிப்பு 4.1: மாவட்டவாரியாக வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள்



கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக முதலுதவி பயிற்சி நிகழ்சசித்திட்டம் - தமன்கடுவ பி.செ.பிரிவு



பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான முதலதி பயிறி நிகழ்ச்சித்திட்டம் - பொலன்னறுவை மாவட்டம்



அரச உத்தியோகத்தர்களுக்காக விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் - யாழ்ப்பாண மாவட்டம்



பாடசாலை சமூகத்தினருக்கான தீ பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் -யாழ்ப்பாண மாவட்டம்



முகாம் முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - திருகோணமலை மாவட்டம்



உயிர்பாதுகாப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - திருகாணமலை மாவடடம்



வர்த்தக சமூகத்தினருக்கான தீ பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் - கேகாலை மாவட்டம்



அரச உத்தயோகத்தர்கள் மற்றும் கிராமிய சமூகத்தினருக்கான படகுகளை கையாளுதல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - தம்புள்ளை மாவட்டம்

4.2.5 தேசிய பாதுகாப்பு தின நிகழ்ச்சித்திட்டங்கள்

2004 ஆம் ஆண்டு சுனாமி பேரழிவினால் 35,000 இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததுடன், பல பில்லியன் பெறுமதியான சொத்துக்கள் அழிவடைந்தன. இதற்கேற்ப சுனாமி உள்ளிட்ட அன்று தொடக்கம் இன்று வரையில் உயிரழந்துள்ளவர்களை ஞாபகப்படுத்தும் பொருட்டு, 2005 ஆம் ஆண்டு அமைச்சரவை பத்திரத்துக்கு ஏற்ப, ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 26ஆந் திகதி சுனாமி மற்றும் ஏனைய அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களை ஞாபகப்படுத்துவதற்காக சர்வமத அனுஷ்டானங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியவாறு அனர்த்த அபாய முகாமைத்துவ செயன்முறையின் முக்கியத்துவம் மற்றும் அது தொடர்பிலான பொதுமக்களது பங்களிப்பு குறித்தும் அறிவுறுத்துதல் இதன் முக்கிய நோக்கமாகும்.

இதற்கமைய, 2005 ஆம் ஆண்டு முதல் இது வரையில் ஒவ்வொரு வருடத்திலும் டிசெம்பர் 26ஆந் திகதி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தேசிய பாதுகாப்பு தின தலைப்புக்களினி நோக்களை மையமாகக் கொண்டு நாடுபூராகவும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் நிலவிய சவால்களுக்கு மத்தியிலும் மட்டுப்படுத்தப்பட்டவர்களின் பங்கேற்புடன், 25 மாவட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினாலும் சுனாமி பேரழிவு உள்ளிட் திடீர் அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களை ஞாபகப்படுத்தி அவர்களுக்கு புண்ணியம் கிடைக்கப்பெறுமாறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2020ஆம் ஆண்டில் தேசிய பாதுகாப்பு தினத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் பற்றிய புகைப்புடங்கள் கீழே காட்டப்பட்டள்ளன.





அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின தலைமை அலுவலகத்தினால் கொள்பிட்டி மல்லிக்கா முதியோர் இல்லத்தில் முதியோர்களுக்கு அன்னதானம் வழங்குதல்



யாழ்ப்பாண மாவட்ட அலுவலக வளகத்தில் இடம்பெற்ற தேசிய பாதுகாப்பு தினக் கொண்டாட்டம்



இரத்தினபுரி மாவட்ட அலவலகத்தில் இடம்பெற்ற தேசிய பாதுகாப்பு தின கொண்டாட்டம்

4.2.6 பணியாட்குழுவினரின் கொள்திறன் விருத்தி வேலைத்திட்டங்கள்

வலயத்தின் ஏனைய நாடுகளைப் போன்றே இலங்கையிலும் அனர்த்த அபாயம் தீவீரமடைந்துள்ளமையினால் ஏற்படக்கூடிய உயிரிழப்புக்கள் மற்றும் சொத்தழிப்புக்களைப் போன்றே அதன் ஏனைய பாதிப்புக்களும் அதிகரித்து வருகின்றன. தற்போது காணப்படும் அனர்த்த அபாயங்களைப் போன்றே எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த அபாய நிலைமைகளை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் முகாமைத்துவம் செய்து பொதுமக்களது உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சகல உத்தியோகத்தர்களினதும் நவீன தொழிநுட்ப அறிவு சார்ந்த அறிவினை விருத்தி செய்தல் கட்டாயமானதாகும். இதற்கேற்ப, அனர்த்த முகாமைத்து நிலையமானது வருடாந்தம் பணியாட்குழுவினரின் கொள்திறன் விருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கிறது.

2020ஆம் ஆண்டு கொள்திறன் விருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 2020 ஜனவரி முதல் ஓகஸ்ட் 31 வரையில் ரூ.10 இலட்சம் நிதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இதனைப் பயன்படுத்தி தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் முக்கிய தேவைகளை அடையாளம் கண்டு கொள்திறன் விருத்திக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, உலக உணவுத் திட்டத்தின் நிதிப்பங்களிப்பில் அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 31 உத்தியோகத்தர்களுக்கான கொள்திறன் விருத்திக்கான அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய பயிற்சி வேலைத்திட்டங்கள் இலங்கை அபிவிருத்தி மற்றும் நிருவாக நிறுவனத்தில் முன்னெடுக்கப்பட்டது. மேலும், அனர்த்த முகாத்துவ நிலைய பணியாட்குழுவினரது ஆங்கில அறிவினை மேம்படுத்துவதற்காக உலக உண திட்டத்தின் நிதிப் பங்களிப்பில் பிரித்தானிய கவுன்சிலின் “ British Council” வளவாளர்களின் பங்கேற்பில் 25 அனர்த்த முகாத்துவ நிலைய உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் பாடநெறி முன்னெடுக்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவினரின் கொள்திறன் விருத்தி வேலைத்திட்டம் பற்றிய விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 4.4: அனர்த்த முகாமைத்து நிலைய பணியாட்குழுவினரின் கொள்திறன் விருத்தி வேலைத்திட்டம்

இலக்கம்	வேலைத்திட்டம்	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை
01	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ள புதிய இராணுவ உத்தியோகத்தர்களுக்கான அறிமுகப்படுத்தல் வேலைத்திட்டம்	10
02	பெறுகை செயன்முறை தொடர்பிலான 02 நாள் வேலைத்திட்டம்	35
03	கணக்காய்வு மதிப்பீடுகளை தணித்தல் பற்றிய 02 நாள் பயிற்சி வேலைத்திட்டம்	25
04	வினைத்திறன் தடைகாண் பரீட்சை	
05	களனி பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்படும் அனர்த்த அபாய முகாமைத்துவ பாடநெறிக்கான நிதி வசதி வழங்கல்	02
06	117 அழைப்புக்கூடத்தின் பணியாட்குழுவினருக்கான தொடர்பாடல் ஆற்றல் விருத்தி பற்றிய 10 நாள் பயிறி வேலைத்திட்டம்	13
07	பிரித்தானிய கவுன்சிலினால் நடாத்தப்படுகின்ற ஆங்கில பாடநெறி	25
08	இலங்கை அபிவிருத்தி மற்றும் நிருவாக நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற அனர்த் அபாய முகாமைத்துவம் பற்றிய பயிற்சி வேலைத்திட்டம்	31
மொத்தம்		**141**





மாவடட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளின் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக இலங்கை அப்விருத்தி மற்றும நிருவாக நிறுவனத்தில் நடாத்தப்பட்ட அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய பயிற்சி வேலைத்திட்டம்



பணியாட்குழு உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்டுள்ள பெறுகை செயன்முறை பற்றிய பயிற்சி வேலைத்திட்டம்



பிரித்தானிய கவுன்சில் வளவாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆங்கில பாடநெறி




அனர்த்த முகாமைத்துவ நிலைய பணிப்பாளர்கள், உதவி பணிப்பாளர்களுக்காக நடாத்தப்பட்ட கணக்காய்வு மதிப்பீடு தணித்தல் பற்றிய பயிற்சி வேலைத்திட்டங்கள்

4.3 தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

25 மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையங்களினால் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுவதுடன், இதற்கமைய அனர்த்த முகாமைதத்துவ நிலையத்தின் தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுத்திறைசேரியினால் பின்வருமாறு 2020ஆம் ஆண்டில் தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுக்கு தவணைரீதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், இந்த வருடத்தில் டிசெம்பர் மாதம் இறுதிவரையிலான பௌதீக மற்றும் நிதித் தேர்ச்சி பின்வருமாறாகும்.

2020 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் மற்றும் அவற்றின் நிதி மற்றும் பௌதீக தேர்ச்சியின் சுருக்கம்

அட்டணை 4.5: 2020ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் நிதி மற்றும் பௌதீக தேர்ச்சி

செலவுத் தலைப்பு	கருத்திட்டங்கள்	2020 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடு (ரூ.மில்லியன்)	நிதி தேர்ச்சி		பௌதீக தேர்ச்சி (%)
			ரூ. மில்லியன்	(%)	
3-2509	அனர்த்த தணிப்பு கருத்திட்டம்	85.12	67.53	80%	100%
10-2509	அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்.	1	0.88	88%	70%

4.3.1 பிரிவினால் மேற்கொள்ளப்படும் ஏனைய செயற்பாடுகள்

➢ Desinventar தரவுக் களஞ்சியத்தை இற்றைப்படுத்துதல்

கடந்த அனர்த்தங்கள் பற்றிய சகல தரவுகளையும் உள்ளடக்கிய தரவுக் களஞ்சியமானது www.desinventar.lk என இணைத்தில் காட்டப்பட்டுள்ளது. இத்தகவல் முறைமை தன்னிச்சையாக இற்றைப்படுத்தப்படுவதுடன், புதிய தகவல் மூலாதாரங்களை அடையாளம் கண்டறிந்தவாறு, மிகவும் சரியான தகவல் முறைமையாக முன்னெடுப்பதற்குத் தேவையான செயற்பாடுகளை அடையாளம் கண்டு முன்னெடுக்கப்படுகின்றது. இது தொடர்பில் மாவட்ட உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.

- **riskinfo அபாய தகவல் இணையத்தளம் (riskinfo web potal)**

புவியியல் தரவுகள் (Geospatial Data) இதன்போது இணையத்தளத்தில் பதிவேற்றம் (upload) செய்யப்படுகின்றன. இப்புவியில் தரவுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களினால் பயன்படுத்தப்படுவதுடன், இதன் மூலம் அனர்த்தங்கள் இடம்பெறும், இடம்பெறக்கூடிய பிரதேசங்கள் குறித்து ஆய்வு செய்தல், தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் எதிர்கால திட்டங்களை தயார் செய்தல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பில் மாவட்ட உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.

- **செய்மதி புகைப்படங்களைப் பயன்படுத்தி அனர்த்தங்களுக்கு இலக்காகியுள்ள பிரதேசங்கள் மற்றும் தகல்களை கேரித்தல்.**

அனர்த்த நிலைமைகளின்போது அனர்த்தங்களுக்கு முன்னதாக மற்றும் பின்னர் செய்மதி புகைப்படங்களை பெற்றுக்கொள்ளுதல், "இன்டநெஷனல் ஷாட்ட" (International Charter) நிறுவனம் மற்றும் "சென்டினல் ஏசியா" (Sentinel Asia) நிறுனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதி காணப்படுவதுடன். 2020ஆம் ஆண்டு இறுதியில் இடம்பெற்ற சூறாவளி நிலைமையை அடிப்படையாகக் கொண்டு செய்மதி புகைப்படங்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், குறிப்பிட்ட வரைபடங்களம் தயார் செய்யப்பட்டன.

- **மாவட்டமட்டத்தில் பொதுமக்களின் முறைப்பாடுகள், கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் விசாரணைகளுக்கு பதிலிருத்தல்**

அனர்த்தங்களை தணித்தல் தொடர்பில் பொதுமக்களினலால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள், கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் விசாரணைகளுக்கான பதிலிருத்தலும் இப்பிரீவனால் மேற்கொள்ளப்படுவதுடன், முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு ஏற்ப பதிலிருப்பு தீர்மானிக்கப்படும்.
2020 ஆம் ஆண்டினுள் இத்தகைய இத்தகைய 287 கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இக்கடிதங்கள் அனைத்திற்கும் பதிலிருக்கப்பட்டுள்ளது.

4.3.2 2020 ஆம் ஆண்டு தேர்ச்சி

கடந்த வருடங்களில் இடம்பெற்ற அனர்த்தங்கள் மற்றும் எதிர்காலத்தில் தீவிரமடையக்கூடிய அனர்த்தங்கள் குறித்து ஆய்ந்தறிந்தவாறு மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்டு, தணித்தல் ,ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் தணித்தல் கருத்திட்ட நடைமுறைப்படுத்தல் திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. மேலும், அனர்த்த முகாமைத்துவ விடயம் தொடர்பிலான ஆராய்ச்சி நடவடிக்கைகள், அனர்த்த அபாய மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் அனர்த்த அபாயங்களைத் தணித்தலை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் குறிப்பிட்ட தொழிநுட்ப குழுக்களின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.
பொதுத்திறைசேரியினால் பின்ருமாறு 2020ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள் தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
தணித்தல், ஆராய்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுகளினால் அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை முன்னெடுத்தல், அனர்த்தங்களை அடையாளம் காணுதல் மற்றும் மாவட்ட மட்டத்திலான அபாய தோற்றப்பாடுகளை உருவாக்குதல், அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கான ஆராய்ச்சி பங்களிப்பினை வழங்குதல் மற்றும் அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான நோக்கத்தில் உள்ளீர்த்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கியவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கடமைகள் மற்றும விடயப்பொறுப்பினை நிறைவேற்றுவதில் பங்களிப்பு நல்குதல்.

4.3.3 அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

இலங்கையினுள் அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் இப்பிரிவின் முக்கிய பணியாகக் காணப்படுவதுடன், இதன்போது ஒவ்வொரு வருடத்துக்கும் பொதுத்திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியை முகாமைத்தும் செய்து, அனர்த்த தணிப்பு கருத்திட்ட பிரேரணைகளின் முன்னுரிமைப் பட்டியலுக்கு ஏற்ப, கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்போது பல்வேறு அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்களை அதற்கான நிரல் அமைச்சுக்களின் வழியாக குறிப்பிட்ட அமைச்சிடம் காணப்படும் நிதி ஏற்படுகள் மூலம் மேற்கொள்வதற்காக ஆற்றுப்படுத்தப்படுவதுடன், முன்னுரிமை அடிப்படையில் ஏனைய அனர்த்த தணிப்பு பிரேரணைகளை முன்னெடுப்புக்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன்போது மாவட்ட மட்டத்தில் கோரப்படும் அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களைக் கருத்தில் கொண்டு, தேசிய மட்டத்தில் அமைக்கப்படும் குழுவொன்றின் வழியாக அனர்த்த தணிப்பு கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்படுவதுடன், பின்னர் குறிப்பிட்ட கருத்திட்ட பிரேரணைகளுக்கான விபரமான மதிப்பீட்டு அறிக்கைகயும் மற்றும் ஏற்புடைய ஏனைய தொழிநுட்ப அறிக்கைகளையும் கருத்தில் கொண்டு, மாவட்ட செயலாளர்களுக்கு நிதியை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. கருத்திட்டங்களை செயற்படுத்துத் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளரினால் நேரடியாக மேற்பார்வை செய்யப்படுவதுடன், தேசிய மட்டத்திலும் கருத்திட்ட தேர்ச்சியானது மேற்பார்வை செய்யப்படும். ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் தேவையான பல்வேறுபட்ட தொழிநுட்ப பங்களிப்புகள் மாவட்ட மட்டத்தில் அதற்கான தொழிநுட்ப நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதுடன், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக நிதி புழக்கம் மேற்கொள்ளப்படுகின்றது. கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், முறையான கள பரிசீலனையின் பின்னர், கருத்திட்டத்தை சிறப்பாக பூர்த்தி செய்ததாக குறிப்பிட்ட தொழிநுட்ப விதப்புரை சகிதம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் வழியாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு அறிக்கையிடப்படுகின்றது.

அனர்த்தம் பற்றிய விபரங்கள் மற்றும் மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்படும் பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படும் தணித்தல் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூ.85.12 மில்லியன் 2020ஆம் ஆண்டுக்காக பொதுத்திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (ரூ.25.12 மில்லியன், ரூ.30மில்லியன் மற்றும் ரூ.30 மில்லியனாக மூன்று சந்தர்ப்பங்களில் பொதுத்திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது)

2019ஆம் ஆண்டுக்கான பற்றுச்சீட்டுக்களை தீர்ப்பதற்காக காணப்படாமையால், குறிப்பிட்ட பற்றுச்சீட்டுக்களை தீர்ப்பதற்காக 2020ஆம் ஆண்டின் நிதியை பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. இதற்கமைய 2020ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யபட்ட நிதியிலிருந்து ரூ.31.34 மில்லியன், 2019ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்ப்ட கருத்திட்டங்களின் நிலுவை பற்றுச்சீட்டுக்களை தீர்ப்பதற்காக கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ளது. பின்னர், 2020ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களிலன 31 புதிய கருத்திட்டங்களுக்காக மிகை நிதியானது, நிதி கிடைக்கப்பெற்ற விதத்துக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்யப்பட்டது.

4.3.4 புதிய கருத்திட்டங்கள்

அட்டணை 4.6: பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட புதிய கருத்திட்டங்கள்

தொ.இல.	மாவட்டம்	கருத்திட்டம்	நிதி ஏற்பாடு (ரூ.மி.)	நிதி தேர்ச்சி (ரூ.மி)	பௌதீக தேர்ச்சி %
1	யாழ்ப்பாணம்	2	1.15	1.11	100
2	கொழும்பு	1	0.04	0.04	100
3	பதுளை	2	6.71	5.14	100
4	மாத்தளை	2	5.77	5.49	100
5	கிளிநொச்சி	1	4.00	3.09	100
6	நுவரெலியா	3	3.34	3.25	100
7	இரத்தினபுரி	2	3.44	3.44	100
8	கேகாலை	10	8.76	8.89	100
9	கண்டி	7	6.34	5.79	100
10	மொணறாகலை	1	0.73	7.28	100

4.3.5 கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பங்கள்



மாத்தளை - வில்கமுவ பி.செயலகப் பிரிவில் வறட்சியினால் ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்காக விவசாய கிணறுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம்



யாழ்ப்பாணம் - சரசாளை பிரதேச செயலகப் பிரிவில் வெள்ள தணிப்பு கருத்திட்டம்

4.3.6 அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்

அனர்த்த முகாமைத்துவ விடயமானது கூட்டுசெயற்பாடாக அமைய வேண்டுமென்பதுடன். இதற்கு சகல துறைகளினதும் பங்களிப்பு அத்தியவசியமாகிறது. இயற்கையாகவும் மனிதர்களினாலும் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் நாட்டின் எந்தவொரு இடத்திலும் இடம்பெறுவதற்கான அபாயம் காணப்படுவதனால், நீர், தரை மற்றும் வான் ஆகிய சகல துறைகளினதும் செயற்பாடுகளுடன் அனர்த்த அபாய தணிப்பு பிணைதல் வேண்டும். பிரயோகரீதியான கருத்தில் கொண்டு நேரடியான அனர்த்த அபாய தணிப்புடன் இணைத்துக்கொள்ள வேண்டிய துறைகளை அடையாளம் கண்டு அத்துறைகளினுள் அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தினுள் உள்ளீர்க்கும் வேலைத்திட்டங்கள் உள்ளீர்க்கப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டில் அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்ப்பதற்காக பின்வரும் துறைகளுக்கான வழிகாட்டல்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

01. தேசிய திட்டமிடல்
02. நகர அபிவிருத்தி
03. தேசிய மற்றும் மாகாண நெடுஞ்சாலைகள் நிர்மாணிப்பு மற்றும் அபிவிருத்தி
04. உள்ளூராட்சி
05. சுற்றுலா
06. தனியால் துறை
07. சுகாதாரம்
08. நீர் மற்றும் துப்பரவேற்பாடு
09. சுற்றாடல் தாக்க மதிப்பீடு
10. உள்நாட்டு அனர்த்த முகாமைத்துவ செயல்நுணுக்கம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் இந்த வழிகாட்டல்கள் அச்சிடப்பட்டு குறிப்பிட்ட துறைகளுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இந்த வழிகாட்டல்களை ஒவ்வொரு துறையிலும் செயற்படுவதை எளிதாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது தொழிநுட்ப செயற்பாட்டு குழு அங்கத்தவர்களின் தலைமையில் குறிப்பிட்ட துறைகளுக்கான நிறுவனங்களில் அனர்த்த அபாய தணிப்பினை உள்ளீர்ப்பதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டு, இதன் வழியாக குறிப்பிட்ட வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவற்னு ஊக்குவிப்பதற்கும் இந்த வேலைத்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

<u>கல்வித் துறையினுள் அனர்த்த அபாய தணிப்பினை உள்ளீர்த்தல்</u>

அனர்த்த அபாய தணிப்பினை சமூகமயப்படுத்துவதற்கு உகந்த ஊடகமாக பாடசாலை முறைமையினை அறிமுகப்படுத்த முடியுமென்பதுடன், சிறுவயது முதல் அனர்த்த அபாய தணிப்பினை சிறார்களது மனதில் பதியவைப்பதன் மூலம் அனர்த்த அபாய தணிப்பிலான நடத்தைரீதியான மாற்றத்தை மனித சமூகத்தினுள் நிலைநாட்டுவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது.

அனர்த்த அபாய தணிப்பு வாழ்க்கையில் ஒரு பழக்கமாக சேருவதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த துறைகளிலான அனர்த்த அபாய தணிப்பு செயன்முறை இலகுவாக அமையும். பல்வேறு துறைகளில் அனர்த்த அபாய தணிப்பினை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேசமயம், குறிப்பிட்ட வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம், நிலைபேறான அனர்த்த அபாய தணிப்பு கலாசாரமொன்றை உருவாக்குதல் இதன் நீண்டகால இலக்காக அமைகிறது.

இதற்கேற்ப, பாடசாலை மாணவர்களுக்கு அடிப்படை அனர்த்த முகாமைத்துவ கோட்பாடுகள் குறித்து அறிவுறுத்தியவாறு, அனர்த்த அபாய தணிப்பு மதிப்பீட்டை பாடசாலை மட்டத்தில் மேற்கொள்வதற்கான கையேடுகளைத் தயார் செய்தல் 2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டதுடன், இதில் பல்வேறு தொழிநுட்ப மூலாதாரங்களைப் பயன்படுத்தி கல்வி அமைச்சின் முழுமையான பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டது. இக்கையேடானது நாட்டின் சகல பாடசாலைகளையும் உள்ளீர்த்தவாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகள் ஊடாக பகிர்ந்தளித்தல் 2020ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நிறைவுசெய்யப்பட்டது.

இப்புத்தகமானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்பட்டதுடன், ஆங்கில மொழியிலான மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

4.3.7 அனர்த்த அபாய மதிப்பீடு

நாட்டில் இடம்பெற்றுள்ள அனர்த்தங்கள், வானிலை மற்றும் காலநிலை மாற்றங்கள், புவியில் முரண்பாடுகள், பொருளாதார, சமூக மற்றும் பௌதீக பின்னணி ஆகிய பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அனர்த்த அபாய நிலைமைகள் குறித்து குறிப்பிட்ட முன்னெதிர்வுகூறலை விஞ்ஞானரீதியான மேற்கொள்வதற்கான இயலுமை காணப்படுவதுடன், இதற்காக பல்வேறு தொழிநுட்ப நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள், அறிக்கைகள் ஆகியன உதவியாக அமைகின்றன. மேலும், அனர்த்த நிலைமையொன்று ஏற்படுமிடத்து ஒவ்வொரு அனர்த்தத்துக்கும் ஏற்ப பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்கள், பாதுகாப்பான இடங்கள் போன்ற பல்வேறு தரவுகளை நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு பயன்படுத்தக்கூடியவாறு தயார் செய்வதும் மிக முக்கியமாக விடயமாகும்.

2019 ஆம் ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்யப்பட்ட அனர்த்த அபாய சுட்டியை அச்சிட்டு உரிய நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல்களை 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது. இந்த அபாய சுட்டியை வருடாவருடம் இற்றைப்படுத்தியவாறு

அபாய சுட்டியின் மாற்றங்களை ஆய்வு செய்ய வேண்டுமென்பதுடன், இதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தெரிவுசெய்யப்பட்ட 10 நகரங்களில் (கம்பஹ, நீர்கொழும்பு, மன்னார், களுத்துறை, கடுவெல, பொலன்னறுவை, மொறட்டுறை, வல்வெட்டித்துறை, பேதுருதுடுவை மற்றும் சாவகச்சேரி) அனர்த்த அபாய மதிப்பீட்டுக்கான கிராமிய மட்டத்திலான தரவு சேகரித்தல் நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன், 09 நகரங்களுக்கான தரவுகளை கணினிமயப்படுத்தும் செயற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கான அனர்த்த அபாய தோற்றப்பாடுகளை உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், கம்பஹ மாவட்டத்துக்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தரவு மற்றும் தகவல் முகாமைத்துவம் குறித்தும், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் இற்றைப்படுத்தப்படும் தரவு முறைமை குறித்தும் மாவட்டமட்டத்திலான உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்

அனர்த்த முகாமைத்துவம் பற்றிய விடயப்பரப்பினை கருத்தில் கொள்கையில், தரவு மற்றும் தகவல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதன்போது தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்ளுதல் கிராமிய மட்டம் முதல் தேசிய மட்டம் வரையில் சகல மட்டங்களிலும் மேற்கொள்ளப்படுவதுடன், முக்கிய கொள்கைரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் உள்ளூராட்சி மற்றும் தேசிய மட்டத்திலான பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படுகையில் தரவு மற்றும் தகவல்கள் முக்கிய தாக்கம் செலுத்துகின்றன.

மேற்குறிப்பிட்ட சகல கொள்கைரீதியனாதும் ஏனைய தீர்மானங்களுக்கான தரவுகளில் அதிகமான சதவீதம் கிராமிய, பிரதேச மற்றும் மாவட்ட பொறிமுறையின் மூலம் வழங்கப்படுவதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலைய மக்களுக்கு நெருங்கிய மட்டமான மாவட்ட பொறிமுறை இதன்போது முக்கிய இடம் வகிக்கின்றது.

இதற்கேற்ப, மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களினால், தேவையான தரவுகள் முன்னுரிமைக்கு ஏற்ப அடையாளம் காணப்பட்டிருத்தலும், இத்தரவுகளை உரிய காலத்தில் ஒன்றுசேர்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டிருத்தலும், தரவுகைள இற்றைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டிருத்தலும் தரவுகளை களஞ்சியப்படுத்தல் உள்ளிட்ட தரவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான சகல துறைகள் தொடர்பிலும் சிறந்த அறிவினை கொண்டிருத்தலும், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் இற்றைப்படுத்தப்படும் தரவு முறைமைகளை பயன்படுத்துவதன் மூலம் மாவட்ட மட்டத்திலான அனர்த்த அபாய தணிப்பு நடவடிக்கைகளை திட்டமிடுதலும் அத்தியவசியமான விடயமாகும்.

இதற்கேற்ப தற்போது சகல மாவட்டங்களினதும் தரவு முறைமைகளை முன்னெடுப்பதற்குத் தேவையான கணினி மற்றும் GPS பெற்றுக்கொள்வதற்கான கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட கணினி GIS மென்பொருட்களை பயன்படுத்தக்கூடிய உயரிய கொள்திறனைக் கொண்டுள்ளமையினால், தரவு குறித்த மாவட்ட மட்டத்திலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தொழிநுட்ப கருவிகள் அடிப்படை மட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இக்கருவிகளின் பயன்பாடு தொடர்பிலான அடிப்படை விழிப்புணர்வூட்டலும் மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தரவு முகாமைத்துவம் குறித்த நான்கு நாள் பயிற்சி, சகல மாவட்டங்களையும் உள்ளீர்த்தவாறு 70 உத்தியோகத்தர்களுக்கு 2020 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்டுள்ளது.

கல்வித் துறையினுள் அனர்த்த அபாண மதிப்பீட்டை மேற்கொள்ளுதல்

தேசிய மட்டத்தில் கல்வித் துறையினுள் பாடசாலை அனர்த்த அபாய மதிப்பீட்டை மேற்கொள்வதன் முக்கியத்துவமானது, கல்வித் துறையினுள்ளேயே பல சந்தர்ப்பங்களில் எழுந்ததுடன், இது காலத்தின் தேவைப்பாடாகும். இதற்கமைய 2019ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இலங்கையினுள் பாடசாலைகளுக்கான அபாய சுட்டியை தயார் செய்வதற்குத் தேவையான அடிப்படை தலையீட்டை மேற்கொள்வதற்கு இத்துறை நடவடிக்கை மேற்கொண்டது.

கல்வி அமைச்சுடன் அடிப்படை பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதன் பின்னர், வலய கல்வி பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களை அறிவுறுத்தி, குறிப்பிட்ட அபாய சுட்டிகளை தயார் செய்வதற்கான தரவுகளை சேகரிப்பதற்கான குறிப்பிட்ட படிவங்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகள் நிறைவுசெய்யப்பட்டதுடன், இத்தரவு சேகரிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கேற்ப, நாட்டின் 7137 பாடசாலைகளின் வினாக்கொத்துக்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இதில் 1300 வினாக்கொத்துக்களின் தரவுகள், குறிப்பிட்ட தரவு தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வினாக்கொத்துக்களை தரவு முறைமையினுள் உள்ளடக்கும் பணிகள் மாவட்ட உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன.

பாடசாலைகளில் அனர்த்த அபாய தணிப்புக்கான தீர்மானங்களை மேற்கொள்கையில் இந்த மூலாதாரங்கள் முக்கியத்துவம் பெறுவதுடன், அனர்த்த அபாய தணிப்பு பற்றிய தொழிநுட்ப அணுகுமுறைகளுக்கும் பாரிய பங்களிப்பு வழங்குகிறது.

அனர்த்த அபாண தணிப்புக்கான அபாயம்மிக்க துறைகளை அடையாளம் கண்டவாறு அனர்த்த அபாய மதிப்பீட்டை மேற்கொள்ளுதல்

செந்தாய் சட்டகத்துக்கு அமைய உலகளாவிய செயன்முறையினுள்ளும் உள்நாட்டுரீதியில் அனர்த்த அபாய தணிப்புக்கான உபாய வழிமுறைத் திட்டத்துக்கு ஏற்பவும், 2030 ஆம் ஆண்டளவில் அனர்த்தங்களினால் பாதுகாப்படைந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை எட்டுதை நோக்காகக் கொண்டுள்ள செயன்முறையொன்றின் தேவைப்பாடு வலியுறுத்தப்படுகின்றது. இதற்கமைய, அனர்த்தங்களுக்கு இலக்காவதற்கான கூடிய சாத்தியப்பாட்டைக்கொண்டு துறைகள் மீது கவனம் செலுத்தியவாறு குறிப்பிட்ட துறைகளில் அனர்த்த அபாய தணிப்புக்கான தொழிநுட்ப அணுகுமுறையின் தேவைப்பாடு அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன்போது அங்கவீனமுற்ற பிள்ளைகள் வாழும் விசேட பாதுகாப்பு நிலையங்கள், சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்களைக் கருத்தில் கொள்கையில், இவர்கள் அனர்த்தங்களுக்கு இலகுவில் ஆளாகக்கூடியவர்களாகையால், இவர்களது அனர்த்த அபாயத்தை மதிப்பீடு செய்வது முக்கியமானதாக அமைவதுடன், இந்த மதிப்பீட்டுக்கு ஏற்ப, அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் இலகுவாக அமையும்.

இதற்கமைய 2020 ஆம் ஆண்டினுள் குறிப்பிட்ட குழுக்கள் தொடர்பில் அனர்த்த அபாய மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இதற்காக குறிப்பிட்ட துறைகளிலான இரட்டை தரவுகளை சேகரித்து, வினாக்கொத்துக்களை தயார்செய்து, தரவு சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு, உத்தியோகத்தர்களை அறிவுறுத்தி, வினாக்கொத்து பகிர்ந்தளித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக தரவு முறைமை தயார் செய்யப்பட்டுள்ளதுடன், இணையத்தின் வழியாக மாவட்ட ரீதியில் தரவுப் பதிவானது மேற்கொள்ளப்படுகின்றது.

அனர்த்தத்துக்குப் பின்னரான இழப்புக்களை எதிரீடு செய்வதற்கான அரசாங்க வேலைத்திட்டம் குறித்து அறிவுறுத்துவதற்கான வழிகாட்டல்களை தயாரித்தல்.

அனர்த்த முகாமைத்துமுவம் பற்றிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளுதல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முக்கிய பொறுப்பாக அமைவதுடன், அனர்த்தத்துக்குப் பின்னரான இழப்பு எதிரீடு குறித்து உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்தை உரிய முறையில் விழிப்புணர்வூட்டுவதன் மூலம் அனர்த்தத்துக்குப் பின்னர் சமூகத்தை வலுவூட்டுதல் மற்றும் மீள்உருவாக்கலை துரிதப்படுத்த முடியுமென்பதுடன், இதன் மூலம் அனர்த்தங்கள் காரணமாக சமூகம் பாதிக்கப்படுவதை குறைப்பதற்கும் ஒட்டுமொத்த பொருளாதார மீள்கட்டமைப்பினை துரிதப்படுத்துவதற்கும் காரணமாக அமைந்துள்ளன.

" அனர்த்தத்துக்குப் பின்னரான இழப்பு மதிப்பீட்டுக்கான அரச வேலைத்திட்டம்" பற்றிய வழிகாட்டலை உருவாக்குவதன் மூலம் அனர்த்தத்துக்குப் பின்னரான இழப்புமதிபபீடு தொடர்பில் உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்தை உரியமுறையில் அறிவுறுத்துதல் மற்றும் இதன் மூலம் அனர்த்தமொன்றின் பின்னர், சமூகத்தை வலுவூட்டுதல் மற்றும் மீள்உருவாக்கலை துரிதப்படுத்துதல், அனர்த்தம் காரணமாக பாதிக்கப்படுவதை தணித்தல் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார மீள்ஒழுங்கமைப்பினை துரிதப்படுத்துதல் மேற்கொள்ளப்படும்.

இதற்கேற்ப, தற்போது குறிப்பிட்ட கையேட்டினை வடிவமைப்பதற்கான இரட்டை தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்படுவதுடன், குறிப்பிட்ட நிறுவனங்களை அடையாளம் கண்டவாறு அடிப்படை பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

4.3.8 அனர்த்தங்களினாலான இழப்புகள் மற்றும் பாதிப்புக்கள் குறித்து மதிப்பீடு செய்தல்.

அனர்த்தங்களினாலான இழப்புகள் மற்றும் பாதிப்புகள் குறித்து மதிப்பீடுவதற்கான நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், இதற்காக தரவுகளை இற்றைப்படுத்துவதற்கான செயன்முறைனளை உருவாக்குவதற்காக இனம் காணப்பட்டுள்ள துறைகளின் கொள்ளளவினை அதிகரித்தலும் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய, 2020 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட பணிக்காக கொள்ளளவினை அதிகரிப்பதற்காக தேசிய மட்டத்திலான இரு செயலமர்வுகள் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பங்காளி நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு இழப்புகள் மற்றும் பாதிப்புக்கள் பற்றிய தரவு முறைமையினை அறிமுகப்படுத்துவதற்கும் இத்தரவு முறைமையில் தரவுகளை பதிவுசெய்தல் குறித்து பிரயோக பயிற்சி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், இதற்காக தேசிய நீர்வழங்கல் சபை, மின்சார சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினை பிரதிநிதித்துவப்படுத்தியவாறு 30 பேர் பங்கேற்றனர்.

இழப்பு மற்றும் சேத மதிப்பீடு தொடர்பிலான தரவு முறைமையினை அறிமுகப்படுத்துதல் மற்றும் இது பற்றிய பிரயோக செயலமர்வுகளை முன்னெடுப்பதற்காக பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வொன்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 25 உத்தியோகத்தர்களுக்காக மேற்கொள்ளப்பட்டது.

4.3.9 Desinventar தரவுக்களஞ்சியம்

அனர்த்த அபாயத்தை தணித்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியம் என்பதுடன், இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஒவ்வொரு படிமுறையாக நீண்ட காலத்தில் பரந்ததொரு பரப்பினுள் விரிவடைந்து செல்லுமாறு

திட்டமிட்டு செயற்படுத்துதல் வேண்டும். இதன்போது அனர்த்த அபாய தணிப்பு குறித்த ஆய்வுக்கு அடிப்படையாகக் கொள்வதற்காக சரியானமுறையில் இற்றைப்படுத்தப்படும் தரவு அடிப்படையொன்று காணப்படுவது முக்கியமானதாக அமைவதுடன், இத்தேவையினைக் அடையாளம் கண்ட, தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறையினால் 2008ஆம் ஆண்டு முதல் **Desinventar** தரவுக் களஞ்சியம் முன்னெடுக்கப்படுவதுடன், **riskinfo** இணையத்தளமும் இற்றைப்படுத்தப்படும். இந்த அனைத்து தரவுகளும் இணைத்தளத்தில் வெளிப்படையாகக் காணப்படுவதுடன், இத்தரவுகளை தேவையான எவருக்கும் இணைத்தளத்திலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்வதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்கள் பற்றிய கடந்த அனைத்து தரவுகளும் உள்ளடங்கிய www.desinventar.lk என இணையத்தில் விடுக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு சம்பவம் தொடர்பிலும் மாவட்ட, பிரதேச செயலகப் பிரிவுகள் வாரியாக குறிப்பிட்ட அனர்த்தங்களின் கீழ் குறிப்பிட்ட காலங்களில் இடம்பெற்றுள்ள உயிரிழப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள், மற்றும் சேதமடைந்துள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் புள்ளிவிபரரீதியில் இந்த முறைமையில் உள்ளக்கப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அவசர கருமமாற்றல் பிரிவினால் வெளியிடப்படும் நிலைமை பற்றிய அறிக்கைகளினைப் போன்றே, சுகாதாரம், வனப்பாதுகாப்பு, நீர்ப்பாசனம் மற்றும் வாகன விபத்துக்கள் பற்றிய பொலிஸ் அறிக்கைகள் (www.police.lk) போன்ற துறைகளினால் பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளும் இத்தரவு முறைமையில் உள்ளக்கப்பட்டுள்ளன. இத்தரவு முறைமையானது தன்னிச்சையாக இற்றைப்படுத்தப்படுவதுடன், புதிய தரவு மூலாதாரங்களை அடையாளம் கண்டவாறு மிகவும் சரியானதொரு தரவு முறைமையாக அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தரவு முறைமையினை இற்றைப்படுத்துதல் தொடர்பிலும் தரவு முறைமையினை மேம்படுத்துதல் தொடர்பிலும் 25 மாவட்டங்களையும் உள்ளீர்க்கும் வகையில் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

4.3.10 riskinfo அபாய தகவல் இணையத்தளம் (riskinfo web potal)

புவியியல் தரவுகள் (Geospatial Data) இந்த இணையத்தளத்தில் பதிவேற்றம் (upload) செய்யப்படுகின்றன. இப்புவியில் தரவுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களினால் பயன்படுத்தப்படுவதுடன், இதன் மூலம் அனர்த்தங்கள் நிகழும் மற்றும் நிகழக்கூடிய பிரதேசங்கள் தொடர்பில் ஆய்வு செய்தல், தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் எதிர்கால் திட்டங்களை தயார் செய்தல் போன்றவை மேற்கொள்ளப்படும். எவ்வித கட்டணம் செலுத்துதலுமின்றி, இணையத்தின் ஊடாக இத்தரவுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், இதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு ஒத்துழைப்பு நல்குதல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்தலும் மேற்கொள்ளப்படுகின்றன. பல்கலைக்கழங்களில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல் தணிப்பு மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், இதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ துறை சார்ந்த புதிய மனிதவளங்கள் உருவாதலினை இதன் ஒரு துணைவிளைவாக குறிப்பிட முடியும்.

இந்த இணையத்தள பாவனை குறித்து 25 மாவட்டங்களும் உள்ளடங்குமாறு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.



மாவட்டரீதியில் பணியாற்றும் முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவசர கருமமாற்றல் பிரி உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் ஒருநாள் வேலைத்திட்டம் (2020 ஒகஸ்ட் 21)



மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் மூன்றுநாள் செயலமர்வு (2020 ஒகஸ்ட் 18 முதல் 20 வரை)

<u>செய்மதிகளைப் பயன்படுத்தி அனர்த்தங்களுக்கு இலக்கான பிரதேசங்கள் மற்றும் தகவல்களை வெளிப்படுத்துதல்</u>

அனர்த்தங்களுக்கு முன்ஆயத்தமாவதற்கம் அனர்த்தங்களுக்கு பதிலிருப்பதற்குமும் அனர்த்தங்கள் நிகழந்துள்ள பிரதேசங்கள் மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் பற்றிய விபரம் முக்கியமானதாகும். இத்தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி, தகவல்களை வெளிப்படுத்துதல் தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்போது வானிலை எதிர்வுகூறல்களை அடிப்படையாகக் கொண்டு, அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னர் மற்றும் அனர்த்தம் நிகழ்ந்த பின்ரான செய்மதி புகைப்படங்களைப் பெற்றுக்கொண்டு, புகைப்படங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் காணப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட தகவல்களை பெற்றுக்கொள்வத்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சர்வதேச செய்மதி தொழிநுட்ப நிறுவனத்தினால் இப்புகைப்படங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன், இதற்கான விசேடமானதொரு வாய்ப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு :இன்டநெஷனல் ஷாடர்" (International Charter) மற்றும் " சென்டினல் ஏஷியா" (Sentinel Asia) ஆகிய நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ளதுடன், அனர்த்தமொன்று நிகழ்வதற்கு முன்னர் உரிய முறையில்

குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவித்ததன் பின்னர், குறிப்பிட்ட அனர்த்தப் பிரதேசத்தை உள்ளடக்கியவாறு செய்மதி புகைப்படங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன், அனர்த்தத்துக்கு முன்னர் மற்றும் பின்னரான புகைப்படங்கள அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு வழங்கப்படும். தொழிநுட்ப கருவிகளைப் பயன்படுத்தி இப்புகைப்படங்களை பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கைகள் அதன் பின்னர் மேற்கொள்ளப்படும். 2020 ஆம் ஆண்டில் இடம்பெற்ற " புரவி" தொடர்பிலான பகுப்பாய்வு மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வு முறைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டது.

4.3.11 மாவட்ட மட்டத்தில் பொதுமக்களின் முறையீடுகள், கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் கருத்தாய்வுகளுக்கு பதிலிருத்தல்

அனர்த்தங்களை தணித்தல் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு முன்வைக்கப்படும் முறைப்பாடுகள், கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் கருத்தாய்வுகளுக்கான பதிலிருத்தல் நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அமைவாக அதற்கான பதிலிருப்பு தீர்மானிக்கப்படும். இதன்போது இக்கடிதங்களுக்கான பதில்களை வழங்குவதற்கான இயலுமை குறித்து கவனம் செலுத்தியவாறு, காணப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் கொள்ளவுக்கு ஏற்ப, தொழிநுட்ப விதப்புரைகளையும் கருத்தில் கொண்டவாறு பொதுமக்களின் எதிர்ப்பார்க்கைகளை பூர்த்தி செய்வதற்கு பங்களிப்பு நல்குதல் தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் நோக்கமாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் விடயப்பரப்புக்குள் வரும் கோரிக்கைகளுக்கு தேசிய மற்றும் மாவட்ட முகாமைத்துவ பிரிவுகள் ஊடாக தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, இந்த ஆராய்ந்நி அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து உரிய செயன்முறைக்கு அமைவாக தீர்மானங்களை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இதன்போது ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் உரிய தொழிநுட்ப நிறுவனம் மற்றும் நிரல் அமைச்சுக்களுக்கு குறிப்பிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதுடன், சகல கடிதக் கொடுக்கல் வாங்கல் குறித்தும் விண்ணப்பதாரருக்கும் பிரதியொன்று அனுப்பி வைக்கப்பட்டு, அவரை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முன்வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கடிதத்துக்கும் எழுத்துமூலமாக பதிலிருக்கப்பட்டுள்ளதுடன், நேரடியாக மேற்கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் மற்றும் தொழிநுட்க அறிவுறுத்தல்கள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் விண்ணப்பதாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் இத்தகைய 287 கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இந்த அனைத்து கடிதங்களுக்கும் பதிலிருக்கப்பட்டுள்ளது.

4.3.12 ஏனைய கருத்திட்டங்கள்

JICA கருத்திட்டம்

வானிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படும் அபாய நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு களனி கங்கையின் ஆற்றுப்பள்ளத்தாக்கில் காணப்படும் ஆபத்தை தணிப்பதற்காக JICA நிறுவனத்துடன் இணைந்து விசேட கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்படிக்கையினை மேற்கொண்டு குறிப்பிட்ட ஒப்பந்தங்களை மேற்கொள்ளும நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்றதுடன், இந்நடவடிக்கைகள் கொவிட் 19 தொற்று காரணமாக மந்தநிலை அடைந்தன.

தற்போது இக்கருத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் குறிப்பிட்ட பங்காளி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுகின்றது.

4.4 அவசர நடவடிக்கை நிலையம் (Emergency Operations Division)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முக்கிய பிரிவான அவசர நடவடிக்கை பிரிவானது 24x7 மணி நேரம் முழுவதும் இயங்குகின்றது. மேலும், அனர்த்த நிலைமைகள் அதிகரிக்கும் விதம், பதிலிருக்க வேண்டிய அளவு ஆகியவற்றை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தவாறு பதிலிருப்பில் ஈடுபடும். அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்பினை கருத்தில் கொண்டு அதற்கேற்ப, ஏற்படக்கூடிய அனர்த்தங்களுக்கு பதிலிருக்க வேண்டிய விதம் குறித்து தீர்மானித்து, இதன் மூலம் எதிர்காலத்தில் முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் அனர்த்தங்களுக்கு பதிலிருப்பதற்கான நடவடிக்கைகளை திட்டமிட்டு பல்வேறு முன்அறிவித்தல் செயன்முறைகளைப் பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் குறிப்பிட்ட பங்காளி நிறுவனங்களை அறிவுறுத்து செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.



அவர கருமமாற்றல் கூடம்

2020 ஆம் ஆண்டினுள் அவசர நடவடிக்கை பிரிவினால் அனர்த்தங்களை தணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், உயிர் மற்றும் சொத்துப் பாதுகாப்பு ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் பங்களிப்பு நல்கியவாறு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் பின்வருமாறாகும்.

- மீட்பு பணிகளை ஒருங்கிணைத்தல்
- அனர்த்தங்களின்போது வழிகளை துப்பரவு செய்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு
- தொடர்பாடல் மற்றும் மின்சாரத்தை மீள்வழங்குவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு.
- தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் ஒத்துழைப்புடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை வழங்குதல்.
- தீயணைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- ஏனைய நிறுவனங்கள் மற்றும் நபர்கள் மத்தியில் தொடர்பினை ஏற்படுத்தி பதிலிருத்தல்.

4.4.1 2020ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்தங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள அவசர நடவடிக்கைகள்

<u>வெள்ளம்</u>

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கினால் **121,234** நபர்கள் பாதிக்கப்பட்டதுடன், **33,267** குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. வானிலை உத்தியோகபூர்வ அறிவித்தலுக்கு ஏற்ப, பாதிக்கப்படக்கூடிய சகல மாவட்டங்கள் தொடர்பிலும் ஊடகம், தொலைபேசி, தொலைநகல் சர்வதேச வலைப்பின்னல், சமூக வலையமைப்பு மற்றும் இணையத்தளத்தின் மூலம் பொதுமக்கள் தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்டார்கள்.

அட்டவணை 4.7: வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை

ஆண்டு	வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை	வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை
2019	578,051	138,894
2020	121,234	33,267

முன்ஆயத்தம் மற்றும் எதிர்வுகூறல்கள் இந்த வருடத்தில் முறையாக மேற்கொள்ளப்பட்டமையால், 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டில் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கையினை குறைந்த மட்டத்தில் முன்னெடுக்க முடிந்தது.



வெள்ளம் காரணமாக களுகங்கையில் தேங்கியுள்ள கழிகளை அகற்றுதல்



புத்தளத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மூழ்கியுள்ள ஒரு வீடு

"புரவி" சூறாவளி

டிசெம்பர் 02 ஆந் திகதி இரவு 10.30 மணிக்கும் 11.30 மணிக்கும் இடையில் இலங்கையின் கடற்பரப்பில் திரியாய் மற்றும் குச்சவெளிக்கு இடையில் புரவி சூறாவளியானது இலங்கையின் கரையை எட்டியது. இதனால் யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மாத்திரம் சிறியளவில் அனர்த்த நிலைமைகள் பதிவாகின.

சூறாவளி காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான தயார் செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு நிலையங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தினுள் 04, திருகோணமலையில் 49, மன்னாரில் 08 மற்றும் முல்லைத்தீவில் 04 உள்ளிட்டதாக மொத்தமாக 65 பாதுகாப்பு நிலையங்கள் தாபிக்கப்பட்டன. புரவி சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது,

அட்டவணை 4.8: புரவி சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் சேதமடைந்துள்ள சொத்துக்களின் எண்ணிக்கை (மூலாதாரம் - நாளாந்த நிலைமை அறிக்கை)

மாவட்டம்	பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை	பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை	முழுமையாக சேதமடைந்துள்ள வீடுகள்	பகுதியளவில் சேதமடைந்துள்ள வீடுகள்
யாழ்ப்பாணம்	134	522	15	170
கிளிநொச்சி	628	1949		
மன்னார்	324	1114		
முல்லைத்தீவு	123	422		
மொத்தம்	**1209**	**4007**		

மண்சரிவு

2020 ஆம் ஆண்டில் நாட்டில் மண்சரிவு ஏற்பட்ட மாவட்டங்களில் கண்டி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இதனால் 5 குடும்பங்களைச் சேர்ந்த 44நபர்கள் பாதிக்கப்பட்டார்கள். மேலும், 5 உயிரிழப்புகளும், 9 வீட்டு சேதங்களும் பதிவாகியுள்ளன.

அட்டவணை 4.9: மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை. மூலாதாரம் - *Desinventar*)

ஆண்டு	மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை	மண்ரிவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை
2019	2374	656
2020	44	5

அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை செயற்படுத்துதல், அத்துமீறிய நிர்மாணங்களை குறைத்தல் மற்றும் அவசர பதிலிருத்தல் செயன்முறையின் முறையான ஒருங்கிணைப்பதன் மூலம் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கையினை பாரியளவில் குறைத்துக்கொள்ளக் கூடியதாக இருந்தமையினை மேற்காட்டப்பட்டுள்ள தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் கண்டுகொள்ள முடியும்.





கடுங் காற்று

2020 ஆம் ஆண்டில் கடுங் காற்று காரணமகா 73,131 நபர்கள் மற்றும் 10,612 குடும்பங்கள் பாதிக்கப்பட்டனர். மேலும் 12 உயிரிழப்புக்கள் மற்றும் 64 காயமடைந்தவர்கள் பதிவாகியுள்ளனர். கடும் புயல் காரணமாக பாரியளவில் வவுனியா மாவட்ட மக்கள் பாதிக்கப்பட்டுனர்.

அட்டவணை 4.10: கடும் புயல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை. மூலாதாரம் - *Desinventar*)

ஆண்டு	கடும் புயல் காரணமா பாதிக்கப்பட்டுள்ள நபர்க்ள	கடும் புயல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை
2019	50,845	13,376
2020	73,131	10,612

பாதபாதகமான காலநிலை காரணமாக கடும் புயலினால் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாக மேற்குறிப்பிட்ட தரவு பகுப்பாய்வின் மூலம் காணக்கூடியதாக உள்ளது. இதில் நிலையற்ற நிர்மாணங்களும் உள்ளடங்குகின்றன.

காட்டுத் தீயின்போதான அவசர பதிலிருப்பு நடவடிக்கைகள்

2020 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் இலங்கையினுள் 284 காட்டுத் தீ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. காட்டுத் தீயை கட்டுப்படுத்துவதற்காக அவசர கருமமாற்றல் கூடத்தினால் முப்படை மற்றும் பொலிஸாரை ஒருங்கிணைப்பதன் மூலம் இக்காட்டுத் தீயை கட்டுப்படுத்துவது தொடர்பிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.





அட்டவணை 4.11: 2017 முதல் 2020 வரையிலான காட்டுத் தீ. மூலாதாரம் - நாளாந்த நிலைமை அறிக்கை

ஆண்டு	காட்டுத் தீயின் அளவு
2017	58
2018	102
2019	131
2020	**284**

MT NEW DIAMAN எண்ணெய்க் கப்பலின் தீணைக் கட்டுப்படுத்துவதில் பங்களிப்பு நல்குதல்


MT NEW DIAMAN எண்ணெய்க் கப்பலில் தீ ஏற்பட்டபோது இதற்கான தொழிநுட்ப நிறுவனமான கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையுடன் (MEPA) ஒருங்கிணைந்து இதனால் சுற்றாடலில் எண்ணெய்க்கசிவு இடம்பெறும் பட்சத்தில், அது தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகளுக்கு தயார்நிலையில் காணப்பட்டது. எண்ணெய்க் கப்பலின் தீயைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை இராணுவம், இலங்கை விமானப்படை, மற்றும் இலங்கை அதிகார சபையின் தலையீட்டில் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையில் அனர்த்தங்களினால் இடம்பெற்ற உயிர் மற்றும் சொத்திழப்புகள் பற்றிய சுருக்கம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.


அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய தரவுகளின் சுருக்கம் (அனர்த்த முகாமைத்துவ சட்டத்தில் குறிப்பிடப்படும் அனர்த்தங்கள்)

அட்டவணை 4.12: அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளவற்றின் சுருக்கம். மூலாதாரம் *Desinventar*


சம்பவம்	பதிவாகியுள்ள சம்பவங்கள்	உயிரிழப்பு	காயங்கள்	காணாமற்போதல்	வீடுகள் அழிவடைதல்	வீடுகள் சேதமடைதல்	பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை	பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை
மரங்கள் வீழ்தல்	71	2	4	0	4	147	180	758
ஆழிப் பேரலை	3	0	0	0	0	0	147	587
வெடித்தல்	1	0	3	0	0	0	3	3
தீ வைத்தல்	86	2	0	0	94	45	165	682
வெள்ளம்	119	4	4	0	8	2111	33267	121234
திடீர் வெள்ளம்	4	0	0	0	0	48	605	2486
காட்டுத் தீ	284	0	0	0	0	0	0	0
மண்சரிவு	5	3	2	0	2	7	9	44
மின்னல்	85	9	6	0	0	173	186	716
புயல்	1	0	0	0	0	0	85	310
கடும் புயல்	480	12	64	0	30	50	59	217
சூறாவளி	54	2	6	0	104	3577	27893	102278
டொனாடோ	1	0	0	0	0	1	1	3
	1194	**34**	**89**	**0**	**242**	**6159**	**62600**	**229318**



அட்டவணை 4.2: அனர்த்தங்களினால் வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள்



குறிஜப்பு 4.3: அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை



குறிப்பு 4.4 : அனர்த்தங்களினால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்கள்

ஏனைய சம்பவங்களினால் ஏற்பட்டுள்ள தாக்கம்

அட்டவணை 4.13: அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவற்றின் தரகளின் சுருக்கம் மூலாதாரம்- *Desinventar*

சம்பவம்	பதியப்பட்டுள்ள சம்பங்கள்	உயிரிழப்புகள்	காயமேற்படுதல்	காணாமற்போதல்	வீடுகள் அழிவடைதல்	வீடுகளுக்கான சேதங்கள்	பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின்ன எண்ணிக்கை	பாதிக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை
விலங்கு தாக்குதல்கள்	17	15	45	1	0	1	39	69
படகு கவிழ்தல்	1	0	0	2	0	0	0	0
நீரிழ் மூழ்குதல்	36	47	7	6	0	0	17	71
இலத்திரனியல் விபத்துக்கள்	4	5	0	0	0	0	2	6
பூமியதிர்ச்சி	1	0	0	0	0	1	1	4
தரைமட்டடம் கீழ் இறங்குதல்	1	0	0	0	0	1	1	2
கல் உருளுதல்	27	0	0	0	0	24	53	215
மேடுகள் உடைந்து வீழ்தல்	15	0	3	0	0	18	17	67

4.4.2 முன்அறிவித்தல்கள்

முன்அறிவித்தல் கம்பங்களை இயந்திரத்தினால் இயக்குவதற்காக முப்படை ஆளணியினர் பயிற்றுவிக்கப்பட்டு, திடீர் நிலைமைகளின்போது இயங்குவதற்கு எளிதான முறையில் தயார் செய்யப்பட்டனர்.

- சகல பிரதேச ஊடக நிரூபர்களையும் முன்னறிவித்தல் முறைமையுடன் தொடர்புபடுத்துதல்.
- DEWN முறைமையின் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையினை 23,000 வரையில் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- 2020ஆம் ஆண்டு தேர்தலுடன் இணைந்ததாக தேர்தல் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து அவசர பதிலிருப்பு திட்டங்களை தயார் செய்து, அவசர அனர்த்த நிலைமைகளின்போது தேர்தல் நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படாதவாறு 24x7 மணித்தியாலம் பூராகவும் தேர்தல் நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கான சகல ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

4.4.3 அழைப்புக்கூடம்


- கொவிட் 10 தொற்று காரணமாக ஜனாதிபதி செயலணியின் அழைப்புக் கூடமாக தாபிக்கப்பட்டுள்ள 117 அழைப்புக் கூடங்களில் சிவில் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக முப்படையினர், பொலிஸார், சுகாதார பிரிவினர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் சுமார் 04 மாத காலம் கடமையாற்றியதுடன், இக்காலப்பகுதியில் கொவிட் 19 தொற்றுடன் தொடர்புடைய

122,979 தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் குறிப்பிட்ட துறைகளை அறிவுறுத்தியவாறு ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- 117 அழைப்புக்கூடத்தின் தரவுக் களஞ்சியத்தை இற்றைப்படுத்துதல். இதன் மூலம் சகல மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், நிவாரணசேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொலைபேசி இலக்கங்களை இற்றைப்படுத்துதல் மற்றும் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்படும் 10 மாவட்டங்களில் அனர்த்தங்களுக்கான பதிலிருக்கும் தொழிநுட்ப நிறுவனங்களின் சகல உத்தியோகத்தர்களினதும் தொலைபேசி இலக்கங்களை விரைவாக பெற்றுக்கொள்ளக் கூடியவாறு தரவுக் களஞ்சியமொன்று தயார் செய்யப்பட்டது.
- 2020/01/01 முதல் 2020/12/31 வரையில் அனர்த்தம் தொடர்பிலான **369,215** தொலைபேசி அழைப்புகள் உள்ளிட்ட **401,771** இற்கு பதிலிருத்தல் மற்றும் அது தொடர்பிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். மாதாந்தம் கிடைக்கப்பெற்றுள்ள தொலைபேசி அழைப்புகளின் அறிக்கை பின்வருமாறாகும்.

அட்டவணை 4.14 : மாதாந்தம் கிடைக்கப்பெற்றுள்ள தொலைபேசி அழைப்புகளின் அறிக்கை

காலகட்டம்	அனர்த்தம் பற்றிய தகவல்களை வினாவுதல்	ஏனைய அழைப்புகள்	மொத்த தொலைபேசி அழைப்புகளின் எண்ணிக்கை
2020.01.01 முதல் 2020.01.31 வரை	16,342	3,286	19,628
2020.02.01 முதல் 2020.02.28 வரை	12,482	6,497	18,979
2020.03.01 முதல் 2020.03.31 வரை	45,856	1,032	46,888
2020.04.01 முதல் 2020.04.30 வரை	46,021	899	46,920
2020.05.01 முதல் 2020.05.31 வரை	80,968	1,980	82,948
2020.06.01 முதல் 2020.06.30 வரை	60,987	1,528	62,515
2020.07.01 முதல் 2020.07.31 வரை	24,310	3,283	27,593
2020.08.01 முதல் 2020.08.31 வரை	26,337	3,511	29,848
2020.09.01 முதல்2020.09.30 வரை	20,964	2,856	23,820
2020.10.01 முதல் 2020.10.31 வரை	17,713	1,640	19,353
2020.11.01 முதல் 2020.10.30 வரை	14,110	4,091	18,201
2020.12.01 முதல்2020.12.31 வரை	3,125	1,953	5,078
மொத்தம்	**369,215**	**32,556**	**401,771**



அழைப்புக் கூடம்

2020 ஆம் ஆண்டில் அவசர பதிலிருப்பிற்காக கொள்ளவனவு செய்யப்பட்டுள்ள கருவிகள்

அட்டவணை 4.15: 2020ஆம் ஆண்டில் அவசர பதிலிருப்பிற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள கருவிகள்

இலக்கம்	கொள்வனவு செய்யப்பட்ட கருவி	அளவு	செலவு
01.	மழையங்கி (Rain Coat)	1000	1.80Mn
02.	வெப்பமானி (thermometers)	50	0.375Mn
03.	சங்கிலி வாள் (Chain Saw)	30	3.120Mn
04.	படகு என்ஜின்(OBM)	22	8.77Mn
05.	ஒலிபெருக்கி (PA System)	12	0.49Mn
06.	பளிச்சொளி (Flash lights)	200	0.49Mn
07.	கிளவுஸ் (கையுறை) (Glows)	750	0.49Mn
08.	கம்பூட்ஸ் (Gum Boots)	250	0.49Mn
09.	ஐபொட் (I pad)	2	0.48Mn

4.4.4 அவசர நடவடிக்கை பிரிவினால் மேற்கொள்ளப்படும் ஏனைய பணிகள்

- தன்னியக்க மழைமானி அவதானிப்பு

தன்னியக்க மழைமானி முறைமையொன்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தினால் தாபிக்கப்பட்டுள்ளது. இத்தரவுகளை அவதானிப்பதற்கான வாய்ப்பு வழங்கலானது இந்த வருடத்தினுள் மேற்கொள்ளப்படுதல் மற்றும் இதனால் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் மழைமானி தரவுகளை அக்கணமே அறிந்து கொள்வதற்கு முடிவதனால் அனர்த்த முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் எளிதாகியுள்ளது.

- **புவியில் இடம்பெறும் பூமியதிர்ச்சி பற்றிய அவதானிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.**

இந்து – அவுஸ்திரேலியா புவிவியல் மட்டங்களில் மாத்திரமன்றி புவிக்கு உரித்தான சகல புவியியல மட்டங்களிலும் ஏற்படும் பூமியதிர்ச்சி பற்றிய தரவுகள் **USGS APP** மூலம் பெற்றுக்கொண்டு, இத்தரவுகள் மற்றும் தேவைக்கு ஏற்ப, வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் புவியியல் மற்றும அகழ்வுப் பணியகத்துடன் **(GSMB)** ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்நிறுவனங்களின் தொழிநுட்ப தரவுகளுக்கு ஏற்ப கருத்தில் கொள்ளத்தக்க மட்டத்தில் பூமியதிர்ச்சி ஏற்படுகையில் இது குறித்து அந்தந்த மாவட்டங்களின் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளை அறிவுறுத்துதல் மற்றும் தேவையான வழிகாட்டல்களை மேற்கொண்டு சுனாமி ஏற்படுவதற்கான சாத்தியப்பாடு குறித்து அறிவுறுத்தப்படுகின்றது, 2020ஆம் ஆண்டில் **USGS APP** மூலம் அவசர கருமமாற்றல் கூடத்துக்கு 32,307 செய்திகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

- **நாளாந்த நிலைமை அறிக்கைகளை தயார் செய்தல்**.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளினால் முறையான மாதிரிகளைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளுக்கு அமைவாக தேசிய மட்டத்தில் நாளாந்த நிலைமை அறிக்கைகள் நாளொன்றுக்கு மூன்று தடவைகள் இற்றைப்படுத்தப்பட்டு இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படும். மேலும், இந்நிலைமை அறிக்கைகள் ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கும பெக்ஸ் மூலம் ஆற்றுப்படுத்தப்படும்.

- **அனர்த்த ஒத்திகை நிகழ்ச்சிகளுக்கு தேவையான தொழிநுட்ப ஒத்துழைப்பினை வழங்குதல்.**

சுனாமி, வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு தொடர்பிலான ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு மட்டங்களில் இடம்பெறுபதுடன், வருடாந்தம் சுனாமி ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்கள் சர்வதேச மற்றும் வலய மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், இதற்குத் தேவையான தொழிநுட்ப உதவியானது அவசரகருமமாற்றல் கூடத்தினால் வழங்கப்படுகின்றது.

- **அவசர கருமமாற்றல் கூடத்தின் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள்**

உள்நாட்டு / வெளிநாட்டு மாணவர் குழுக்கள், பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்கள், பங்குதாரர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகிய குழுவினருக்கான அவசர கருமமாற்றல், முன்னறிவித்தல், அனர்த்த முகாமைத்துவம் ஆகிய விடயங்கள் தொடர்பில் வீடியோ மாநாட்டு கூடங்கள் மற்றும் அவசர நிலைமை கருமமாற்றல் நிலையத்தை பயன்படுத்தி விழிப்புணர்வூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.



அவசர கருமமாற்றல் நிலையத்தில் விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுததல்

<u>சவால்கள்</u>

- அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள யாப்புரீதியான சட்டகத்துக்கு அமையவும் தேசிய இடர் முகாமைத்துவ சபை மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கட்டளைகளின் கீழ், அனர்த்த முகாமைத்துவ நிலையம் வலுவூட்டல் பெறுதல் வேண்டும்.
- அனர்த்த அபாய முகாமைத்துவத்துக்கான கிடைக்குத்து மற்றும் நிலைக்குத்து ஒருங்கிணைப்பினை மேம்படுத்துதல் மற்றும் வசதி வழங்குதல்.
- அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்.
- உள்ளூராட்சி பிரிவுகள் அனர்த்த முகாமைத்துவத்துக்காக மாவட்ட மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ அலகுகளுடன் முனைப்பாக அனர்த்த நிலைமைகளின்போது தொடர்புகொள்ளாமை.
- துரித புனர்வாழ்வளிப்பு மற்றும் வழமை நிலைக்கு திருப்புவதற்கான அவசர நிதி ஏற்பாடுகள் காணப்படாமை.
- அனர்த்த முகாமைத்துவத்தை அத்தியவசிய சேவையாக அடையாளம் காணுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்.
- பல்இடர் அபாய முன்னெச்சரிக்கை முறைமையினை தாபித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- காணப்படும் தொடர்பாடல் வலையமைப்பினை திருத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
- தேசிய அனர்த்த அவசர கருமமாற்றல் நிலையம் மற்றும மாவட்ட அவசர கருமமாற்றல் நிலையமொன்றை தாபித்தல்.
- தேசிய அனர்த்த முகாமைத்துவ உபாயவழிமுறைகளுக்கு அமைவாக தேடுதல் மற்றும் மீட்டு குழுக்கள் மாவட்ட மட்டத்தில் தாபிக்கப்படாமை.
- அவசர பதிலிருப்பின்போது தேடுதல் மற்றும் மீட்பு குழுக்களுக்குத் தேவையான திடீர் நிதி ஏற்பாடுகளுக்கான அவசர பதிலிருப்புக்களை மேற்கொள்ளவதற்கான அவசர நிதியமொன்று (Emergency Fund) காணப்படாமை.
- தற்போது காணப்படும் தொடர்பாடல் வலையமைப்பு மற்றும் முன்னறிவித்தல் செயற்பாட்டுக்காக தாபிக்கப்பட்டுள்ள செயன்முறைகளில் பல்இடர் அபாய எச்சரிக்கை செயன்முறையொன்று காணப்படாமை.
- அவசர பதிலிருப்புக்கான மாவட்ட மட்டத்தில் காணப்படும் வளங்களை பயனுறுதிமிக்க வகையில் பதிலிருப்பின்போது பயன்படுத்துவதற்கான வழிமுறையொன்று காணப்படாமை.

4.5 நிதிப் பிரிவு

4.5.1 2020 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியிலான நிதித் தேர்ச்சி

2020 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ரூ.392.7 மில்லியன் நிதி திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.282 மில்லியன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மீண்டெழும் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதில் ரூ. 269 மில்லியன் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூலதனச் செலவுகளுக்காக ரூ.110.7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த நிதி ஏற்பாட்டில் ரூ.104.3 மில்லியன் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒட்டுமொத்த நிதி ஏற்பாட்டில் ஒவ்வொரு செலவுத் தலைப்புக்கும் 2020ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியில் பின்வருமாறு செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அட்டவணை 4.16: 2020 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியிலான நிதித் தேர்ச்சி

செலவுத் தலைப்பு	செலவு விடயம்/ கருத்திட்டம் / செயற்பாடுகள்	மொத்த செலவு (ரூ.மி.)	செலவு (ரூ.மி.)	நிதித் தேர்ச்சி %	பௌதீக தேர்ச்சி %
130-2-7-2-1503	மீண்டெழும் செலவுகள்	**282**	**269**	**95**	**100**
	மூலதனச் செலவு				
130-2-7-2-2201 (i)	பயிற்சி மற்றும் திறன் விருத்தி	1.09	1.08	99	100
130-2-7-2-2201 (ii)	அலுவலக மரத்தளபாடங்கள், விரல் அடையாள இயந்திரம் மற்றும் ஏனைய அலுவலக கருவிகளை கொள்வனவு செய்தல்.	6.44	6.44	100	100
130-2-7-3-2509	மாவட்டங்களில் அனர்த்த தாக்கத்தை குறைப்பதற்காக அனர்த்த தடுப்பு கருத்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் அவசர அனர்த்த பதிலிருப்பு	71.75	67.50	94	100
130-2-7-5-2509 (i)	அனர்த்த முன்ஆயத்தம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் சமூகத்தை அறிவுறுத்துதல் - விழிப்புணர்வூட்டல் பிரிவு	6.83	6.21	91	93
130-2-7-5-2509 (ii)	அனர்த்த முன்ஆயத்தம் மற்றும் முகாமைத்துவம் குறித்து சமூகத்துக்கு விழிப்புணர்வூட்டல் - முன்ஆயத்த பிரிவு	5.5	4.54	83	85
130-2-7-8-2103	மண்சரிவு, வெள்ளம் மற்றும வறட்சியின்போது பதிலிருப்பு கொள்திறனை விருத்தி செய்தல்	17.22	16.58	96	100
130-2-7-10-2509	அனர்த்த பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்	1.94	1.94	100	100
	மூலதனச் செலவுகளின் மொத்தம்	**110.77**	**104.29**	**94**	**99**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

31 டிசம்பர் 2020 இன் நிதி நிலை அறிக்கை

		2020	2019
	குறிப்பு	ரூ. '000	ரூ. '000
சொத்துக்கள்			
நடப்பு சொத்து			
பணம் மற்றும் பணம் போன்ற விஷயங்கள்	03	10,257	33,458
வைப்பு மற்றும் பிற பெறத்தக்கவைகள்	04	9,502	2,010
முன்பணம் மற்றும் முன்பணம்	05	2,067	3,775
சரக்கு	06	6,468	10,514
பேரிடர் மீட்பு உபகரணங்களின் இருப்பு	07	18,672	8,979
வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் சிறப்பு கடன் முன்பணம்		-	90
செயல்பாட்டில் உள்ள அசையா சொத்துகள்		174	-
		47,140	**58,826**
நடப்பு அல்லாத சொத்துக்கள்			
தொட்டுணர முடியாத சொத்துகளை	08	10,200	11,648
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்	09	738,613	880,379
மொத்த தற்போதைய அல்லாத சொத்துக்கள்		**748,813**	**892,027**
மொத்த சொத்துக்கள்		**795,953**	**950,853**
பொறுப்புகள்			
மொபைல் பொறுப்புகள்			
பிற விதிகள்	10	206	206
வர்த்தகம் மற்றும் பிற கொடுப்பனவுகள்	11	10,233	51,675
		10,439	**51,881**
மொபைல் அல்லாத பொறுப்புகள்			
ஓய்வூதிய பலன் பொறுப்புகள்	12	47,970	39,310
பிற நிறுவனங்களின் மானியங்கள்	13	16,244	14,425
மொபைல் அல்லாத மொத்த பொறுப்பு		**64,214**	**53,735**
மொத்த பொறுப்பு		**74,653**	**105,616**

நிகர சொத்துக்கள்		**721,300**	**845,237**
நிகர சொத்துக்கள் / நிறை			
நிதி, இருப்பு / நிறை			
குவிப்பு நிதி		(1,016,508)	(741,074)
மூலதன அடிப்படையில் முதலீடு	14	(53,651)	(219,953)
சொத்து மூலதனம் - ICET திட்டம்		400,186	520,489
சொத்து மூலதன மானியம் - பொது கருவூலம்		-	957
கருவூலத்தில் இருந்து மூலதன மானியம்		1,184,837	1,078,382
இருப்பு எண்ணுதல் - மோட்டார் வாகனங்கள்		206,436	206,436
மொத்த நிகர சொத்துக்கள் / நிறை		**721,300**	**845,237**

அதனுடன் இணைந்த கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் எண். 1 முதல் 18 வரை நிதிநிலை அறிக்கைகளின் இன்றியமையாத பகுதியாகும்.

துணை இயக்குனர் நிதி (அரசு)

இந்த நிதிநிலை அறிக்கைகளை தயாரித்து வழங்குவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இடைக்கால நிர்வாகக் குழுவின் சார்பாக நிதிநிலை அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்படுகின்றன.

பொது இயக்குனர் உறுப்பினர் IMC தலைவர் IMC

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

டிசம்பர் 31, 2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் அறிக்கை

	குறிப்புகள்	2020 ரூ. '000	2019 ரூ. '000
வருமானம்	15	244,979	280,550
வேறு வருமானம்	16	149,180	152,045
மொத்த வருமானம்		**394,159**	**432,595**
நிர்வாக செலவுகள்	17	(450,164)	(488,379)
பிற செலவுகள்	18	(10,715)	(9,249)
உபரி / (பற்றாக்குறை) செயல்பாடுகளிலிருந்து		**(66,720)**	**(65,033)**
நிதி செலவுகள்		-	-
வரிவிதிப்புக்கு முன் உபரி / (பற்றாக்குறை)		(66,720)	(65,033)
வரிவிதிப்பு		-	-
ஆண்டுக்கான மொத்த உபரி / (பற்றாக்குறை)		**(66,720)**	**(65,033)**

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் 1 முதல் 18 வரை இணைக்கப்பட்டுள்ளது நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிகர சொத்துக்கள் / ஈக்விட்டியில் ஏற்படும் மாற்றங்களின் அறிக்கை

	மூலதன கிராண்ட் இம்ப்ரெஸ்ட்	சொத்துக்கள் கிராண்ட் கருவூலம்	சொத்துக்கள் மானியம் ICET - திட்டம்	மறுமதிப்பீடு மோட்டார் வாகனம்	திரட்டப்பட்ட நிதி	நிகர சொத்துகளின் மொத்த அளவு
	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
ஜனவரி 1, 2019 நிலவரப்படி இருப்பு	**335,868**	**2,552**	**655,599**	**206,436**	**(142,062)**	**1,058,393**
முந்தைய ஆண்டு சரிசெய்தல்	-	-	-	-	-	-
2019 ஆம் ஆண்டின் கடனைத் திரும்பப் பெறுதல்	-	(1,595)	(135,109)	-	-	(136,704)
2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மூலதன மானியம்	208,535	-	-	-	-	208,535
2019 ஆம் ஆண்டிற்கான மூலதன மானியத்தின் மீதான முதலீடு	(219,954)	-	-	-	-	(219,954)
2019 ஆம் ஆண்டிற்கான உபரி / (பற்றாக்குறை)	-	-	-	-	(65,033)	(65,033)
31 டிசம்பர் 2019 நிலவரப்படி இருப்பு	**324,449**	**957**	**520,490**	**206,436**	**(207,095)**	**845,237**
முந்தைய ஆண்டு சரிசெய்தல்	-	-	-	-	11,240	11,240
2020 ஆம் ஆண்டின் கடனைத் திரும்பப் பெறுதல்	-	(957)	(120,303)	-	-	(121,260)
2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மூலதன மானியம்	102,434	-	-	-	-	102,434
2020 ஆம் ஆண்டிற்கான மூலதன மானியத்தின் மீதான முதலீடு	(49,631)	-	-	-	-	(49,631)
2020 ஆம் ஆண்டிற்கான உபரி / (பற்றாக்குறை).	-	-	-	-	(66,720)	(66,720)
31 டிசம்பர் 2020 நிலவரப்படி இருப்பு	**377,253**	**-**	**400,187**	**206,436**	**(262,575)**	**721,300**

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் 1 முதல் 18 வரை இணைக்கப்பட்டுள்ளது நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

	2020	2019
	ரூ. '000	**ரூ. '000**
வரிக்கு முன்னரான மிகை (பற்றாக்குறை)	**(66,720)**	**(65,033)**
சீராக்கல்கள்		
தேய்மானம்	164,771	180,623
சொத்து மூலதன வழங்கல்களின் தேய்மானம்	(121,260)	(136,704)
பணிக்கொடை கொடுப்பனவு	(269)	(1,146)
காசல்லாத கிடைப்பனவுகள்	(3,638)	(2,992)
ஓய்வூதிய நன்மை பிணைப்புகள் மீதான நிதி ஏற்பாடுகள்	8,929	6,770
சொத்து நீக்கல் இலாபம்	(11)	(92)
காசற்ற வழங்கல்களின் கிடைப்பனவு	-	(1,187)
செயற்பாட்டு மூலதனம் மாறுவதற்கு முன்னர்	**(18,198)**	**(19,761)**
கருமமாற்றல் மிகை / (பற்றாக்குறை)		
பணியாட்குழு வெள்ளம் /மண்சரிவு விசேட கடன் அதிகரிப்பு / (குறைதல்)	90	119
ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவை அதிகரித்தல் / (குறைதல்)	(7,492)	(314)
பண்டத்தொகை அதிகரித்தல் / (குறைதல்)	4,046	653
அனர்த்த பதிலிருப்பு கருவிகளின் கையிருப்பு அதிகரித்தல் / (குறைதல்)	(9,693)	(41,008)
முற்பணக் கொடுப்பனவு அதிகரித்தல் / (குறைதல்)	1,708	(1,942)
ஏனைய செலுத்த வேண்டியவை அதிகரித்தல் / (குறைதல்)	(41,442)	(25,373)
கருமமாற்றல் செயற்பாடுகளின் தேறிய காசுப் பாய்ச்சல்	**(70,981)**	**(1,726)**
முதலீட்டு செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்		
சொத்து, கிரயம் மற்றும் கருவிகளை கைப்பற்றதல்	(6,680)	(6,260)
கட்புலனாகாச் சொத்துக்கள் - பூர்த்தியற்ற பணிகள்	(174)	-
சொத்து விற்பனை இலாபம்	11	120
சொத்து, கிரயம் மற்றும கருவிகளின் சீராக்கல்	-	12,873
முதலீட்டு யெற்பாடுகளின் தேறிய காசுப் பாய்ச்சல்	(6,843)	6,733
நிதி செயற்பாடுகளின் காசுப் பாய்ச்சல்		
மூலதன வழங்கல்களின் தேறிய அதிகரிப்பு (கிடைப்பனவுகள்)	106,455	208,535
மூலதன தேறிய அதிகரிப்பு (கொடுப்பனவுகள)	(53,651)	(219,953)
அ.சா.நி. /தே.அ.சா.நி. தேறிய வழங்கல்	1,819	1,398
நிதிச் செயற்பாடுகளின் தேறிய நிதிப்பாய்ச்சல்	**54,623**	**(10,020)**
காசு மற்றும் காசக்கு சமனானவற்றின் தெறிய வேறுபலடு	(23,201)	(5,013)
வருட ஆரம்பத்திலான காசு மற்றும் காசுக்கு சமனானவை	33,458	38,471
வருட இறுதியிலான காசுக்கு சமனானவை	**10,257**	**33,458**
	ரூ. '000	**ரூ. '000**
வங்கியில் உள்ள நிதி	10,257	33,458
கையிலுள்ள நிதி	-	-
மொத்தம்	**10,257**	**33,458**

கணக்கீட்டு கொள்கை மற்றும் 1 முதல் 18 ரையில் காட்டப்பட்டுள்ள குறிப்புகள் நிதிக் கூற்றுக்களில் கட்டாயமான பகுதியை பிரதிபலிக்கின்றன.

வரவு- செலவு மற்றும் மெய்செலவுகளின் ஒப்பீட்டுரீதியிலான கூற்று 2020

மூலதனச் செலவு **ரூ. ' 000**

செலவு விபரம்	திருத்தப்பட்ட மதிப்பீடு 2020	மெய்ச் செலவு	மிகை / (பற்றாக்குறை)
பயிற்சி மற்றும திறன் விருத்தி	1,290	1,040	250
மீண்டெழும் செலவு	6,443	6,443	-
மாவட்டங்களில் தாக்கங்களை குறைப்பதற்காக அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் அவசர அனர்த்தங்களுக்கு பதிலிருத்தல்	71,747	67,504	4,243
மண்சரிவு, வெள்ளம் மற்றும் வறட்சின்போது பதிலிருப்பதற்கான கொள்திறனை அதிகரித்தல்	17,222	16,584	638
அனர்த்த முன்ஆயத்தம் மற்றும் முகாமைத்துவம் குறித்து சமூகத்தை அறிவுறுத்துதல் - விழிப்புணர்வூட்டல் பிரிவு	6,830	6,203	627
அனர்த்த முன்ஆயத்தம் மற்றும் முகாமைத்துவம் குறித்து மக்களை அறிவுறுத்துதல் ு முன்ஆயத்த பிரிவு	5,502	4,538	964
அனர்த்த பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்	1,936	1,936	-
மொத்தம்	**110,970**	**104,248**	**6,722**

மீண்டெழும் செலவு **ரூ. ' 000**

செலவு விபரம்	திருத்தப்பட்ட மதிப்பீடு 2020	மெய்ச் செலவு	மிகை / (பற்றாக்குறை)
சம்பளம் மற்றும் கொடுப்பனவு	201,525	199,348	2,177
பிரயாணச் செலவு (உள்நாடு மற்றும் வெளிநாடு)	8,898	7,852	1,046
வழங்கல் சேவைகள்	13,889	16,509	(2,620)
பராமரிப்பு வைகள் மீதான செலவு	22,987	16,782	6,205
ஒப்பந்த சேவைகள்	29,367	28,340	1,027
ஏனைய செலவுகள்	4,584	4,333	251
மொத்தம்	**281,250**	**273,164**	**8,086**

* பாதகமான மாறுபாடுகள் திரட்டப்பட்ட தொடர்ச்சியான செலவினங்களால் ஏற்படுகின்றன.

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் 1 முதல் 18 வரை இணைக்கப்பட்டுள்ளது இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

வரவு - செலவு மற்றும் மெய் செலவுகளின் ஒப்பீட்டு அறிக்கை 2020

செலவு விபரம்	திருத்தப்பட்ட மதிப்பீடு 2020	மெய் செலவு	மிகை (பற்றாக்குறை)
தனிநபர் கொடுப்பனவு			
சம்பளம் மற்றும கொடுப்பனவு	150,143	148,066	2,077
மேலதிக நேரக் கொடுப்பனவு	18,956	19,373	(417)
ஏனைய கொடுப்பனவுகள்	32,426	31,909	517
	201,525	**199,348**	**2,177**
கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணச் செலவுகள்			
உள்நாடு	7,538	6,992	546
வெளிநாடு	1,360	860	500
	8,898	**7,852**	**1,046**
வழங்கல் சேவைகள்			
எழுதுகருவிகள் மற்றும் ஏனைய நுகர்வோர் பண்டங்கள்	4,594	7,013	(2,419)
எரிபொருள்	9,295	9,496	(201)
	13,889	**16,509**	**(2,620)**
பராமரிப்பு சேவைகள்			
வாகன பராமரிப்பு	12,416	11,957	459
கிரயம், இயந்திரம் மற்றும் ஏனைய கருவிகளின் பராமரிப்பு	10,571	4,825	5,746
	22,987	**16,782**	**6,205**
சேவைகள்			
போக்குவரத்து	132	43	89
மின்சாரம் மற்றும குடிநீர்	12,779	11,139	1,640
தபால் மற்றும் மின்தொடர்பாடல்	15,294	16,015	(721)
வாடகை மற்றும் வரி	1,162	1,142	20
ஏனைய (பாதுகாப்பு, துப்பரவேற்பாட்டு சேவைகள் போன்றவை)	4,583	4,333	250
	33,950	**32,672**	**1,278**

** பாதகமான மாறுபாடுகள் திரட்டப்பட்ட தொடர்ச்சியான செலவினங்களால் ஏற்படுகின்றன

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் 1 முதல் 18 வரை இணைக்கப்பட்டுள்ளது இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

1. பொது தகவல்

1.1 சட்டம், அமைவு மற்றும் உருவாக்கம்

அனர்த்த முகாமைத்துவ நிலயமானது (நிறுவனம்) 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் (சட்டம்) நியதிச்சட்ட நிறுவனமாக தாபிக்கப்பட்டு, இலங்கையில், கொழும்பு 7, வித்யா மாவத்தையில் அமைந்துள்ளது..

இலங்கையின் அனர்த்த இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு தேசிய அனர்த்த முகாமைத்துவ கவுன்சிலுக்கு உதவிகளை வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை (DMC) நிறுவுவதற்கு இச்சட்டத்தினால் தேசிய அனர்த்த முகாமைத்துவ கவுன்சிலுக்கு ஏற்பாடுகள் வாங்கப்பட்டுள்ளது. நிறுவனம் சீராக செயல்படுவதற்கான தீமனங்களை எடுப்பதற்கு அமைச்சின் செயலாளரின் தலைமைத்துவத்தில் இடைக்கால நிர்வாக குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையம், தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்பட்டு வருகிறது.

1.2 அடிப்படை செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் இயல்பு

சட்டத்தின் உபப்பிரிவு (1) இன் கீழ் நிறுவப்பட்ட நிறுவனத்தின் செயல்பாடுகள் கவுன்சிலினால் தீர்மானிக்கப்படுவதோடு , அவற்றில் கீழ்வருபவை உள்ளடக்கப் படவேண்டும்:

- தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதில் கவுன்சிலுக்கு உதவுதல் மற்றும் தேவைப்படும்போது அவற்றை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகளை வழங்குதல்.
- தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசரகால செயல்பாட்டு திட்டத்தை செயல்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்று செயலாற்றுதல் மற்றும் தேசிய அனர்த்த நிலையொன்று பிரகடன படுத்தும் பொது அவசரகால செயல்பாட்டு திட்டத்தை செயல்படுத்துதல் ஒருங்கிணைத்தல்.
- அமைச்சுகள், அரசு திணைக்களங்கள் அல்லது அரச கூட்டுத்தாபனங்கள் மூலம் தயாரிக்கப்படும் பல்வேறு அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்துடன் ஒத்துப்போகின்றன என்பதை உறுதி செய்தல்.
- சட்டத்தின் 10 வது பிரிவின் கீழ் பல்வேறு அமைச்சகங்கள், அரச திணைக்கங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் தயாரித்த அனர்த்த முகாமைத்துவ திட்டங்களின் அடிப்படையில், அனர்த்த முன்னாயத்தம், தணிப்பு, தடுப்பு, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்துதல் மற்றும் அத்தகைய திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனங்களை ஒருங்கிணைப்பு செய்து அத்தகைய நடவடிக்கைகளுக்கு திறைச்சேரியிடமிருந்து நிதி ஒதுக்கீடுகளை பெற்று அவற்றை தொடர்புடைய பிரதேசங்களுக்கு விடுவித்தல் மற்றும் அவற்றின் நடவடிக்கைகளை கண்காணித்து மதிப்பீடு செய்தல்.
- பேரழிவு மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகள் குறித்து பொருத்தமான நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு

அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் அத்தகைய நிறுவனங்கள்/செயலாளர்களுடன் ஒருங்கிணைந்து பணித் திட்டங்களைத் ஆரம்பித்து செயல்படுத்துதல்.

- அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தரவு தொகுதி ஒன்றினை வடிவமைத்து பராமரித்தல் மற்றும்
- அதன் நடவடிக்கைகள் தொடர்பாக கவுன்சில் / இடைக்கால முகனைத்துவக் குழுவிற்கு காலத்துக்குக்காலம் மற்றும் தேவைப்படும் பொது அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

1.3 முக்கிய செயல்பாட்டு இடம்

அணைத்த முகாமைத்துவ நிலையத்தின் (DMC) பிரதான அலுவலகம் கொழும்பு 7, வித்யா மாவத்தையில் அமைந்துள்ளது. அத்துடன் இணைந்த 25 மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன.

1.4 முன்னோக்கிச்செல்லும் கொள்கை

இது ஒரு முன்னோக்கிச்செல்லும் நிறுவனம் என்ற கருத்தின் அடிப்படையில் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையை போலவே வருங்காலத்திலும் ஒரு முன்னோக்கிச் செல்லும் நிறுவனமாக இயங்கும் திறனை நிருவாகம் மதிப்பீடு செய்துள்ளது. மேலும், நிறுவனத்தின் முன்னோக்கிச் செல்லும் திறனை பாதிக்கக்கூடிய, குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாக கவுன்சில் அறியாதுள்ளதோடு, நிறுவனத்தை கைக்கவோ அல்லது அதன் செயல்பாடுகளை நிறுத்தவோ எதிர்பார்க்கவில்லை.

குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

1.5 நிதிக் காலம்

நிறுவனத்தின் நிதிக் காலம் 2019 ஜனவரி 1 முதல் 2019 டிசம்பர் 31 வரையிலான பன்னிரண்டு மாத காலத்தைக் குறிக்கின்றது.

1.6 நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கான அடிப்படை

1.6.1 இணக்கப்பாட்டு அறிக்கை

இந்த நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரணியமங்கள் (SLPSAS) மற்றும் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவன கணக்கியல் தரணியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

1.6.2 அளவீட்டின் அடிப்படை

தொடர்புடைய குறிப்புகளின் கீழ் நியாயமான மதிப்பு தொடர்பாக பொருத்தமான குறிப்புகள் செய்யப்படும் சந்தர்ப்பங்களை தவிர்த்து நிதி அறிக்கைகள் திரட்டப்பட்ட அடிப்படையில் மற்றும் வரலாற்று செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.6.3 ஒப்பீட்டு தகவல்கள்

தனித்தனி விடயங்களின் ஒவ்வொரு விடய வகுப்பும் நிதி அறிக்கைகளில் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. முக்கியமற்றவை என கருதப்படாத வேறுபட்ட விடயங்கள் அல்லது செயல்பாடுகள் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன.

1.6.4 பொருள் மற்றும் ஒருங்கிணைப்பு

தனித்தனி விடயங்களின் ஒவ்வொரு விடய வகுப்பும் நிதி அறிக்கைகளில் தனித்தனியாக வழங்கப்படுகின்றன. முக்கியமற்றவை என கருதப்படாத வேறுபட்ட விடயங்கள் அல்லது செயல்பாடுகள் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன.

1.6.5 செயல்பாட்டு மற்றும் முன்வைக்கப்படும் நாணயம்

நிதி அறிக்கைகள் நிறுவனம் செயல்படும் அடிப்படை பொருளாதார சூழலான இலங்கையின், இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன, இது நிறுவனத்தின் செயல்பாட்டு மற்றும் விளக்கக்காட்சி நாணயமாகும்.. இலங்கை ரூபாயில் வழங்கப்பட்ட அனைத்து நிதித் தகவல்களும் வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால் அருகிலுள்ள ஆயிரத்திற்கு வட்டமிட்டுள்ளன.

1.7 குறிப்பிடத்தக்க கணக்கியல் கணிப்பீடுகள் மற்றும் தீர்மானங்கள்

நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் வழங்கல், கணக்கியல் கொள்கைகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவற்றின் பயன்பாடு தொடர்பான தீர்மானங்கள் , மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களைச் செய்ய முகாமைத்துவத்திற்கு தேவையான இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. உண்மையான முடிவுகள் இந்த மதிப்பீடுகள் மற்றும் பயன்படுத்தப்படும் தீர்மானங்களிலிருந்து வேறுபடலாம்.

1. தெளிவான நன்மைகள் திட்டங்கள்

பாதுகாக்கப்பட்ட எதிர்கால பணப் பாய்ச்சல் முறையைப் பயன்படுத்தி பணியாளரின் வேலைவாய்ப்புக்கு பிந்தைய சலுகைகள் திட்டத்தின் பெறுமதி தீர்மானிக்கப்படுகிறது. இந்த முறைமையில் சராசரி மாத சம்பளம் மற்றும் நிறைவு செய்துள்ள ஆண்டுகள் எண்ணிக்கை தொடர்பான

அனுமானங்கள் கையாளப் படுகின்றது. திட்டத்தின் நீண்டகால தன்மை காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவையாகும்.

2. கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் மாற்றங்கள்

கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான தீர்மானங்களின் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின், நிதி அரிக்கைகளுடன் தொடர்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்

2.1 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படைகள்

2.1.1 சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்

1. **கண்டுணரும் மற்றும் அளவீடும் அடிப்படை**

சொத்துடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு கிடைக்கும் மற்றும் சொத்தின் விலையை நம்பத்தகுந்த முறையில் மதிப்பிட முடியும் எனில் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் கண்டுணரப்படுகின்றது.

சகல சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் செலவு அடிப்படையில் குறிப்பிடப்பட்டு அதன் பின்னர் குவிக்கப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் இழப்புகளை குறைத்து அளவிடப்படுகிறது. பழுது மற்றும் பராமரிப்பு செலவுகள் விரிவான வருமான அறிக்கையில் சொத்து, ஆலை ஆகியவற்றின் முன்கொண்டு செல்லும் மதிப்பு என கண்டுணர படுவதுடன் நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக முன்கொண்டு செல்லும் மதிப்பை மீட்டெடுக்க முடியாது என்பதைக் குறிக்கும் போது உபகரணங்கள் அக் குறைபாட்டிற்காக மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

1. தேய்மானம்

சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாளில் அத் தொகைகளை கழித்துவிடுவதற்காக சகல சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் விலையில் ஒரு நேர் கோடு முறையைப் பயன்படுத்தி தேய்மானம் கணக்கிடப்படுகிறது.

சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை பின்வருமாறு:

சொத்து வகை	பயனுள்ள ஆண்டுகள்
கட்டிடங்கள்	20
தளபாடங்கள்	10
சுனாமி மற்றும் முன் எச்சரிக்கை கோபுரம்	20
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	5 - 20
வாகனங்கள்	5 - 10
கணினிகள்	10
அலுவலக உபகரணங்கள்	10

ஒரு சொத்தின் தேய்மானம் பயன்பாட்டிற்கு கிடைக்கும்போது ஆரம்பமாவதுடன், சொத்து விற்பனைக்கு வகைப்படுத்தப்பட்ட வகைப்படுத்தப்பட்ட மிக அண்மித்த நாளில் முடிவடையும். பல்வேறு பயனுள்ள வாழ்க்கைநாட்களை கொண்ட சொத்து, ஆலைகள் மற்றும் உபகரணங்களின் குறிப்பிடப்பட்ட பொருட்கள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு தேய்மானம் செய்யப்படும்.

குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

2. அங்கீகாரம்

3. சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு பொருள் அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அங்கீகரிக்கப்படவில்லை. சொத்தை அங்கீகரிப்பதில் ஏற்படும் எந்த ஆதாயம் அல்லது நஷ்டமும் நிகர அகற்றல் வருமானத்திற்கும் சுமந்து செல்லும் தொகைக்கும் உள்ள வித்தியாசமாக கணக்கிடப்பட்டு, ஆண்டு விரிவான வருமான அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது, சொத்து அங்கீகரிக்கப்படவில்லை.

2.1.2 தொட்டுணர முடியாத சொத்துக்கள்

சொத்துக்களுக்குக் காரணமான எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு கிடைக்கும் மற்றும் சொத்துக்களின் இழப்பை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியும் எனில், தொட்டுணர முடியாத சொத்துக்கள் கணக்கிடப் படுகின்றன. நிறுவனத்தால் பெறப்பட்ட தொட்டுணர முடியாத சொத்துக்கள், செலவிலிருந்து குவிக்கப்பட்ட கடன்தொகை மற்றும் திரட்டப்பட்ட குறைபாடு இழப்பு என்பவற்றை கழித்து அளவிடப்படுகின்றன.

2.1.3 கையிருப்புகள்

வழக்கற்றுப்போன மற்றும் மெதுவாக நகரும் பொருட்களுக்கு உரிய ஒதுக்கீட்டுகளைச் செய்தபின், விலை மற்றும் தேறிய உணரக்கூடிய மதிப்புகளில் மிகக் குறைந்த மதிப்பின் கீழ் கையிருப்புகள் குறிக்கப்படுகின்றன. தேறிய உணரக்கூடிய மதிப்பு என்பது வணிகத்தின் சாதாரண போக்கில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலிருந்து, நிறைவு மற்றும் விற்பனை செலவினங்களுக்கான மதிப்பிடப்பட்ட செலவை கழிக்கப்பட்ட மதிப்பாகும். பொருட்களின் மதிப்பு கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இச் செலவில் பொருட்களை கையகப்படுத்துவதற்கும் அவற்றை இருக்கும் இடம் மற்றும் நிலைக்கு கொண்டு வருவதற்கும் ஏற்படும் செலவுகள் உள்ளடங்கும்.

2.1.4 கடன்கள் மற்றும் பெறத்தக்கவை

கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பது செயலில் உள்ள சந்தையில் மேற்கோள் காட்டப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளைக் கொண்ட வகையிடல் அல்லாத நிதி சொத்துக்கள் ஆகும்.

அடிப்படையாக, கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் அவை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இனங்காணப்படுகின்றன. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளுக்கான பணம் செலுத்தாத அபாயத்தை ஈடுசெய்வதற்காக நிலுவையில் உள்ள தொகையிலிருந்து ஒதுகீட்டோன்றினை கழித்தே குறிப்பிடப்படுகின்றன.

ரொக்கப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாத மற்றும் மீளவரும் செலவினங்களுக்காக டிசம்பர் 2020 இல் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூ.7.9 மில்லியன் மானியம், 2020 டிசம்பர் 31 இன் படி மொத்த பெறத்தக்கவைகளான ரூ.9.5 மில்லியன்களில் உள்ளடக்கியது.

2.1.5 பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை

பணப் பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்காக நிறுவனம் கையில் உள்ள பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகளை கருத்தில் கொள்கின்றது. கையிருப்பு பணம் மற்றும் வங்கியில் உள்ள பணம் ஆகியவை பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை என்பதில் உள்ளடக்கின்றது.

2.1.6 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

இயல்பான செயல்பாடு சுழற்சியில் தீர்வு காணப்படும் என்று எதிர்பார்க்கப்படும் போது ஒரு பொறுப்பு நடைமுறை என வகைப்படுத்தப்படுவதுடன் சேவையின் எதிர்கால நோக்கத்திற்காக அடிப்படையாக நடைபெறும் இது, அறிக்கையிடும் காலத்திற்குப் பின் பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்பட உள்ளது மற்றும் அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு குறைந்தது பன்னிரண்டு மாதங்களுக்கு பொறுப்பைத் தீர்ப்பதற்கு ஒத்திவைக்க எந்த நிபந்தனையற்ற உரிமையும் இல்லை. நிறுவனம் ஏனைய சகல கடன்களையும் நடைமுறை அல்லாதது என வகைப்படுத்துகிறது.

2.1.7 ஏற்பாடுகள்

கடந்த நிகழ்வொன்றின் விளைவாக நிறுவனத்திற்கு சட்டபூர்வமான அல்லது ஆக்கபூர்வமான கடமை ஏற்படும்போது மற்றும் கடமையைத் தீர்ப்பதற்கு சொத்துக்களின் வெளியேற்றம் தேவைப்படலாம் மற்றும் கடமையை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியும் எனும் நிலையின் பொது நிதி நிலை அறிக்கையில் ஒரு ஏற்பாடு இனங்காணப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தணிப்புத் திட்டங்களில் முடிக்கப்பட்ட பணிகளுக்குச் செலுத்த

வேண்டிய தொகையாக, 2019 ஆம் ஆண்டில் ரூ.11.2 மில்லியன் அளவுக்கு அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, 2020 ஆம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது, மேலும் இது முந்தைய ஆண்டு சரிசெய்தல் கணக்காகப் பதிவு செய்யப்பட்டு அறிக்கையில் பங்குடைமை மாற்றங்களாக காட்டப்பட்டுள்ளது.

2.1.8 ஊழியர் நன்மைகள்

1. பணியாளர்களுக்கு உரித்தான நன்மைத் திட்டம் - பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் DMC உடன் பணிபுரியும் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடைகளுக்காக, ஒவ்வொரு ஆண்டுக்காகவும் நிதி ஆண்டின் இறுதி மாதத்தின் அரை மாத சம்பளத்தில் கணக்கிடப்பட்டு கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டு விடயம் வெவ்வேறு பொறுப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டிற்காக வெளிப்புறமாக நிதியளிக்கப்படவோ அல்லது உண்மையில் மதிப்பிடப்படவோ இல்லை.

2. குறிப்பிட்ட பங்களிப்பு திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஊழியர்களுக்கு, உரித்தான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்பதற்கு தகுதியுடையவர்கள் ஆவர். விரிவான வருமான அறிக்கையில் இவை ஒரு மேற்கொள்ளப்பட்ட செலவாக இனங்காட்டப்பட்டுள்ளது. நிறுவனம் ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 12% மற்றும் 3% முறையே ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு பங்களிக்கிறது.

2.1.9 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்களின் விளக்கம்

இலங்கை ரூபாவைத் தவிர மற்ற நாணயங்களின் பரிமாற்றங்கள், பரிமாற்ற திகதியில் உண்மையான விகிதங்களை தோராயமாக மதிப்பிட்டு இலங்கை ரூபாய் பெறுமதிக்கு மாற்றப்படுகின்றன.

2.1.10 நிதிகள், மானியங்கள் மற்றும் ஒதுக்கீடுகள் பெறுதல் மற்றும் பயன்பாட்டுக்கான கணக்கு

நிறுவனம் குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களுக்காக பல்வேறு மானியங்களைப் பெற்றுக்கொள்கிறது, மேலும் நிதி பயன்படுத்தப்பட்ட மற்றும் பெறப்பட்ட ஆண்டின் வருமானம் மற்றும் செலவு என குறிப்பிடப்படுகின்றது.

2.1.11 மோட்டார் வாகனங்கள் மறுமதிப்பீடு

மோட்டார் வாகன மறுமதிப்பீடு 2018 பெப்ரவரி 21 ஆம் திகதி மதிப்பீட்டு திணைக்களத்தினால் கொழும்பு மெட்ரோ பிராந்தியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. டிஎம்சிக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களின் மொத்த வகை சொத்துக்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மதிப்பிடப்பட்ட மதிப்பில் மோட்டார் வாகனங்களின் சுமந்து செல்லும் மதிப்பை ரூ.206.4 மில்லியன் அதிகரித்துள்ளது. மேலும் அந்த மதிப்பை மூலதன கையிருப்பின் கீழ் மறுமதிப்பீட்டு கையிருப்பாக பதிவு செய்தது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2020

	2020	2019
	ரூ. '000	ரூ. '000
குறிப்பு 03 - பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை		
இலங்கை வங்கி - 2744646	10,257	33,458
கைச்செலவு பணம்	-	-
	10,257	**33,458**
குறிப்பு 04 - வைப்பு மற்றும் ஏனைய பெறத்தக்கவை		
டாங்கிள்களில் வைப்பு	3	3
வைப்புத் - இலங்கை மின்சார சபை	1,109	1,108
வைப்புத் - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	52	52
ஏனைய பெறத்தக்கவைகள்	8,338	847
	9,502	**2,010**
குறிப்பு 05 - முன்கூட்டியே செலுத்துதல் மற்றும் முன்பணம்		
முன்பணம் - பண்டிகை	113	63
முன்பணம் - UNDP	94	595
முன்பணம் - முத்திரை	-	20
முன்கூட்டிய எச்சரிக்கை கோபுரங்கள் மற்றும் பிறவற்றில் முன்கூட்டியே செலுத்துதல்	1,806	2,542
முன்பணம் - பண தலைமை அலுவலகம்	9	-
முன்பணம் - பண மாவட்டங்கள்	4	-
முன்பணம் - மாவட்டங்களில் தயார்நிலை மற்றும் திட்டமிடல்	4	491
முன்பணம் - எரிபொருள் மாவட்டங்கள்	37	64
	2,067	**3,775**
குறிப்பு 06 - கையிருப்புகள்		
எழுதுபொருள் பொருட்கள்	653	3,830

கணினி டோனர் & கார்ட்ரிட்ஜ்	3,067	3,247
துண்டு பிரசுரங்கள்	224	224
சிறு புத்தகங்கள்	1,410	1,440
வாகன பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு	929	1,711
ஏனையவைகள்	62	62
சுவரொட்டிகள்	123	-
மொத்தம்	**6,468**	**10,514**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 2020

குறிப்பு 07- அனர்த்த பதில் உபகரண இருப்பு

		2020		2019
பொருட்கள்	**எண்**	**மொத்த பெறுமதி ரூ. '000**	**எண்**	**மொத்த பெறுமதி ரூ. '000**
செயின் சா	40	3,671	-	-
உயிர் காக்கும் ஜாக்கெட்டுகள்	270	945	402	2,881
படகு இயந்திரம்	22	8,778	45	2,723
படகுகள் (ஹல்)	1	195	1	195
DMC அடையாள ஜாக்கெட்டுகள்	423	209	1023	227
கையேடு சைரன்கள்	2	49	2	49
மழைக் அளவீடுகள்	50	138	452	523
மன கேதி	11	11	1001	11
தேடல் & மீட்பு கயிறுகள்	1	59	88	59
தேடல் விளக்குகள்	253	589	57	106
கேடமரன்ஸ்	3	372	43	124
மக்கள் அழைப்பு தொகுதிகள்	12	500	10	759
7 ஆம் ஒதுக்கு பணம் மூலம் கொள்வனவு செய்த கம்பூட் - 759759	258	504	13	17
ஜெனரேட்டர்	1	38	1	38
DMC அடையாள ஜாக்கெட்டுகள் - UNDP	825	408	1350	408
மீட்பு பை	80	132	580	132
தண்ணீர் தொட்டி 1000லி	46	373	46	373
ரப்பர் கிளவுஸ்	236	41	236	41
முகக் கவசம்	25	4	780	105
எக்ஸாஸ் STC	5	4	100	4
தோல் கையுறைகள் STC	750	491	-	-
ரெயின் கோட்ஸ்	231	427	174	52
நீர் பம்ப் BGVSP 2 SP	2	62	5	62
தார்போலின் - NDRSC	30	67	167	90
அவசர மீட்பு படகு	-	-	12	-
வெப்பமானி	40	300	-	-
சுனாமி டவர் பேட்டரி 12V, 100AH சோலார் ஜெல்	8	305	-	-
மொத்த மதிப்பு		**18,672**		**8,979**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 2020

குறிப்பு 08 - தொட்டுணர முடியாத சொத்துக்கள்

	01.01.2020 ஆகும்போது மொத்த செலவு	ஆண்டிற்கான சேர்த்தல்/ மாற்றங்கள்	ஆண்டிற்கான மாற்றங்கள்/ அகற்றல்	31.12.2020 ஆகும்போது மொத்த செலவு	01.01.2020 இல் சுமந்து செல்லும் மதிப்பு
	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
செலவு					
GIS தரவுகள்	8,556	-	-	8,556	7,700
மென்பொருள்	6,657	-	-	6,657	3,948
	15,213	**-**	**-**	**15,213**	**11,648**

	01.01.2020 இல் ஒட்டுமொத்த இருப்பு	ஆண்டிற்கான மதிப்பு குறைவு	ஆண்டானுள் மதிப்பு குறைவு மாற்றங்கள்	31.12.2020 இல் ஒட்டுமொத்த இருப்பு	31.12.2020 இல் சுமந்து செல்லும் மதிப்பு
	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
மதிப்பு குறைவடைதல்					
GIS தரவுகள்	856	856	-	1,711	6,844
மென்பொருள்	2,709	593	-	3,302	3,355
	3,565	**1,449**	**-**	**5,013**	**10,200**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 2020

குறிப்பு 09 - சொத்து, ஆலை & உபகரணங்கள்

	01.01.2020 இல் மொத்த செலவு/ மதிப்பிடப்பட்ட பெறுமதி	ஆண்டிற்கான சேர்த்தல் / மாற்றங்கள்	ஆண்டிற்கான மாற்றங்கள் அகற்றல்	31.12.2020 இல் மொத்த செலவு/ மதிப்பிடப்பட்ட பெறுமதி	01.01.2020 இல் எழுதப்பட்ட மதிப்பு
	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
நிலையான சொத்துக்கள்					
முப்படையினர் விடுதி கட்டிடம்.	-	1,291	-	1,291	-
சுனாமி மற்றும் முன் எச்சரிக்கை கோபுரங்கள்.	427,322	-	-	427,322	229,544
அலுவலக உபகரணங்கள் (துணை குறிப்பு - 9:1).	62,125	11,154	445	72,834	32,752
மரச்சாமான்கள் & பொருத்துதல்கள்.	15,861	574	-	16,435	8,109
கணினிகள் மற்றும் துணைக்கருவிகள்.	100,535	8,537	695	108,377	31,174
மோட்டார் வாகனங்கள் (துணை குறிப்பு - 9:2).	355,752	-	60	355,693	276,123
தொலைத்தொடர்பு உபகரணங்கள்.	1,562,736	-	-	1,562,736	302,677
மொத்தம்	**2,524,331**	**21,556**	**1,200**	**2,544,688**	**880,379**

	01.01.2020 இல் மொத்த செலவு/ மதிப்பிடப்பட்ட பெறுமதி	ஆண்டிற்கான சேர்த்தல் / மாற்றங்கள்	ஆண்டிற்கான மாற்றங்கள் அகற்றல்	31.12.2020 இல் மொத்த செலவு/ மதிப்பிடப்பட்ட பெறுமதி	01.01.2020 இல் எழுதப்பட்ட மதிப்பு
	Rs. '000	Rs. '000	Rs. '000	Rs. '000	Rs. '000
தேய்மானம்					
கட்டிடம் & கட்டமைப்பு	-	13		13	1,278
சுனாமி மற்றும் முன் எச்சரிக்கை கோபுரங்கள்	197,778	21,366		219,144	208,178
அலுவலக உபகரணங்கள்	29,373	4,392	445	33,321	39,514
தளபாடங்கள் & பொருத்துதல்கள்	7,751	1,178		8,929	7,505
கணினிகள்	69,361	7,772	695	76,438	31,939
வாகனங்கள்	79,630	35,569	60	115,139	240,553
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	1,260,060	93,032		1,353,091	209,645
மொத்தம்	**1,643,953**	**163,322**	**1,200**	**1,806,075**	**738,613**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2020

குறிப்பு 09 - சொத்து, ஆலை & உபகரணங்கள்

துணை குறிப்பு 09:1 – அலுவலக உபகரணங்கள் - கண்காட்சி கருவிகள் மற்றும் உபகரணங்கள்

தொடர் எண்	பொருளின் விளக்கம்	அளவு	மதிப்பு (ரூ.'000)
1	போர்ட்டபிள் பின்னணிகள்	18	1,526
2	ஸ்டால் கவுண்டர்கள்	18	445
3	தொலைக்காட்சிப்பெட்டி	18	2,237
4	தொலைக்காட்சி ஸ்டாண்ட்	18	871
5	இழுக்கக்கூடிய பதாகைகளை	54	417
6	சுனாமி கோபுர மாதிரிகள்	18	1,975
7	மடிக்கக்கூடிய நாற்காலிகள்	18	76
8	கம்பளம்	9	190
9	சிற்றேடு ஸ்டாண்ட்	35	712
10	விளக்கக்காட்சி சுட்டிகள்	30	240
11	பிஏ சிஸ்டம் (போர்ட்டபிள்)	12	2,050
12	நிலையான தொழில்துறை காத்தாடிகள்	18	371
	மொத்த மதிப்பு		**11,110**

- 18 மாவட்ட அலகுகளுக்கு கண்காட்சி கருவிகள் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு அந்த பொருட்களின் மதிப்பு, குறிப்பு எண்.03ன் கீழ் அலுவலக உபகரணங்களின் வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த உபகரணங்கள் 2017/2018 முதல் ஒவ்வொரு மாவட்டத்தின் மாவட்ட அளவிலான பள்ளி கண்காட்சி மற்றும் பொது விழிப்புணர்வு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

குறிப்பு 09 - சொத்து, ஆலை & உபகரணங்கள்

துணை குறிப்பு 09:02 – மோட்டார் வாகனங்கள்

தொடர் எண்	வாகன வகை	எண்ணிக்கை	மதிப்பு (ரூ'000)
01	டபிள் கேப்	30	169,900
02	ஜீப்	1	13,000
03	கட்டளை வாகனம்	1	5,500
04	வேன்கள்	2	13,000
05	மோட்டார் லாரிகள்	1	1,800
06	KDH வேன்	1	8,500
07	டிராக்டர் பவுசர்	80	143,993
மொத்த பெறுமதி			**355,693**

- 25 டபிள் கேப் வண்டிகள் மாவட்ட அளவிலான உடனடி நடவடிக்கை மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு மாவட்ட அலகு உதவி மாவட்ட உதவி பணிப்பாளருக்குமாக ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் வறட்சி சூழ்நிலையில் பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக மிகவும் பாதிக்கப்படக்கூடிய 16 மாவட்டங்களுக்கு 80 டிராக்டர் பொருத்தப்பட்ட பவுசர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஏனைய வாகனங்கள் தலைமை அலுவலகத்தில் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய நிர்வாகம் மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் – 2020

குறிப்பு 10 - பிற விதிகள்

	2020	2019
	ரூ. '000	ரூ. '000
பங்கு இழப்புக்கான ஏற்பாடு *	206	206
	206	206

* 2007 இல் வேயங்கொடை DMC நிலையத்தில் இருந்து ரூ.206, 011.56 பெறுமதியான பேரிடர் மீட்பு உபகரணங்களை இழந்தமைக்கான ஏற்பாடு, மற்றும் காணாமல் போன பொருட்களை காவலில் வைத்திருந்த அதிகாரி மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசாரணையின் முடிவுகளின் அடிப்படையில், அதிகாரியின் சேவை ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது. அத்தனகல்லை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண்.1153/M இன்னும் தீர்ப்பு நிலுவையில் உள்ளது.

31 டிசம்பர் 2020 நிலவரப்படி DMC ஆல் கையாளப்பட்ட 07 சட்ட வழக்குகள் (மேலே உள்ளவை உட்பட) உள்ளதோடு, அதில், விபத்து தொடர்பான வழக்கு எண்.M/43/14 மற்றும் திரு.W.J.M. நவரத்ன வின் (DMC இன் முன்னாள் ஊழியர்) பணிநீக்கம் தொடர்பாக வழக்கு வாபஸ் வாங்கப்பட்டுள்ளன.

சட்டப்பூர்வ அல்லது செல்லுபடியாகும் ஒப்பந்தக் கடமைகள் இல்லாததால், DMC இந்த வழக்குகளுக்கு எந்த ஒதுக்கீடுகளை மேற்கொள்ளவில்லை.

குறிப்பு 11 - ஏனைய செலுத்த வேண்டியவை

	ரூ.'000	ரூ.'000
செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் ஊதியம்	1	30
செலுத்த வேண்டிய எபஃ	2,610	2,478
பணம் & எஸ்ஆர்எல்	-	2
செலுத்த வேண்டிய கூடுதல் நேர கொடுப்பனவுகள்	2,356	1,878
செலுத்த வேண்டிய பயணச் செலவுகள்	762	926
செலுத்த வேண்டிய எரிபொருள் செலவுகள்	107	271
செலுத்த வேண்டிய வாகனச் சேவை, பராமரிப்பு & பழுதுபார்ப்பு	73	560
செலுத்த வேண்டிய வாடகை மற்றும் உள்ளூர் வரிகள்	77	69
அஞ்சல் மற்றும் தொடர்பு	2,278	1,217
செலுத்த வேண்டியமின்சாரம் & தண்ணீர் கட்டணங்கள்	632	938
செலுத்த வேண்டிய பிற சேவைகள் கட்டணங்கள்	42	14
செலுத்த வேண்டிய பணியாளர் நலன் செலவுகள்	-	4
செலுத்த வேண்டிய கணக்காய்வுத் திட்டங்கள்	-	42,629
செலுத்த வேண்டிய பாதுகாப்பு சேவைகள்	101	113
செலுத்த வேண்டிய துப்புரவு சேவை கட்டணங்கள்	98	7
செலுத்த வேண்டிய வருடாந்திர கணக்காய்வு கட்டணம்	1,004	539
தொழில்துறை பாதுகாப்பு உபகரணங்கள் Co.(Pvt) Ltd	92	-
	10,233	**51,675**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 2020

குறிப்பு 12 – ஓய்வூதிய நன்மை பயன் பொறுப்பு

	2020 ரூ. '000	2019 ரூ. '000
1 ஜனவரி 2019 திகதியில் இருப்பு	39,310	33,686
ஆண்டுக்கான ஏற்பாடு	8,929	6,770
கொடுப்பனவுகள்	(269)	(1,146)
31 டிசம்பர் 2019 திகதியில் இருப்பு	**47,970**	**39,310**

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் DMC உடன் பணிபுரியும் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடைகளுக்காக, ஒவ்வொரு ஆண்டுக்காகவும் நிதி ஆண்டின் இறுதி மாதத்தின் அரை மாத சம்பளத்தில் கணக்கிடப்பட்டு கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டு விடயம் வெவ்வேறு பொறுப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டிற்காக வெளிப்புறமாக நிதியளிக்கப்படவோ அல்லது உண்மையில் மதிப்பிடப்படவோ இல்லை.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 2020

குறிப்பு 13 - ஏனைய நிறுவனங்களின் கொடுப்பனவுகள்

	2020	2019
	ரூ. '000	ரூ. '000
மழை அளவீடுகளுக்காக ஆக்ஸ்பாம்	-	357
DMC அடையாள ஜாக்கெட்டுகளுக்காக UNDP	630	628
வேர்ல்ட் விஷன் லங்கா	-	28
ADPC	-	265
CSE	-	234
IT தொடர்பான பொருட்கள் கொள்வனவுச் செய்யும் கணக்கு	358	38
WHO நிறுவனம்- SAR குழுவை அமைப்பதற்காக WHO	5,353	514
தெயட்ட கிருல நிகழ்ச்சிக்காக டீ எம் அமைச்சு	-	121
UNHABITAT கட்டம் II	-	86
பாதுகாப்பு தினத்திற்கான ADPC	-	33
சர்வதேச மாநாடு/பயிலரங்கத்திற்காக சார்க்	1,756	1,756
நிறுவன பேரிடர் மேலாண்மை திட்டத்திற்கான UNDP	-	1,104
RSSDPக்காக UNDP	160	160
தரை மட்டத்திற்கான உருவகப்படுத்துதல் பயிற்சியின் வளர்ச்சிக்காக UNDP	372	668
LGS இல் DRR ஐ மெயின்ஸ்ட்ரீமிங் செய்வதற்காக UNDP	1,000	1,000
தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்திற்காக UNDP	-	5
நிறைவுச் செய்யப்பட்ட திட்டங்களுக்காக 1% நிர்வாக செலவு	769	768
NDRSC இலிருந்து DR உபகரணங்களின் நன்கொடைகள்	3,111	5,093
CRIWMPக்காக DM அமைச்சு	226	715
பாடசாலை சுனாமி திட்டத்திற்காக UNDP	788	852
சிம்போசியம் 2020க்கான UNDP நிதிகள்	773	-
கட்டிட சீரமைப்பு நிதி	948	-
மிகுதியில் உள்ள மொத்த நிதி மற்றும் உபகரணங்கள்	**16,244**	**14,425**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 2020	**2020**	**2019**
குறிப்பு 14 - மூலதன மானியத்தின் மீதான முதலீடு	**ரூ. '000**	**ரூ. '000**
மூலதன வாக்குகள் செலவு		
அனர்த்த முகாமைத்துவ நிலையம் - பணியாளர்களின் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி	972	3,000
மாவட்ட அளவில் தணிப்பு திட்டங்களை செயல்படுத்துதல்	36,009	105,498
வெள்ளம் தொடர்பான அவசர உபகரண கொள்வனவு	4,338	54,693
அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சமூகத்தின் தயார்நிலை	4,428	16,700
அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சமூகத்தின் விழிப்புணர்வு	5,995	16,202
இலங்கைக்கான பல்வகை ஆபத்து அபாய சுயவிவரத்தை உருவாக்குதல்	-	8,450
வெள்ளம், நிலச்சரிவு மற்றும் D R பொறிமுறையின் திறனை வலுப்படுத்துதல்	-	10,996
அபிவிருத்தியினுள் அனர்த்த அபாய குறைப்பை ஒன்றிணைத்தல்	1,909	4,414
மொத்த செலவு	**53,651**	**219,953**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 2020	**2020**	**2019**
	ரூ.'000	**ரூ.'000**
குறிப்பு 15 - வருமானம்		
மீளவரும் செலவினங்களுக்கான மானியம்	244,979	280,550
மொத்தம்	**244,979**	**280,550**

பொது திறைச்சேரியிலிருந்து பெறப்பட்ட தொடர்ச்சியான செலவினங்களுக்கான மானியம் LKAS 20- அர மானியங்களுக்கான கணக்கு மற்றும் அரசாங்க உதவியை வெளிப்படுத்துதல் என்ற வகையில் இனங்காணப்பட்டுள்ளது. அத் தரணியமங்களின்படி, மானியங்கள் பெறப்படும் என்று நியாயமான உத்தரவாத கிடைக்கும் வரை அரசாங்க மானியங்கள் இனங்காணப்படக் கூடாது. ஆகவே, DMC யினால் 2019 டிசம்பர் 3 ஆம் தேதி வரையிலான தொடர்ச்சியான மானியங்கள் பெறுவதை மாத்திரமே அதன் வருமானமா காட்டியுள்ளது. ஆனாலும் வருமானத்தின் மீதான செலவுகள் நிகழ்ந்த அடிப்படையில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பு 16– ஏனைய வருமானம்	**ரூ.'000**	**ரூ.'000**
ஆக்ஸ்ஃபாமில் இருந்து உதவி	385	691
UNDP இன் உதவி	1,302	260
உலக உணவுத் திட்டத்தின் உதவி	6,368	-
ADPC இன் உதவி	250	-
தகவல் தொழில்நுட்பம் தொடர்பான உபகரணங்கள் கணக்கு	188	-
டெண்டர் டெபாசிட்கள் - திரும்பப் பெற முடியாதவை	17	10
இதர வருமானம்	230	1,337
மூலதன மானியங்கள் மீதான கடன் தள்ளுபடி (துணை குறிப்பு - 16:1)	121,260	136,705
WHO இன் உதவி	11,983	2,410
ஜனதாக்ஷனாவின் உதவி	2,049	-
நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டத்திற்கு UNDP யின் உதவி	1,100	-
செண்டாய் கட்டமைப்பிற்கு UNDP இன் உதவி	-	981
தரை மட்டத்திற்கான உருவகப்படுத்துதல் பயிற்சிகளை உருவாக்க UNDP இன் உதவி	296	-
NDRSC இன் உதவி	2,317	4,112
CRIWMPக்கான DM அமைச்சகத்தின் உதவி	489	842
பாடசாலை சுனாமி திட்டத்திற்கு UNDP இன் உதவி	639	61
திட்ட நன்கொடைகளை திரட்டுவதில் இருந்து உதவி	-	1,187
தணிப்பு திட்டங்களின் 1% நிர்வாகச் செலவைப் பயன்படுத்துவதற்கான வருவாய் அங்கீகாரம்	55	3,449
ஆசிய பசிபிக் கூட்டணியின் உதவி	238	-
சொத்துக்களை அகற்றுவதில் லாபம்	11	-
மொத்தம்	**149,197**	**152,045**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 2020

குறிப்பு 16 - ஏனைய வருமானம்

துணை குறிப்பு - 16:01 சொத்துக்களின் மூலதன மானிய குறைவடைதல்

வழங்கப்பட்ட சொத்துக்கள்	01.01.2020 மொத்த செலவு	ஆண்டின் சேர்த்தல்/முதலீடு	முந்தைய ஆண்டு சரிசெய்தல்	31.12.2020 மொத்த செலவு
	ரூ. '000	**ரூ. '000**	**ரூ. '000**	**ரூ. '000**
சுனாமி மற்றும் முன் எச்சரிக்கை கோபுரங்கள்	426,287			426,287
அலுவலக உபகரணங்கள்	5,916			5,916
தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள்	559			559
மோட்டார் வாகனங்கள்	259,413			259,413
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	1,547,757			1,547,757
கணினிகள் மற்றும் துணைக்கருவிகள்	66,763			66,763
மோட்டார் வாகனங்கள் - ஏனைய திறைசேரி	31,675			31,675
மொத்தம்	**2,338,370**	**-**	**-**	**2,338,370**

மதிப்பு குறைவடைதல்	01.01.2020 இல் ஒட்டுமொத்த இருப்பு	ஆண்டிற்கான மதிப்பு குறைவடைதல்	முந்தைய ஆண்டு சரிசெய்தல்	31.12.2020 இல் ஒட்டுமொத்த இருப்பு
மோட்டார் வாகனங்கள் ICET	259,413	-	-	259,413
சுனாமி மற்றும் முன் எச்சரிக்கை கோபுரங்கள் ICET	175,842	21,314	-	197,156
கணினிகள் மற்றும் துணைக்கருவிகள் ICET	50,286	6,676	-	8,962
அலுவலக உபகரணங்கள் ICET	5,732	184	-	5,916
தொலைத்தொடர்பு உபகரணங்கள் ICET	1,256,359	92,073	-	1,348,431
தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் ICET	503	56	-	559
மோட்டார் வாகனங்கள் திறைசேரி ஏனையவை	30,718	957	-	31,675
மொத்தம்	**1,778,853**	**121,260**	**-**	**1,900,112**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 2020

குறிப்பு 17 - நிர்வாக செலவுகள்	2020 ரூ. '000	2019 ரூ. '000
தேய்மானம்		
முப்படையினர் விடுதி கட்டிடம்	13	-
கணினிகள்	7,772	9,342
நிலஅளவை ஆணையாளர் GIS தரவு மதிப்பு குறைவடைதல்	856	856
அலுவலக உபகரணங்கள்	4,392	3,853
வாகனம்	35,569	35,569
தளபாடங்கள் & பொருத்துதல்கள்	1,178	1,205
மென்பொருள் மதிப்பு குறைவடைதல்	593	593
சுனாமி மற்றும் முன் எச்சரிக்கை கோபுரங்கள்	21,366	21,366
தொலைத்தொடர்பு உபகரணங்கள்	93,032	107,839
வாகன காப்புறுதி	1,119	899
வாகன பழுது	5,474	7,288
வாகன சேவை, பராமரிப்பு மற்றும் ஏனையவை	5,364	7,906
ஆலை இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் பராமரிப்பு	4,825	21,287
கட்டிட பராமரிப்பு	1,799	-
தனிப்பட்ட ஊதியங்கள்		
சம்பளம் மற்றும் ஊதிய செலவு கணக்கு	124,550	116,580
ஓட்டுனர்களுக்கு சீருடை கொடுப்பனவுகள்	156	152
மேலதிக நேர கொடுப்பனவுகள்	19,373	17,120
DMC இன் EPF பங்களிப்பு (12%)	18,813	18,185
ஏனைய கொடுப்பனவுகள்	31,909	36,692
டிஎம்சியின் ETF பங்களிப்பு (3%)	4,703	4,546
ஓய்வூதியப் பணிக்கொடை வழங்குவதற்கான ஏற்பாடு	8,929	6,770
AMC கொடுப்பனவுகள்	72	175
ஏனைய செலவுகள்	838	410
மின்சாரம் மற்றும் நீர்	11,139	12,018
பாதுகாப்பு சேவை	1,239	1,283

சட்ட கட்டணம்	-	16
போக்குவரத்து கட்டணம்	43	92
துப்புரவு சேவை	1,778	1,300
வாடகை மற்றும் உள்ளூர் வரிகள்	1,143	858
IMC கொடுப்பனவுகள்	131	267
நேர்காணல்கள் தொடர்பான செலவுகள்	-	124
அஞ்சல் & தொலைத்தொடர்பு	16,015	18,032
விளம்பரம்	123	126
மொழிபெயர்ப்பு கட்டணம்	152	346
வருடாந்திர கணக்காய்வு கட்டணம்	465	539
வழங்கல்கள்		
தேநீர் செலவுகள்	746	834
அச்சிடுதல், எழுதுபொருள் & அலுவலகத் தேவைகள்	7,013	11,083
செய்தித்தாள்கள் மற்றும் ஏனைய	133	170
எரிபொருள் செலவுகள்	9,496	10,262
பயணம் மற்றும் வாழ்வாதார செலவுகள் - வெளிநாட்டு	860	3,333
பயணம் & வாழ்வாதார செலவுகள்- உள்நாட்டு	6,992	9,063
மொத்தம்	**450,163**	**488,379**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள் - 2020	**2020**	**2019**
	ரூ. '000	**ரூ. '000**
குறிப்பு 18 - ஏனைய செலவீனங்கள்		
ஆக்ஸ்பாம் உதவியிலிருந்து செலவு	385	691
UNDP உதவியிலிருந்து செலவு	-	260
தகவல் தொழில்நுட்பம் தொடர்பான உபகரணங்கள் A/C	188	-
WHO இலிருந்து செலவு	1,348	2,410
SFDRR இலிருந்து செலவு	-	981
NDRSC இலிருந்து செலவு	2,317	4,114
CRIWMP இன் செலவு - DM அமைச்சகத்திலிருந்து நிதியளிக்கப்பட்டது	489	732
பாடசாலை சுனாமி திட்டம் -கட்டம் I UNDP இலிருந்து நிதியளிக்கப்பட்டது	639	61
சிம்போசியம் திட்டம் 2020 செலவுகள் - UNDP இலிருந்து நிதியளிக்கப்பட்டது **	1,808	-
ஆசிய பசிபிக் அலையன்ஸ் (A-PAD) உதவிக்கான செலவு	238	-
பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக்கான WFP நிதிகளை செலவு**	2,000	-
பாடசாலை சுனாமி திட்டம் - இரண்டாம் கட்டம் UNDP இலிருந்து நிதியளிக்கப்பட்டது	1,302	-
மொத்தம்	**10,714**	**9,249**

பணிப்பாளர் நாயகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்துக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பில் 2018ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 12வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள கருத்து

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2020 டிசெம்பர் 31 ஆந் திகதியிலான நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியில் நிறைவடைந்துள்ள வருடத்துக்கான நிதி செயலாற்றுதிறன் கூற்று, உரித்து மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியில் நிறைவடைந்த வருடத்துக்கான நிதிப் பாய்ச்சல் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள், சுருக்கமாக காட்டப்பட்டுள்ள முக்கிய கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2020 டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த வருடத்துக்கான நிதி கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154 (10 உறுப்புரையுடன் திருத்தப்பட வேண்டிய 2018ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையினை குறிப்பிட்ட காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பேன்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, அனர்த்த முகாமைத்து நிலையத்தின் நிதிக் கூற்றுக்களின் மூலம் 2020 டிசெம்பர் 31 ஆந் திகதியிலான நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் நிறைவடையும் வருடத்துக்கான அதன் நிதி செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை அரசாங்கத்தின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது கருத்தாகும்.

1.2 முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படை

(அ) முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ளபோதிலும், தற்போது பயன்படுத்தப்படும் ரூ.33,918,887 கிரயத்தைக் கொண்டுள்ள 03வகை சொத்துக்களின் பயனுறுதிமிக்க ஆயுட்காலத்தை மதிப்பீடு செய்து, மீண்டும் மீளாய்வு செய்து, இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 03இன் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 19இன் பிரகாரம், ஊழியர் நன்மை (Actuarial Valuation Method) ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், நிறுவனமானது ரூ.47,970,000 பணிக்கொடை ஒதுக்கீட்டை நியமத்திலான விதிமுறைக்கு அமைய மேற்கொள்ளவில்லை.

(இ) நிலையத்தினால் நிறைவேற்றப்படும் முக்கிய பணிகளான அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பொதுத்திறைசேரியினாலும் ஏனைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களினாலும் மூலதனம் வழங்கப்பட்டுள்ளபோதிலும், குறிப்பிட்ட நன்கொடைகளின் கிடைப்பனவு மற்றும் குறிப்பிட்ட செலவுகளை மேற்கொள்ளுதல் தொடர்பிலான கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

திறைசேரியின் நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்படும் மூலதன செலவுகளின் தன்மைக்கு ஏற்ப கிரமமாக கணக்குகளிலிருந்து பதிவழிப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாது, வருடாந்தம் மேற்கொள்ளப்படும் செலவுகள் மூலதன நன்கொடை கணக்கிலிருந்து குறைக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. மீளாய்வு வருடத்திலும் கடந்த வருடத்திலும் இவ்வாறு மூலதன நன்கொடைகளிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டுள்ள நிதித்தொகையானது முறையே ரூ.53.6 மில்லியன் மற்றும் ரூ..219.9 மில்லியன் ஆகும். மேலும், மீளாய்வு ஆண்டு இறுதியில் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள ரூ.16.24 மில்லியன் மூலதன வழங்கல் திணிவு / தேறிய சொத்துக்களின் கீழ் காட்டப்படவில்லை என்பதுடன், மீண்டும் மீள்செலுத்தும் பொறுப்பின்றி நீண்டகால நடைமுறை பொறுப்புக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

1.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2020ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2020 ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறுதல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான எனது கருத்தில் ஏனைய விடயங்கள் உள்ளடங்குவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பில் எந்தவிதமான உறுதிப்படுத்தலையோ கருத்தினையோ வெளிப்படுத்தவில்லை.

இக்கணக்காய்வு அறிக்கையிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய தகவல்கள் மீது மற்றும் என்னால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஏனைய தகவல்கள் அளவுசார் ரீதியில் பிழையாகக் காட்டப்பட்டுள்ளதாக நான் தீர்மானிக்கும் பட்சத்தில், அது தொடர்பில் நான் அறிக்கையிடுதல் அவசியமானதாகும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

1.4 நிதிக் கூற்று தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் நிருவாக தரப்பினரது பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயார் செய்தல், நியாயமான வகையில் முன்வைத்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவுசார் போலியான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களளை தயார் செய்யக்கூடியவாறு தேவையான உள்ளக நிருவாகத்ததை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்கையில், முகாமைத்துவத்தின் தொடர்ச்சியான முன்னெடுப்பினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதுடன், முகாமைத்துவமானது நிலையத்தை கலைக்க தீர்மானிக்குமெனில் அல்லது ஏனைய மாற்றுவழி காணப்படாதவிடத்து திட்டத்தினை நிறுத்துவதற்கு தீர்மானிக்கும் பட்சத்திலன்றி, தொடர்ச்சியான முன்னெடுப்பினை அடிப்படையாகக் கொண்டு கணக்கு வைத்தல் மற்றும் நிலையத்தின் தொடர்ச்சியான முன்னெடுப்புக்கு ஏற்புடைத்தான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பில் பரிசீலிக்கும் பொறுப்பினை நிருவாகத் தரப்பினர் ஏற்றல் வேண்டும்.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம், நிலையத்தின் வருடாந்த மற்றும் நடப்புசார் நிதி கூற்றுக்களை தயார் செய்வதற்கு ஏற்ற முறையில்,

தமது வருமானம், செலவு, சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை வைத்திருத்தல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி மற்றும் பிழைகள் காரணமாக ஏற்படும் அளவுசார் போலிக் கூற்றுக்கள் அற்றவையென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையினை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைகின்றபோதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வினை மேற்கொள்கையில் இவை எப்போதும் அளவுசார் போலியான கூற்றுக்களை வெளிப்படுத்துகின்றன என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையர்து. மோசடி அல்லது பிழைகள் தனியாக அல்லது கூட்டாக தாக்கம் செலுத்துவதன் காரணமாக அளவுசார் போலியான கூற்றுக்கள் ஏற்படக்கூடியபோதிலும், அதன் அளவுசார்தன்மையானது இந்நிதி அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பயன்பாட்டாளர்களினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில் தீர்ப்பு மற்றும் தொழில்ரீதியான ஐயப்பாட்டுடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. என்னால் மேலும், முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு கருத்திற்கான அடிப்படையை அமைக்கையில், மோசடி அல்லது பிழைகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படகூடிய அளவுசார் போலியான கூற்றுக்கள் ஏற்படுவதற்கான அபாயத்தை அடையாளம் காணுவதற்கும் சந்தர்ப்பத்துக்கேற்ப பொருத்தமான கணக்காய்வு ஏற்பாடுகள் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளன. பிழையாகக் காட்டுவதனால் ஏற்படும் அளவுசார் போலியான கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தை விட மோசடியினால் ஏற்படும் தாக்கம் அதிகமாக அமைவது, அவை போலியான ஆவணங்களை தயார் செய்தல், வேண்டுமென்றே தவிர்த்தல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக நிருவாகத்தை தவிர்த்தல் போன்ற விடயங்கள் காரணமாகவாகும்.

உள்ளக நிருவாகத்தின் திறன் தொடர்பில் கருத்தில் தெரிவிக்கும் நோக்கில் அல்லாதபோதிலும், சந்தர்ப்பத்துக்கேற்ப, பொருத்தமான கணக்காய்வு ஏற்பாடுகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக நிருவாகம் பற்றிய புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீட்டின் நியாயம் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் பாராட்டுக்கு உட்படுத்தப்பட்டன.

சம்பவம் அல்லது நிலைமைகள் காரணமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்ச்சியான நிலைப்பாடு தொடர்பில் அளவுசார் ஐயப்பாடு உள்ளதா என்பது குறித்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்கான நிறுவனத்தின தொடர்ச்சியான முன்னெடுப்பு பற்றிய அடிப்படையின் ஏற்புடைத்தன்மை தீர்மானிக்கப்பட்டுள்ளது. அளவுசார் ஐயப்பாடு காணப்படுவதாக நான் தீர்மானிக்கும் பட்சத்தில் நிதிக் கூற்றுக்களில் இது தொடர்பிலான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டுமென்பதுடன், இந்த வெளிப்படுத்தல்கள் போதியதாக அமையாத பட்சத்தில், எனது கருத்தினை முன்வைத்தல் வேண்டும். எவ்வாறெனினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ச்சியான நிலைப்பாடு நிறைவடையக் கூடும்.

நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்துக்கு ஏதுவான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான வகையிலும் நியாயமான வகையிலும் உள்ளடங்கியுள்ளதாகவும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களில் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் பாராட்டுக்கு உட்படுத்தப்பட்டது.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்டுள்ள முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், முக்கிய உள்ளக நிருவாக குறைவாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிருவாகத் தரப்பினரை அறிவுறுத்துகிறேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடு பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1. 2018 ஆம் ஆண்டு 19ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கு ஏற்ப, இந்த அறிக்கையின் 1.2 பந்தியில் குறிப்பிடப்படும் அவதானிப்புகளுக்கு உட்பட்டதாக கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசீலனையில் வெளிப்படுவதன் பிரகாரம் உரிய நிதி அறிக்கைகளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னெடுத்துள்ளது.

2.1.2. 2018 ஆம் ஆண்டு 19ஆம்இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைக்கு ஏற்ப நிலையத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இசைந்தொழுகுகின்றன.

2.1.2. 2018 ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(உ) (111) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாட்டுக்கு ஏற்ப கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்டுள்ள விதப்புரைகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன..

2.2. பின்பற்றப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் போதுமான உண்மைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதன் அடிபடையில் பின்வரும் கூற்றுக்களை முன்வைப்பதற்கு போதுமானதென எனது கவனத்துக்கு வரவில்லை.

2.2.1. 2018 ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளுக்கு அமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிருவாக சபையின் குறிப்பிட்டதொரு அங்கத்தவரும் சாதாரண வியாபார நிலைமையைத் தவிர அனர்த்தமுகாரமத்துவ நிலையம் தொடர்பான எந்தவொரு உடன்படிக்கையிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு கொண்டிருக்கவில்லை.

2.2.2 2018 ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(உ) பிரிவின் படி அனர்த்தமுகாமைத்துவ நிர்வாக குழுவால் , பின்வரும் விடயங்களைத் தவிர குறிப்பிட்டதொரு எழுத்துமூலமான சட்டத்துக்கு முரணான எந்த நடவடிக்கையும் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய எழுத்துந் சட்டமும் தெரிவிக்கப்படவில்லை.

சட்டதிட்டங்கள் / பணிப்புரைக்கான தொடர்	அவதானிப்புக்கள்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவை (i) நி.பி.1049 (1)	நட்டமொன்று ஏற்பட்டதன் அளவு. காரணம் மற்றும் பொறுப்புக்கூறவேண்டியவர்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஆரம்ப விசாரணையை ஆரம்பிக்க வேண்டியபோதிலும், 2018 முதல் 2020 ஓகஸ்ட் வரையில் 11 வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பில் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை
(ii) நி.பி.104(3)	நட்டம் தொடர்பிலான முழுமையான அறிக்கையை முன்வைப்பதற்கு 07 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படும் பட்சத்தில் முதனிலை அறிக்கையினை அனுப்ப வேண்டிய போதிலும், 15 வாகன விபத்துக்கள் தொடர்பில் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.
(iii) நி.பி. 104 (4)	2015 முதல் 2017 வரையிலான 33 வாகன விபத்துக்கள் தொடர்பிலும் 2018 முதல் 2020 ஓகஸ்ட் வரையிலான 31 வாகன விபத்துக்கள் தொடர்பிலும் 2021 பெப்ரவரி 17 வரையில் முழுமையான அறிக்கை முன்வைக்கப்படவில்லை.
(iv) நி.பி.105	2019 முதல் வருடாந்த கையிருப்பு மதிப்பீட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள காலம் கடந்துள்ள மற்றும் அழிக்க வேண்டிய 409 பொருட்களின் பற்றாக்குறை மற்றும் காணாமற்போயுள்ள பண்டங்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.
(v) நி.பி.110	சேதம் மற்றும் நட்ட ஆவணம் இற்றைப்படுத்தப்படவில்லை.
(ஆ) 2003 ஜூன் மாதம் 02ஆந் திகதி 12ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை	நிலையத்தினால் 2014 முதல் 2017 வரையிலான வருடாந்த அறிக்கைகள் 2020 மார்ச் 30ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாட்டுக்கு ஏற்ப சட்டத்தில் குறிப்பிடப்படும் அவதானிப்புக்களைத் தவிர நிலையத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் குறிப்பிட்ட காலப்பகுதியில் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பயன்படுத்தப்படவில்லை.

விரல் அடையாள கருவிகளை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வு ஆண்டில் திசெம்பர் மாதம் ரூ.1,052,460 செலவிடப்பட்டுள்ளது. பெறுகை வழிகாட்டல் கோவையில் 8.9.1(ஆ)இற்கு ஏற்ப, முறையான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. கருவிகளை பொருத்தி பயன்படுத்துவதற்கு முன்னர், ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளாது மொத்த நிதித்தொகையினையும் ஒப்பந்ததாரருக்கு செலுத்துதல் கருத்து முரண்பாட்டுக்கு வழிகோலுகின்றதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

3. ஏனைய விடயங்கள்

(அ) வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு உரித்தான காணியொன்றில் ரூ.1034.39 மில்லியன் செலவில் நிலையத்தின் தலைமை அலுவலகத்தின் கட்டிடம் 2010ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டபோதிலும். இக்காணியையும் கட்டிடத்தையும் நிலையத்துக்கு சட்டரீதியாக பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் மீளாய்வு ஆண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்யப்படவில்லை.

(ஆ) தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தின் தயாரிப்பு பணிகள் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதுடன், மனித வள கொள்கை தயாரிப்பு நடவடிக்கைகள் 2021 மார்ச் 30 வரையில் நிறைவுசெய்யப்படவில்லை.

(இ) 2020 பெப்ரவரி மாதம் 13ஆந் திகதிய அனர்த்த அபாய தணிப்பு கருத்திட்டம் தொடர்பிலான ஆலோசனை தொகுப்பில் (1) பந்தியின் பிரகாரம், தெரிவுசெய்யப்படும் கருத்திட்டம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட அபாயத்தை தணிப்பதற்குப் போதுமான பௌதீக மற்றும் நிதி வளங்கள் இல்லையென குறிப்பிட்ட நிறுவனங்களினால் உறுதிசெய்யப்பட்டு கோரிக்கை முன்வைக்கப்படுதல் வேண்டும். எனினும், அத்தகையதொரு கோரிக்கையின்றி ரூ.29,958,885 நிதி ஏற்பாடு பல்வேறு கருத்திட்டங்களுக்காக 26 அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) கருத்திட்டமொன்று நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், இது சிறப்பாக ஒப்பந்தத்தின் பிரகாரம் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தொழிநுட்ப உத்தியோகத்தர் அல்லது உரிய உத்தியோகத்தர் சான்றுரை வழங்க வேண்டியபோதிலும், மீளாய்வு ஆண்டில் ரூ.13,782,677 பெறுமதியான 11 கருத்திட்டங்களின் இறுதி சான்றுரை கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை என்பதுடன், வருடத்தினுள் முன்னெடுக்கப்டப்டுள்ள ரூ.2,350,000 நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டுள்ள 03 கருத்திட்டங்களின் ஒப்பந்தங்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை.

(உ) இலங்கையைச் சுற்றி 14 மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ள அபாய முன்னெச்சரிக்கை கம்பங்களின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக தனியார் நிறுவனமொன்றுடன் ரூ.134,746,418 நிதித்தொகையிலான ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியானது குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்படாமையால், கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் 02(A) 01 பந்தியின் பிரகாரம், புனரமைப்பு மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டிய பகுதிகள் பற்றிய விபரங்கள் ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு முன்னர், நிரம்பலாலளருக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், இவ்வாறு தகவல்கள் வழங்கப்படாமையால், நிரம்பலாளரினால் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு பணிகள் உண்மையாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது குறித்து உறுதிப்படுத்தப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கணக்காய்வில் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களுக்கு ஏற்ப தற்போது ரூ.89,764,707 செலவு உள்ளபோதிலும், 77 கம்பங்களிலும் செய்மதி தொழிநுட்பம் செயலிழந்துள்ளமையால், இப்பணியினால் எதிர்பார்க்கப்பட்டுள்ள 77 கம்பங்களை இயங்கு நிலையில் முன்னெடுக்கும் செயற்பாடு வெற்றிபெறவில்லை.

(ஊ) 2005 ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தை திருத்துவதற்கு 2008 ஆம் ஆண்டு முதல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும், 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆந் திகதி வரையிலும் குறிப்பிட்ட திருத்தங்கள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு முன்வைக்கப்படவில்லை.

(எ) அனர்த்த முகாமைத்துவத்துக்கான பல்இடர் அபாய தோற்றப்பாடுகளை தயார் செய்வதற்காக 2016ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்காக திறைசேரியிடமிருந்து ரூ.247 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதில் ரூ.201 மில்லியன் நிதி இப்பணிக்காக கிடைக்கப்தெபற்றுள்ளது. எனினும், இப்பணி நிறைவேற்றப்படவில்லை என்பதுடன், கிடைக்கபெற்றுள்ள நிதியில் ரூ.53 மில்லியன் குறிப்பிட்ட நோக்கத்துக்கு மாறாக செலவிடப்பட்டுள்ளது.

(ஏ) 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆந் திகதியிலான அமைப்பின் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்குழுவினரின் எண்ணிக்கை 465 ஆகக் காணப்படுகின்றபோதிலும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாட்குழுவினரின் எண்ணிக்கை 304ஆகக் காணப்பட்டமையால், 161 வெற்றிடங்கள் உருவாகியிருந்தன. எனினும், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது மனித வள திட்டத்தை திருத்துவதற்கு நிலையம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
டபிள்யு.பீ.சி.விக்ரமரத்ன